Registered as a News Paper

பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 15.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 15 | வெள்ளி - 43 | 24 - 30 டிசம்பர் - 2004




## மீண்டும் யுத்தம் வருமா...?

## படைநகர்வுக்கு முன்னர்...

## மக்கள் போராட்டம்

இன்று பல ஆயிரக்கணக்கான வீடுகளில் ஒலித்துக் கொண்டிருக்கும் சுப்ரபாதத்திற்கு சொந்தக்காரியான எம். எஸ். சுப்புலட்சுமி அண்மையில் இம்மண்ணைவிட்டு மறைந்து இசையுலகிற்கு ஓர் பேரிழப்பை ஏற்படுத்தியுள்ளார்.

1916.09.16ஆம் திகதி மதுரையில் சண்முக வடிவு அம்மாள் ராமசாமி அய்யருக்கு மகளாகப்பிறந்த சுப்புலட்சுமி அவர்கள். இசை என்பது அனைவரையும் வசீகரிக்கும் தன்மை கொண்டது என்பதை மெய்ப்பித்தவர் இசைக்குடும்பத்தில் பிறந்தவர்தான் எம்.எஸ். சுப்புலட்சுமி, தாயாரான வடிவு அம்மா ஒரு வீணைக் கலைஞா. எனவே சுப்புலட்சுமியின் முதல் குருவே அவரின் தாய்தான்.

மிருதங்க உலகில் புகழ்பெற்ற மிருதங்கச் சக்கரவர்த்தியான புதுக்கோட்டை தட்சணாமூர்த்தியின் மணிவிழாவில் எம்.எஸ். சுப்புலட்சுமியின் பாட்டுக்கச்சேரி நடைபெற்றது. 1935இல் நடைபெற்ற இந்நிகழ்வு



## இசையரசி சுப்புலட்சுமியின் மறைவு ஒரு பேரிழப்பு

தான் இசைச் சுரங்கம் சுப்புலட்சுமி வாழ்வில் திருப்புமுனையை ஏற்படுத்தியது.

அதே ஆண்டு மைசூர் மகாராஜாவின் அரசவையில் திருக்கோகர்ணம் ரங்கநாயகி அம்மாள் மிருதங்கத்துடன் பாடியது அவரது மிகச் சிறந்த கச்சேரிகளுள் ஒன்று. அதனைத் தொடர்ந்து தென்னிந்தியாவின் அனைத்து இடங்களிலும் சுப்புலட்சுமியின் இசை நிகழ்வுகள் நடைபெறச் செய்தன. கும்பகோணத்தில் பன்னிரண்டு ஆண்டுகளிற்கு ஒரு முறை நடைபெறும் மகாமகம் விழாவில் பாட்டுக் கச்சேரியும் நடைபெறுவது வழக்கம். 1926ஆம் ஆண்டு நடைபெற்ற கச்சேரிக்கு ஒரு 10 வயதுச் சிறுமி கச்சேரி செய்ய மேடையில் கச்சேரி ஏற்பாட்டாளர்களால் அமர்த்தப்பட்டிருந்தாள். கச்சேரிக்கு வந்திருந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் முகங்களும் சோபை இழந்தன. இந்தச் சிறுமியால் எவ்வாறு பாடமுடியும் என வினாவினர். அலட்சியமாக இருந்தனர். ஆனால், அந்தச் சிறுமியின் குரல் கணீரென ஒலித்தது. ரசிகர்களின் கைதட்டல் விண்ணை அதிரச்செய்தது. "என்ன இனிமையான குரல்", "சிரமமான கர்நாடக இசைப்பாடலை சரளமாகப்பாடுகிறாள்" என புகழ்ந்தது மட்டுமன்றி அவரின் பாடலுக்கு உள்ளத்தை பறிகொடுத்துச் சென்றனர். அவ்வாறு பாடி மக்களை வியப்பில் ஆழ்த்திய சிறுமி வேறுயாருமல்ல. இந்தியாவின் புகழ்பெற்ற 'பாரத ரத்னா' விருது பெற்ற எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் தான். மேற்படி கச்சேரிக்கு ஒழுங்கு செய்திருந்தவர் அப்போதைய சினிமா இயக்குநர் கே.சுப்பிரமணியம் அவர்கள். இந்த மேடைப்பாடலுடன்தான் சுப்புலட்சுமி அவர்களை சினிமா நட்சத்திரம் ஆக்கினார்.

ஏற்கனவே தன்னுடைய கச்சேரியில் பாடி புகழ் சேர்த்த சுப்புலட்சுமியை சினிமாவில் நடிக்கவைக்கவேண்டுமென விரும்பினார் இயக்குநர் சுப்பிரமணியம் அவர்கள். அதற்காக மதுரைக்கு வந்து சுப்புலட்சுமியின் தாயாரிடம் கதைத்தபோது முதலில் உடன்பட மறுத்த தாயார் பின்னர் ஒருவாறு சம்மதம் கொடுத்தார்.

இதன்படி எம்.எஸ். சுப்புலட்சுமி நடித்த முதல்படம் சேவாசதனம் ஆகும். இப்படம் அக்காலத்தில் மிகப் பெரிய வெற்றிப்படமாக ஓடியது. இதனால் இவருடைய சினிமா வாழ்வு பிரகாசமானதாகிவிட்டது.

தனது குடும்பத்துக்கும் தனது முன்னேற்றத்திற்கும் துணையாக இருந்த சட்டவாளர் சதாசிவம் என்பவரை திருமணம் செய்தார். சென்னையை அடுத்துள்ள திருநீர்மலையில் 1940ஆம் ஆண்டு யூலை 10ஆம் திகதி சுப்புலட்சுமிக்கு திருமணம் நடைபெற்றது. சதாசிவம் ஏற்கனவே திருமணமாகி மனைவியை இழந்தவர் இவருக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். இந்த இரண்டு பிள்ளைகளையும் தன்பிள்ளைகளாக வளர்தார் சுப்புலட்சுமி அவர்கள். அத்துடன் திருமணத்தின் பின் சினிமாவில் நடிப்பதில்லை என்ற முடிவையும் எடுத்தார். இவ்வாறான காலப்பகுதியில் 'கல்கி' பத்திரிகையை தொடங்க சதாசிவம் மூலதனம் இல்லாது தடுமாறிக்கொண்டிருந்த காலத்தில் எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களை சகுந்தலை படத்தில் நடிக்க வருமாறும் ரூபா 40,000 வழங்குவதாகவும் கோரினார் இயக்குநர். படத்தில் நடிக்க தயங்கினாலும் 'கல்கி' பத்திரிகை தொடங்குவதற்காக சகுந்தலையில் நாரதர் வேடத்தில் நடிக்க சம்மதித்தார் சுப்புலட்சுமி அவர்கள். இப்படமும் பாரிய வெற்றி பெற்றதுடன் பாடல்களும் புகழ்பெற்றன. அதனால் கிடைத்த 40,000 ரூபா முதலில் தொடக்கப்பட்டதுதான் 'கல்கி' பத்திரிகை.

திரையுலகிலும் இசையுலகிலும் புகழ்பெற்ற சுப்புலட்சுமி அவர்கள் கர்நாடகக் கச்சேரி நடத்தினார். இதன் மூலம் கர்நாடக சபையில் கச்சேரி நடத்திய முதல் தமிழர் என்ற பெருமையையும் பெறுகின்றார். இது 1966ஆம் ஆண்டு நடைபெற்றது.

இவர் பொதுப்பணிக்காக பல இசைக்கச்சேரிகளையும் நடாத்தியுள்ளார். சுப்ரபாதம் இவரின் புகழை மேலும் உலகிற்கு எடுத்தியம்பியது. கல்கத்தா பல்கலைக்கழகம் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது. ஆசியாவின் நோபல் பரிசு என்று கருதப்படும் பிலிப்பைன்ஸ் நாடு வழங்கும் "ரமாள் மக்சாய்" விருது எம்.எஸ். சுப்புலட்சுமிக்கு 1974இல் வழங்கப்பட்டது. இந்தியாவின் மிக உயர் விருதான "பாரத ரத்னா" விருது எம்.எஸ். சுப்புலட்சுமிக்கு 1998இல் மத்திய அரசு வழங்கியது. 1997இல் சதாசிவம் காலமானார். சதாசிவத்தின் மறைவினால் சிறகொடிந்த சுப்புலட்சுமி கச்சேரிசெய்வதை நிறுத்திவிட்டார்.

இப்படி இசையால் உலகில் கோடான கோடி இசை ரசிகர்களை தன் வசம் இழுத்த அந்த இசைப் பேரரசி மறைந்துவிட்டார் என்பது இசை உலகிற்குப் பேரிழப்பாகும்.

# காரசாரம்

## விததியாசமாக முயற்சி செய்வோம்!

ரசனை என்பது மனதுக்கு மனது வயதுக்கு வயது, இடத்துக்கிடம் வேறுபடுவதுண்டு, அப்படி இருந்தால்தான் அது உண்மையான படைப்பு. ஒரு புத்தகத்தைப் பலர் வாசிக்கிறார்கள், அதன் தன்மையை பலரும் பல கோணத்தில் அனுபவிப்பார்கள். எல்லோருக்கும் ஒரேமாதிரியான உணர்ச்சியைத் தோற்றுவிக்கும் புத்தகங்கள், நூல்கள், ஒளிப்படங்கள் ஒலிச்சித்திரங்கள் இருப்பதில்லை. உதாரணமாக தமிழர்களுக்கு உணர்வேற்றும் பாடல்கள் சிங்கள இனவாதிகளுக்கு எப்படியிருக்கும். ஒரு ரயில் விபத்து என்ற செய்தியை கேள்விப்படுகிறோம். அமெரிக்காவில் பயங்கர ரயில் விபத்து. இது எங்களுக்கு செய்திமட்டுந்தான். இந்தியாவில் ரயில் விபத்து. தென்பகுதியா? வடபகுதியா? என்பதில் ஆவல் இருக்கும். லண்டனில் ரயில் விபத்து, யாரும் இலங்கைத்தமிழர்கள் பாதிக்கப்பட்டனரா? என்பதைக் கவனிப்போம். கொழும்புப் பகுதியில் விபத்து. காரணத்தை ஆராய்வோம். வவுனியா நோக்கி வந்த ரயில் விபத்துக்குள்ளானது. இந்தச் செய்தி பலரை உலுக்கும் நம்மவர்கள் யாரும் வந்தார்களா என்பதை அறிய தொலைபேசிகளின் தொடர்பை நாடுவோரும் உண்டு, இப்படித்தான் நல்ல இலக்கியங்களும் கூட ஒரே உணர்வை ரசிகர்களுக்கு ஏற்படுத்துவதில்லை. புதிய புதிய அனுபவங்களைச் சிலர் அனுபவிக்கும்படி அமைந்திருக்கும் இதை இப்படிப்பாருங்கள். ஒரு திரைப்படத்தை முன்னமே பார்த்துவிட்ட ஒருவருடன் அமர்ந்து படம் பார்ப்பது எப்படியிருக்கும் அவர் வாயை மூடிக் கொண்டிருக்காது போனால்... புதிதாகப் பார்ப்பவருக்கு அது நரக வேதனையைத்தரும் "சீ வாயை மூடிக் கொண்டிரு கதை சொன்னாப் பாக்கிறதில சுவையில்ல... என்பார். சாதாரண பாமர மக்களுக்கும் தெரிந்த விடயம் இது.

ஏன் இவ்வளவும் சொல்கிறேன், என்றால் காரணமாகத்தான். ஒரு நூலை எழுதும் எழுத்தாளன் அதைக் கருவில் சுமந்து காலநேரம் பார்த்து பிரசவிக்கிறான். பல இடையூறுகளுக்கு மத்தியில் வளர்த்தெடுக்கிறான், பெயர் சூட்டிய தன் பிள்ளையைப் பலரும் பார்க்கவேண்டும் என்ற ஆவல் ஒரு தாய்க்கு இருப்பதிலிருந்து எந்தளவிலும் குறைவதில்லை. வெகு முயற்சியின் பின் அதை வெளியில் விடுகிறான். இதற்கென, வைத்தியசாலை (அச்சுக்கூடம்) மருத்துவர்கள் (வெளியீட்டாளர்) பெற்றார். உற்றார், நண்பர் என ஒரு கூட்டமே வேலை செய்யும்.

ஒரு நூல் வெளியீடு செய்வது மிக மிக முக்கியமான நிகழ்ச்சிதான். ஆனால், வாசகனுக்கும் அவனது நூலின் தன்மை உணர்வுக்கும் தடையாக நிற்பதைத்தான் அனுமதிக்க முடியவில்லை. ஒரு நூலைப் பலர் வாசித்து அதைப்பற்றி அறியமுன், ஓரிருவர் மட்டும் அதை வாசித்துவிட்டு அதைப்பற்றி தமது கண்ணோட்டத்தில் விபரிப்பது ஒரு மோசமான விளைவைத்தரும். ரசிகர்களின் சுயரசனைப் போக்கைத் தடுத்து தமது பார்வையினூடாக நூலை வாசிக்கச் செய்யும் மோசடி அது. அதிலும் சில நூல் வெளியீடுகளில் பார்வையாளர்கள்; ஏதோ வந்து விட்டோம்; எழுத்தாளர் நண்பர், வெளியிட்டு வைப்பர். அறிந்தவர், வந்திருப்பவர்கள் தேவைப்படக் கூடியவர்கள், எப்பிடிப்போகாமல் விடுறது என்ற நினைப்பில் வந்தவர்களாகவே உள்ளனர். ஆம் ஏறக்குறைய ஒரே மக்களை மீண்டும் மீண்டும் இந்நிகழ்வுகளில் காணலாம். ஒரு சீரான போக்கு இங்கு நிலவுவதும் உண்மை.

விமர்சனம், மதிப்பீடு, சிறப்புரை எனப்போகும் நிகழ்ச்சி நிரலில், தலைமையுரையிலிருந்தே புத்தகத்தை வாசிக்கத்தொடங்கிவிடுகிறார்கள். நிகழ்ச்சிகள் மூன்று முப்பதுக்கு ஆரம்பமாகும் எனக் குறித்திருந்தாலும் சுமார் நான்கு மணிக்கே ஆரம்பமாகிறது என்றால் தலைவர், வரவேற்புரை, வெளியீட்டுரை, மதிப்பீட்டுரைகள், சிறப்புரை, நன்றியுரை. ஏறக்குறைய ஏழு அல்லது எட்டு உரைகள் நிகழ்த்தவேண்டும். மதிப்புரைகள் செய்பவர்கள் புத்தகத்தை அக்குவேறு ஆணிவேறாக ஆய்வு செய்து எழுத்தாளர் போகிற போக்கில் எழுதிய சில வாக்கியங்களுக்கு அவர்களே அறிந்திராத வகையிலான தெளிவுரை, பொழிப்புரை, வியாக்கியானங்கள் போன்ற இத்தியாதி விடயங்களை தாள்களில் குறித்துக்கொண்டு வந்து தமது நேரத்துக்காகக் காத்திருப்பர். தலைவர் உரையில் புத்தகத்தைப் பற்றி மேலோட்டமாகத் தொடுவது போல் தொட்டு ஆழமூழ்கித் தலைமையுரையை செய்து முடிப்பார். அதன் பின் ஏற்கெனவே வந்து அமர்ந்துவிட்டவர்களுக்கு வரவேற்புரை நடைபெறும். ஒவ்வொருவராகப் பெயர் சொல்லிப்பட்டம் சொல்லி விலாவாரியாக முடிந்ததும், வெளியீட்டுரை இவரும் ஏன் வெளியிடுகிறோம் இதன் அவசியம் என்ன? என்பது பற்றிக் கூற அதன் அதாவது புத்தகத்தின் உள்ளிருந்தே தகவல்களை எடுப்பார் கோர்ப்பார், வியப்பார், முடிந்ததா? இனி சிறப்புரை. இவர் சமகால விடயங்களுடன், இவ்வெளியீட்டையும் அடக்கிப் பேச வேண்டுமே... எனவே புத்தகத்திலிருந்து மேலும் சில பகுதிகள் வெளிவரும் சிலவேளைகளில் கதைச்சுருக்கத்தையும் இவர் விசிறிவிடுவார். இப்போது வாசகருக்கு, பார்வையாளருக்கு புத்தகத்தைப்படிக்க வேண்டும் என்ற அவா சற்றுத் தணிந்து கொண்டு போகும். என்றாலும் புத்தகம் அரங்கிலிருப்பதால் கலியாண வீட்டில் அன்பளிப்புச் செய்யவேண்டிய கடப்பாடு போன்று ஒரு புத்தகத்தைக் கையில் வாங்கியும் விடுவர். சரி; இனி சிறப்புரையில் கவனம் குறைய வாங்கிய புத்தகத்தை மேலோட்டமாக மேய்வதில் பார்வையாளர்கள் ஆர்வமாக இருக்க, அடுத்து வருவது, மதிப்பீட்டுரை புத்தகத்தை எல்லோரும் ஓரளவு கையில் வைத்திருந்தாலும் அதன் அளவு, நிறம், அட்டைப்படம், வடிவமைப்பு, பக்கங்கள், எழுத்து என்பவற்றை கட்புலனற்றவர்களைக் கருத்தில் கொண்டு மதிப்பீட்டாளர் பெரியமனதுடன் வர்ணிப்பார். தொடர்ந்து பக்கம் பக்கமாக பேசிப்பேசிப் புரட்டிப் புரட்டி வாசித்தும் காட்டுவார். தனக்குப் பின்னால் இன்னுமிருவர் கஷ்டப்பட்டுச் சேகரித்த குறிப்புகளைக் கச்சிதமாகப் பேசக் காத்திருக்கிறார்கள், என்பதை அவர் வசதியாக மறந்தே போய்விடுவார். ஒலிவாங்கியும் கிடைத்து பார்வையாளர்களும் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில், அந்தப் புத்தகத்தையும் கடந்து அதனுடன் சம்பந்தப்படாத வேறு துறைகளையும் தொட்டு துரதிஷ்டவசமாக (பார்வையாளர்களின்) பேச்சாளர் வெளிநாடுகளையும் தரிசித்தவராக இருந்துவிட்டால்; அந்தந்த நாடுகளுக்கெல்லாம் தான் போய் வந்ததற்கான சான்றுகளையும் அடுக்கி, பார்வையாளர்களைத் தன் பேச்சுவன்மையால் புல்லரிக்க?! வைத்து விடுவார். பார்வையாளர்கள் இருக்கையிலேயே நெளிய ஆரம்பித்தபின், நேரமும் குறுகியபின் அடுத்த மதிப்பீட்டாளர் எழுவார், எல்லாந்தான் பேசியாகிவிட்டதே இனி இவரென்ன சொல்லப்போகிறார் என்றா பார்க்கிறீர்கள். நேரம் கடந்துவிட்டது, நான் பேச எதுவுமில்லை. எல்லாம் கூறப்பட்டுவிட்டது. என்று அவையடக்கத்துடன் ஆரம்பித்து, அடைமழை போல கொஞ்சமும் அசராமல் இவ்வளவு நேரமும் பேசப்பட்டவிடயங்களை இரைமீட்டு தனது நேரத்தை முடித்துக்கொள்வார். அப்பால் நன்றியுரை- விளைவு- வாங்கிய புத்தகத்தைப் பிரித்துப் பாராமலே மேசையில் அடுக்கி விடலாம். விடுகிறார்கள்.

புத்தகத்தை வெளியிடுங்கள் வெளியாகும் புதுப் புத்தகத்துக்கு விமர்சனம் வேண்டாமே அறிமுகம் செய்யுங்கள். ஒரு நூறு பேராவது வாசித்தபின் வாசகர் வட்டங்களை உருவாக்கி அதன் தரம் பற்றி விவாதியுங்கள். அதுவே ஆரோக்கியமானது. புத்தக வெளியீட்டு விழாக்களில் வெளியிடும் புத்தகத்தின் சாராம்சத்தை கூறவே கூடாது. அந்நிகழ்ச்சியில் தரமான இலக்கியச் சொற்பொழிவு ஒன்றை ஏற்பாடு செய்யலாம். அல்லது சமகால அரசியல், சமூக முன்னேற்றம், கல்வியியல், பொருளாதார அபிவிருத்தி, உற்பத்திகள் பற்றி நாட்டின் அபிவிருத்தி பற்றி, சட்ட ஒழுங்குகள், வீதி விபத்துகளைத் தடுப்பது பற்றி- ஏதாவது பொது விடயங்கள் பற்றிய உரைகள், கலைநிகழ்ச்சிகள் என்பவற்றை ஏற்பாடு செய்தால், குறிப்பிட்ட மக்கள் மட்டும் கலந்துகொள்ளும் இந்நிகழ்வுகளில் ஆசிரியர் மாணவர், பொது மக்கள் என அனைவரும் கலந்துகொள்வதுடன், வாசகர்களை வாசிக்கத்தூண்டும் நன் முயற்சியும் கைகூடாதா? புத்திபூர்வமாக சிந்திப்பதை சுயரசனையைத் தடை செய்யலாமா? மாறுவோம்.

மாயா

# மீண்டும் ஒரு யுத்தம் வருமா?

கடந்த வெள்ளியிரவு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழு அவசரமாகக் கூடி எடுத்த முடிவுகள் பற்றிய செய்தி ஞாயிற்றுக் கிழமை பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக வந்திருந்தது. ஒரு படித்த தமிழர் சொன்னார். "அப்பாடா உச்சியில பால் வார்த்ததுபோல இருக்கிறது... இனி யுத்த பீதி ஓரளவுக்குத் தணிந்துவிடும்" என்று. இந்தச் செய்தியும் கூட சந்திரிகாவின் வழமையான ஒரு தந்திரம்தான் என்பதை அவருக்கு விளங்க வைக்க எனக்கு சிறிது நேரம் எடுத்தது.

யுத்தப் பீதியை தணிக்கவல்ல எந்த ஒரு செய்தியையும் ஏந்திப் பிடிக்கும் ஒரு நிலைதான் பொதுவாக சனங்களிடம் காணப் படுகிறது. எனவே அவர்களை அறிக்கைகளும் பிரகடனங்களும் எப்பொழுதும் அலைக்கழிக் கின்றன. ஆனால் நம்பிக்கைகளும் விருப்பங் களும் மட்டும் எப்பொழுதும் அரசியலாகி விடுவதில்லை. அவை பல சமயங்களில் அரசியல் உள்ளோட்டத்தை நாம் உய்த்துணர்வதற்குத் தடைகளாகவும் மாறிவிடுகின்றன.

உண்மையில் மேற்படி செய்தியை விடவும் அந்த செய்தியின் பின்னாலிருக்கும் செய்தியே முக்கியமானது. அப்படியொரு தீர்மானத்தை அவசரப்பட்டு எஸ்.எல். எவ். பி. மத்திய குழு ஏன் எடுத்தது? இதற்கு முன்பு சனாதிபதி இது போன்ற முக்கிய முடிவுகளை கட்சியின் மத்திய குழுவுடன் கலந்தாலோசித்தா எடுத்தார்? கட்சியின் மத்திய குழு எனப்படுவது நிறைவேற்று அதிகாரங்களை உடைய சனாதிபதியின் முடிவுகளை எந்தளவுக்குக் கட்டுப்படுத்தும்? போன்ற கேள்விகளுக்கு விடைகாண முற்பட்டால் ஒன்று தெளிவாகத் தெரியவரும். அது- சந்திரிகா சர்வதேச சமூகத்தை பேய்க் காட்ட முயல்கிறார் என்பது.

அதாவது சில மேற்கு நாடுகளின் தூதுவர்கள் சமாதானத்தைக் குறித்து ஜே.வி.பியின் நிலைப்பாட்டைப் பற்றி அண்மையில் விசனம் தெரிவித்திருந்தது தெரிந்ததே. எனவே சர்வதேச சமூகத்தின் அபிப்பிராயம் தனக்கு எதிராகத் திரும்புவதை தடுக்கும் பொருட்டு கட்சியின் மத்திய குழுவை கூட்டி இப்படியொரு தீர்மானத்தை எடுத்து சந்திரிகா பரபரப்பை ஏற்படுத்தப் பார்க்கிறார்.

இதில் உள்ள உண்மை நிலைவரம் என்னவெனில்- கட்சியின் மத்திய குழுவைக் கூட்டி முடிவெடுக்காமலேயே இத்தகைய தீர் மானங்களை தன்னிச்சையாக எடுக்கவல்ல சக்தி மிக்க தலைவியாக நிறைவேற்று அதிகாரம் உடைய சனாதிபதியாக சந்திரிகா காணப் படுகிறார் என்பதே.

எனவே இத்தீர்மானம் ஒரு கண் துடைப்பே. இதைப் போன்றவையே அண்மை நாட்களில் சந்திரிகா எடுத்துவரும் சில நகர்வுகளும். இதையெல்லாம் நம்பி மேற்கு நாடுகள் ஏமாறப் போகின்றனவா இல்லையா என்பதே இப்போதுள்ள கேள்வி.

மேற்கு நாடுகள் இவற்றை நம்புகின் றனவோ இல்லையோ இனிமேல் அதிக பட்சம் சந்திரிகாவும் குறிப்பிடத்தக்க அளவு மேற்கு நாடுகளும் எடுக்கப்போகும் முடிவுகளே ஒரு யுத்தத்தை தடுக்க உதவக்கூடும் என்பதே இப் போதுள்ள களயதார்த்தம். இல்லையென்றால் அடுத்த மாவீரர் நாளுக்கிடையில் ஒரு யுத்தம் மூளும் ஆபத்தே தொடர்ந்தும் இருக்கப்போகிறது.

கடந்த மாவீரர் நாள் உரையில் சொல் லப்பட்ட விசயங்களின் படி சந்திரிகா அடுத்த மாவீரர் நாள் வருவதற்கிடையில் ஏதாவது பயன் பொருத்தமான நகர்வை எடுத்தாக வேண் டும். இல்லையென்றால் யுத்தம் ஒன்றுக்குப் போவதைத்தவிர புலிகளுக்கு வேறு வழி இருக் காது. ஏனெனில் புலிகளைப் பொறுத்தவரை மாவீரர் நாள் உரை எனப்படுவது கார்த்திகைப் பூவைப்போல அரிதானது. அதில்வரும் வார்த்தைகளும் பிரகடனங்களும் மிகவும் மரியாதைக்குரியவை. அவை காற்றில் வீசப் படும் வார்த்தைகளுமல்ல; கடலில் கரைந்து போகும் வார்த்தைகளுமல்ல; மாறாக மலை களில் பொறிக்கப்படும் வார்த்தைகள் அவை.

மாவீரர் நாள் உரை என்பது இந்தப் பிராந்தியத்துக்கே ஒரு புது அனுபவம்தான். அரசியல்வாதிகளாலும் அரசறிவியல் நிபுணர் களாலும் விமர்சகர்களாலும் அதன் ரசிகர் களாலும் ஏன் எதிரிகளாலும்கூட காத்திருந்து கேட்கப்படுவது என்று பார்க்கும்போது இந்தப் பிராந்தியத்தில் மாவீரர் நாள் உரைக்கு நிகராக வேறு எந்த ஒரு அரசியல் உரையையும் கூறமுடியாதிருக்கும்.

ஒஸ்லோ பிரகடனம் பற்றியும் அகச் சுயநிர்ணய உரிமை பற்றியும் அண்மையில் விவாதங்கள் எழுந்தபோது புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம், முன்னைய மாவீரர் நாள் உரை ஒன்றின் அடிப்படை யிலேயே விளக்கமளித்திருந்ததை இங்கே சுட்டிக்காட்டலாம்.

இப்படிப்பட்ட பிராந்திய மற்றும் சர்வ தேச முக்கியத்துவம் மிக்க ஓர் உரையில் சொல்லப்பட்டவற்றை ஆகக்கூடிய புனிதத்துடன் பேணவே புலிகள் முயல்வர். இல்லையென்றால் அந்த வார்த்தைகளுக்கு அருமையும் பெருமையும் இல்லாது போய்விடும்.

எனவே இந்த ஒரு காரணமே போதும் அடுத்த மாவீரர் நாளுக் கிடையில் சந்திரிகா ஏதாவது ஒரு திட்டவட்ட மான நகர்வை மேற் கொள்ளத் தவறுமிடத்து யுத்தமொன்று தொடங் கும் என்று கூறுவதற்கு.

ஆனால், சில விமர்சகர்கள் வேறு விதமாகச் சிந்திப்பது தெரிகிறது. புலிகள் ஒரு யுத்தத்திற்குப் போகமாட்டார்கள் என்று அவர்கள் நம்புவதற்கு இரண்டு காரணங்களைக் காட்ட முடியும்.

முதலாவது- புலிகளுக்கும் மேற்கு நாடுகளுக்குமிடையில் அதிகரித்துவரும் ராஜீய நெருக்கம்.

இரண்டாவது- கடந்த சுமார் இரண்டு ஆண்டுகளில் புலிகள் தம்மை துரிதகதியில் இலத்திரன் மயப்படுத்திவருவதும் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பெரிய அளவில் கட்டுமானங்களைச் செய்துவருவதும்.

இந்த இரண்டு காரணங்களும் புலிகள் யுத்தத்திற்குப் போவதைத் தடுக்க போதுமானவையா இல்லையா என்பதை சிறிது விரிவாகப்பார்ப்போம்.

முதலாவது காரணத்தின் படி மேற்கு நாடுகளுக்கும் புலிகளுக்கும் இடையிலான நெருக்கம் என்ற அம்சம் ஒரு யுத்தத்தை

**நிலாந்தன்**

தடுப்பதில் எந்தளவுக்கு செல்வாக்கைச் செலுத்தமுடியும்?

இதற்குரிய விடை மாவீரர் நாள் உரை யிலேயே உள்ளது. வொஷிங்டன் மாநாட்டில் புலிகள் புறக்கணிக்கப்பட்டமை அங்கே அழுத் தத்துடன் கூறப்பட்டுள்ளது. அதாவது மேற்கு டனான புலிகளின் ராஜீய நெருக்கம் எனப் படுவது, புலிகள் திருப்திப்படும் அளவுக்கு விளைவுகளைத் தரத்தவறுமிடத்து அது புலிகள் ஒரு யுத்தத்திற்குப் போவதைத் தடுக்கப் போதுமானதாயிராது.

புலிகளை தடைசெய்து வைத் திருக்கும் சில மேற்கு நாடுகள் இது விசயத்தில் புலிகளுக்குத் திருப்தியூட்டக்கூடிய சில முடிவுகளை எடுத்தாலோ அல்லது சந்திரிகாவை சமாதானத்தை நோக்கி நிர்ப்பந்திக்கும் விதத் தில் ஏதும் செயல்வடிவிலான நகர்வை எடுத்தாலோ புலிகளை ஓரளவுக்கேனும் சமாளிக் கலாம். மாறாக புலிகளின் மீதான தடை ககளையும் வைத்துக்கொண்டு சந்திரிகாவின் மீது அறிக்கை வடிவ அழுத்தங்களை பிர யோகிக்கும் போது அது பெரிய திருப்பங்களை ஏற்படுத்தத் தவறின் பிறகு புலிகளைச் சமா ளிப்பது கடினமே.

எனவே சில மேற்கு நாடுகள் புலிகளின் மீதான தடையை நீக்குமிடத்து அது அவர்கள் புலிகளின் மீது கூடுதல் செல்வாக்கை பிரயோ கிக்கத்தக்க கதவுகளை திறந்துவிடக்கூடும். இல்லையென்றால் நிலைமை கஷ்டம்தான்.

உதவிவழங்கும் நாடுகள் அழுத்தம் கொடுத்தால் சந்திரிகா ஒன்றில் கடந்தகிழமை செய்தது போல கட்சியின் மத்திய குழுவை கூட்டி தீர்மானம் எடுத்து பேய்க்காட்டுவார். அல்லது புதிதாக யோசனைகளை முன்வைப்பார். அல்லது இப் பத்தியில் முன்பு பல தடவைகள் சொல்லப்பட்டதுபோல அவர் இந்தியாவை நோக்கிப்போவார்.

எனவே இது விசயத்தில் மேற்கு நாடுகள் புலிகளுக்குச் சாதகமாக எடுக்கப் போகும் முடிவுகளுக்கும் முக்கியத்துவம் உண்டு. அப்படியேதும் முடிவை மேற்கு நாடு கள் எடுக்கத்தவறின் புலிகள் ஒரு யுத் தத்திற்குப் போவதைத்தடுக்க அவர்களால் முடியுமா என்பது சந்தேகமே.

மற்றது, புலிகள் தம்மை இலத்திரன் மயப்படுத்திவருவது என்பது. அண்மையில் கொழும்பில் இருந்து வந்த ஒருவர் என்னிடம் சொன்னார்... "புலிகள் இனி சண் டைக்குப் போகமாட்டார்கள்" என்று. ஏன் என்றுகேட்டேன். கிளிநொச்சி யில் வன்னிக்கு வந்த புலிகளை ஒரு தடவை நினைத்துப் பார்ப்பது நல்லது. எனவே புலிகள் இயக்கம் வைத்திருக்கும் சொத்துக்களுக்கூடாக அல்ல. மாறாக, அவர்கள் வைத்திருக்கும் சயனைற்றுக்கூடாகவே நிலைமைகளை மதிப் பீடு செய்யவேண்டும். இப்படிப்பார்த்தால் இப்பொழுதுள்ள கட்டுமானங்களையிட்டு சிறிதும் கவலைப்படாமல் ஒரு சண்டைக்குப் போகக் கூடிய மன அமைப்பு விடுதலைப்புலிகளிடம் உண்டு.



**மாவீரர் நாள் உரையில் சொல்லப்பட்ட விசயங்களின்படி சந்திரிகா அடுத்த மாவீரர் நாள் வருவதற்கிடையில் ஏதாவது பயன் பொருத்தமான நகர்வை எடுத்தாகவேண்டும். இல்லையென்றால் யுத்தம் ஒன்றுக்குப் போவதைத் தவிர புலிகளுக்கு வேறு வழி இருக்காது. ஏனெனில் புலிகளைப் பொறுத்தவரை மாவீரர் நாள் உரை எனப்படுவது கார்த்திகைப் பூவைப்போல அரிதானது. அதில் வரும் வார்த்தைகளும் பிரகடனங்களும் மிகவும் மரியாதைக்குரியவை. அவை காற்றில் வீசப்படும் வார்த்தைகளுமல்ல கடலில் கரைந்துபோகும் வார்த்தைகளுமல்ல மாறாக மலைகளில் பொறிக் கப்படும் வார்த்தைகள் அவை.**

**மாவீரர் நாள் உரை என்பது இந்தப் பிராந்தியத்துக்கே ஒரு புது அனுபவம்தான். அரசியல் வாதிகளாலும் அரசறிவியல் நிபுணர்களாலும் விமர்சகர்களாலும் அதன் ரசிகர்களாலும் ஏன் எதிரிகளாலும்கூட காத்திருந்து கேட்கப்படுவது என்று பார்க்கும்போது இந்தப் பிராந்தியத்தில் மாவீரர் நாள் உரைக்கு நிகராக வேறு எந்த ஒரு அரசியல் உரையையும் கூறமுடியாதிருக்கும்.**

எனவே புலிகள் ஒரு போருக்குப் போவதைத் தடுக்க எழுந்துகொண்டிருக்கும் கட்டடங்களை வைத் தும் புலிகள் தம்மை துரிதகதியில் இலத்திரன் மயப் படுத்திவருவதை வைத்தும் சொல்லு மிடத்து எலக்ரோனிக் புலி இனிச்சண்டைக்குப் போகாது. ஏனெனில் சண்டை வந்தால் எலக்ரோனிக் கட்டமைப்பு முழுவதும் அழிந்து போய்விடும் என்று.

ஆனால், இக்காரணத்தை முன் வைப்போர் ஒன்றை முதலில் புரிந்துகொள்ளவேண்டும்.

புலிகள் என்றாலே சயனைற்தான் பிரதான குறியீடு. அதாவது தமது உயிரை துறக்க தயாரான மனிதர்கள் என்று அர்த்தம். தமது இலட்சியத்திற்காக உயிரைத்துறக்கத் தயாரான ஓரமைப்பு தன்னிடமுள்ள இலத்திர னியல் பொருட்களாஅல்லது இலட்சியமா என்று வரும் போது எதைக்காப்பாற்றும்? எதை அழியவிடும்?

புலிகளின் கடந்த சுமார் மூன்று தசாப்த கால வரலாற்றில் இதற்கு எத்தனையோ உதா ரணங்கள் உண்டு. ரிவிரசவுக்கு முன்பு யாழ்ப் பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானங்கள் சகலதையும் கைவிட்டு அல்லது அழித்து விட்டு ஒன்றில் மேற்கு நாடுகள் தம் பங்கிற்கு எதையாவது செய்யவேண்டும். அல்லது சந்தி ரிகா எதையாவது செய்யவேண்டும். இரண்டு மாயில்லாமல் வெறும் அறிக்கைகள் பிரகட னங்கள் தீர்மானங்கள் பேட்டிகள் போன்ற வற்றால் அரசியலை நகர்த்தமுடியாத அள வுக்கு நிலைமைகள் இறுகிப்போய்விட்டன.

மாவீரர்நாள் உரைக்குப் பின் கொழும்பில் அறிக்கைகள் பிரகடனங்கள் தீர்மானங்கள் போன்றவை காலங்கடந்தவைகளாய்; ஒரு யுத் தத்தை தடுத்து நிறுத்தும் சக்தியற்றவைகளாய் மாறிவருகின்றன.

இப்பொழுது சக்திமிக்க வார்த்தை என்பது மாவீரர் நாள் உரை மட்டும்தான். அது தான் ஒரு பெருஞ்செயலின் நீட்சியாகவும் இனி நிகழப்போகும் ஒரு பெருஞ்செயலின் தொடக்க மாகவும் காணப்படுகிறது.

அந்த வார்த்தைகளின் புனிதத்தைப் பாதுகாப்பதற்காக புலிகள் யுத்தத்தை ஒரு தெரிவாக எடுப்பதற்குரிய கால அவகாசம் இன்னும் சுமார் பதினொரு மாதங்கள் மட்டுமே. ●

# நறுக்கென...

## ஆயிரத்தில் ஜெனரலின் வெளிப்படையான வார்த்தைகள்



ஆயிரத்தில் ஒருவர் ஆயிரத்தில் ஒரு வார்த்தையைக் கூறுவது ஆயிரத்தில் ஒரு தடவையே நடக்கக்கூடிய காரியம்.

அத்தகையதொரு வார்த்தையை அசாத்திய துணிச்சலுடன் கூறிய ஆயிரத்தில் ஒருவராக சிறிலங்கா இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டே கொடவுக்கு ஜோ ஒருதடவை கைதட்டுங்கள் பார்க்கலாம்....

என்னடா விசயம் என்னவென்று தெரியாமல் கைதட்டி விட்டோமே என்று யோசிக்கிறீர்களா? சரி.. இனி விடயத்திற்கு வருவோம்.

முதலில் அவர் கூறிய 'ஆயிரத்தில் ஒரு' வார்த்தையைக் கூறிவிடுகிறேன். 'வெளிநாடுகளுக்கு இனிமேல் நமது படைகளை அனுப்பமுடியாது' இதுவே பிரதானமான விடயம்.

ஏன் அனுப்ப முடியாது? ஏன் அனுப்பக்கூடாது? என்ற இரு கேள்விகள் ஜெனரலின் வார்த்தைகுறித்து பலருக்கு எழலாம். ஆனால், அவரே அதற்கான விளக்கத்தை உண்மையாக ஆத்மார்த்தமாக வெளியிட்டு ஆயிரத்தில் ஒருவராகவும் தன்னை இனம் காட்டிவிட்டுள்ளார்.

"இருபது வருடங்களாகப் போராடியும் உள்நாட்டில் அமைதியைப் பேணமுடியா நிலையிலுள்ள இலங்கைப் படைகளை வெளிநாட்டில் அமைதியைப் பேணும் பணிக்கு அனுப்புவதால் எந்தப்பயனும் இல்லை..." என்ற அவரின் விளக்கம் அர்த்தமுள்ள அங்கீகரிக்க வேண்டிய ஒன்றேயாகும்.

அமைதியைக்குலைக்கவே போரை நடத்த பயிற்சி அளிக்கப்பட்டு பயன் படுத்தப்பட்ட ஒரு படையை அமைதிப்பணிக்கு அனுப்புவதென்பது சுத்தக்கோமாளித்தனம் என்பதை ஜெனரல் உணர்ந்துதான் உள்ளார்.

யுத்தம் நடாத்த தயார் நிலையில் உள்ள படையை அரசு பற்றாலியன்-பற்றாலியனாக அமைதிப் பணிக்கு என வெளிநாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறது என கண்டனம் தெரிவித்துள்ள ஜெனரல் இதன் மூலம் இராணுவம் போருக்கு தயாராகிக்கொண்டிருக்கிறது என்ற உண்மையையும் வெளிப்படுத்தியுள்ளார்.

'நன்றி ஜெனரலே நன்றி'


யுத்த களத்தை விட்டு பல்லாயிரக்கணக்கில் தப்பியோடிய படையினர் அமைதிப்பணியென்றால் இனிமேலும் ஓடாமலிருக்கக்கூடும் என்று அரசு நினைக்கக்கூடும்.

தம்மிடம் போதிய படையினர் இல்லை களமுனைத்தளபதிகளின் முறைப்பாடுகள் குறித்த தகவலையும் வெளியிட்டு இராணுவத்தின் பலவீனமான நிலையினையும் ஜெனரல் அவர்கள் வெளியிட்டதன் மூலம் மீண்டும் தான் ஆயிரத்தில் ஒரு ஜெனரல் என்பதை அவர் நிரூபித்துள்ளார்.

அது சரி அமைதிப் பணிபுரியும் படை எப்படி இருக்கும் என்பதை இந்திய அமைதி காக்கும் படையினர் தமது இரண்டாண்டிற்கும் அதிக கால இலங்கை மீது ஆக்கிரமிப்புப் பணியின் (!?) போது நிரூபித்திருந்தது தெரியும் தானே!

அத்தகைய பணிபுரியும் வாய்ப்பை இலங்கைப்படைகள் இந்த ஜெனரலால் இழக்கப்போகின்றன.. அவ்வளவுதான்.

## போல்ஹாரிசின் புலம்பல்



"இனப்பிரச்சினையில் தலையிட நோர்வேக்கு அதிகாரமில்லை."

இப்படிச் சொல்லியவர் ஒரு ஜே.விபிக்காரரோ, ஹெலஉறுமய பேர்வழியோ அல்லது வேறு ஒரு பேரினவாதப் பெருச்சாளியோ என்றால் எவரும் ஆச்சரிய மடையமாட்டார்கள்.

ஆனால், சொல்லியிருப்பவர் ஒரு பிரபலமான வெளிநாட்டு பத்திரிகையாளர் போல் ஹாரிஸ் என்ற அந்த நபரின் பெயர் சில வருடங்களின் முன்னர் இலங்கைப்பத்திரிகைகளில் பிரபலமான ஒன்றாகும்.

பிரிட்டிஷ் உளவு நிறுவனமொன்றின் முகவர் எனவும் கருதப்படும் புகைப்பட ஊடகவியலாளரான இவர் இரு ஆண்டுகளின் முன்னர் ஒருதடவை இலங்கையில் இருந்து வெளியேற்றப்பட்ட நிகழ்வும் நடந்ததுண்டு.

விடுதலைப்புலிகளை கடுமையாக எதிர்க்கும் இந்த நபர் மீண்டும் சர்வதேச பாதுகாப்பு ஆய்வாளர் என்ற வகையில் கொழும்புக்கு வருகை தந்து பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்ட இடைக்கால நிர்வாக அதிகார சபை யோசனைகளுக்கெதிரான மாநாட்டு மண்டபத்தில் உரையாற்றும் போதே மேற்குறித்த வார்த்தைகளை திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

'இலங்கையில் சனநாயகமும் சமாதானமும்' என்ற தலைப்பில் உரையாற்றிய இந்த நபர் தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான வரைவினை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் புலம்பியுள்ளார்.

அதுமட்டுமல்ல அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் நாட்டின் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலானது என்றும் அலறியுள்ளாராம்.

இரு தசாப்தகால இனவிவகார யுத்தத்தில் தலையிட நோர்வேக்கு எந்த அதிகாரமுமில்லை என்று கூறியுள்ள போல்ஹாரிஸ் தம்மை அழைத்தவர்களுக்கு. விசுவாசமாக வாயாடியுள்ளார்....அவ்வளவுதான்.

ஐயா ஹாரிஸ் துரையவர்களே. நோர்வே இலங்கை விவகாரத்தில் தலையீடு செய்யவில்லை. என்பதையும். அரசு அழைத்து வருகை தந்து அரசின் வேண்டுகோளுக்காக சமாதான அனுசரணைப் பணிபுரியும் ஒரு நாடு என்பதை புரிந்துகொள்ளாத ஆய்வாளராக நீங்கள் இருப்பது கோமாளித்தனமாக உள்ளதே......

அதுசரி இன்னுமொரு பைத்தியக்காரத்தனமான கருத்தையும் அல்லவா உளறியிருக்கிறீர்கள்... அதாவது விடுதலைப் புலிகளின் தலைவரை ஒருவரர காலத்தில் கைதுசெய்யும் திறன்மிக்க படை இந்தியாவிடம் உள்ளது. தேவைப்படும் போது அவர்கள் அவரைக் கைது செய்வார்கள் என்றும் இந்தியாவின் சுப்பிரமணிய சுவாமி உளறுவதுபோல் உளறியுள்ளார்.

பாவம் இலங்கை விவகாரத்தின் ஆழமூலம் சரியாக அறிந்திராத போல் ஹாரிஸ் அனைத்தும் தெரிந்தவர் போல் பேசுவதும் எதிர்வு கூறல் கூறுவதும் அவரை ஒரு மூன்றாந்தர அரசியல்வாதியாக இனம் காட்டுகிறதேயன்றி ஒரு ஆய்வாளராக ஊடகவியலாளராக அல்ல....

போல் அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினை மற்றும் அதற்கான தீர்வு குறித்துப்பிதற்றி விட்டுப்போயுள்ளார் அவ்வளவுதான்.

## அர்த்தமுள்ள எச்சரிக்கையும் ஆழமான யோசனையும்!



இதுவும் கூட அப்படிப்பட்ட ஆயிரத்தில் ஒருவர் மட்டுமே கூறக்கூடிய ஆயிரத்தில் ஒரு வார்த்தை குறித்த விடயம் தான்.

அதுமட்டுமல்ல இதுவும் ஒரு படைத்தளபதியின் கூற்றுத்தான். ஆனால், இவர் முன்னாள் விமானப்படைத்தளபதி ஹரி குணதிலகா ஆவர்.

நீண்ட காலமாகவே... குறிப்பாகப் போர் உக்கிரமாக நடந்த காலத்திலும்கூட அவ்வப்போது அரசுக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் (விசேடமாக முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான அரசியல் ஜெனரல் அனுருத்தரத்வத்தைக்கும்) எரிச்சலையும் சினத்தையும் ஏற்படுத்தும் வகையில் அவ்வப்போது போர்நிலைவரம் குறித்த கடும்விமர்சனங்களை வெளிப்படையாகவே முன்வைத்து வந்தவர் ஹரிகுணதிலகா ஆவர்.

சில காலத்தின் பின்னர் சமகால அரசியல்- இராணுவ நகர்வுகள் குறித்த தனது பார்வையை அவர் இப்போது சற்றுக்காட்டமாக அதுவும் அரசை எச்சரிக்கும் வகையில் விமர்சனமாக முன்வைத்துள்ளார்.

ஏ.எவ்.பி என்ற புகழ் பெற்ற செய்தி நிறுவனமொன்றிற்கு அவர் அளித்துள்ள செவ்வியொன்றில் அவர் இன்றைய சமாதானப் பேச்சுவார்த்தைகளின் இக்கட்டான நிலை பற்றிக் கூறுகையில்:-

இன்றைய நிலையில் ஜே.வி.பியினரை நரகத்துக்குப் போங்கள் என்று அனுப்பிவிட்டு விடுதலைப்புலிகளுடன் பேசுங்கள்... இல்லையேல் விடுதலைப் புலிகள் அடுத்த கட்டங்களில் எடுக்கக் கூடிய நகர்வுகள் மகிழ்ச்சி தரும் விடயங்களாக இருக்காது. அது மட்டுமல்ல விரைவில் மீண்டும் போர் தொடங்குமேயானால் எவரும் புலிகள் மீது குற்றம் சொல்லமாட்டார்கள்- என அரசுக்கு ஆலோசனை எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளார்.

அனுபவம் பேசுகிறது.

"இப்போது பந்து அரசின் பக்கமே கிடக்கிறது. அரசு அதனை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். இல்லையேல் எமக்கு உதவ எவருமே முன்வரப்போவதில்லை" எனவும் விளக்கியுள்ள அவர் சூழல் யதார்த்தத்தை நன்கு புரிந்து கொண்டவராக சமாதான நடவடிக்கையை வலுவாக ஆதரித்த அமெரிக்க ஐரோப்பிய ஒன்றியம். ஜப்பான். நோர்வே போன்ற நாடுகள் தற்போது இதிலிருந்து விலகவும் அதற்காக அரசின் மீது பழியைப் போடவும் தயாராகி வருகின்றமையானது அரசுக்கு மிக மோசமான நெருக்கடியையே ஏற்படுத்தும் எனவும் தெரிவித்துள்ளார்.

சரி ஹரிகுணதிலகா ஊத வேண்டிய அபாயச்சங்கை உரிய நேரத்தில் ஊதி தன் தேசியக் கடமையை செய்துவிட்டார்.

அரசு... அதாவது குறிப்பாக சனாதிபதி ஜே.வி.பியை நரகத்திற்கு துரத்திவிட்டு சமாதானத்தை- தேசத்தை காக்க தயாராவாரா? அல்லது நரகத்துக்குள்தான் அவர்களுடன் சேர்ந்து நாட்டையும் கொண்டு செல்லப் போகின்றாரா?

அடுத்துவரும் வாரங்கள் இலங்கையின் தலைவிதியை சந்திரிகா தீர்மானித்து இலங்கையை நரகமாக்கப் போகிறாரா என்பதை முடிவு செய்ய வேண்டும்.

## அழக்குமேல் அழவாங்கும் ஜே.வி.பி தோழர்கள்



"உரலுக்கு ஒரு பக்கம் இடி.மத்தளத்திற்கு இரண்டுபக்கமும் இடி மக்களால் ஜே.வி.பி க்கு எல்லாப்பக்கமும் இடி" என்றார்- நிருபர் ஒருவர் 'ஏன் அப்படிச் சொல்கிறீர்கள' என்றேன்- நான்.

'சும்மா இருக்க முடியாமல். அரசில் ஒரு ஒட்டுண்ணியாக இருந்து உண்டு கொழுத்து வரும் அந்தக்கட்சிதானே அரசு என்று கற்பிதம் செய்து கொண்டு நோர்வேயின் சமாதான அனுசரணைப் பணியின் மீது அரசுக்கு நம்பிக்கையில்லை என நோர்வேத் தூதருக்கே கடிதம் எழுதப்போய் அனைத்துப் பக்கத்தாலும் திட்டலும் இடியும் வாங்கிக்கொண்டிருக்கிறதே' என்றார் அவர்.

உண்மைதான்.

ஜே.வி.பியினர் இந்த தொலைநோக்குத் தன்மையற்ற கடித நடவடிக்கை சந்திரிகாவுக்கு நெருக்கடியைக் கொடுக்க அம்மணியோ ஜே.வி.பியை கூட்டணிக்குள் கொண்டு வந்த மங்களமீதும் அநுராமீதும் சீற, அவர்கள் ஜே.வி.பிமீது பாய நிலைமை விபரீதமாகி விட்டது.

இதனையடுத்து ஜே.வி.பியினர் மீது அமெரிக்கா. ஐரோப்பிய ஒன்றியம். ஜப்பான் ஆகியவற்றின் பிரதிநிதிகள்- சமாதான முயற்சிகளின் எதிரிகள் - அதாவது தடைக்கற்கள் நீங்களே என்று குற்றம்சாட்ட. ஜே.வி.பி அதனை நிராகரித்து நியாயம் கற்பிக்க முயல. ஜப்பான் அதனை மீண்டும் நிராகரிக்க....ஜே.வி.பியின் நிலை தர்ம சங்கடமாகி விட்டுள்ள நிலையில் தடுமாறுகையில். ஹரிகுணதிலகா என்ற முன்னாள் விமானப் படைத்தளபதி ஜே.வி.பியை நரகத்திற்கு துரத்திவிட்டு புலிகளுடன் தாமதமின்றி பேச்சுக்களை ஆரம்பியுங்கள் என அரசுக்கு எச்சரிக்கை யோசனை ஒன்றை வழங்கி ஜே.வி.பிக்கு நெற்றியடி கொடுத்துள்ளார்.

இதற்கிடையில் பேச்சுவார்த்தைகளை புலிகளுடன் மீண்டும் தொடங்குவதற்கு சுதந்திரக் கட்சியின் மத்தியகுழு முடிவு செய்து அதற்கான தடைகளை நீக்கவும் தீர்மானித்துள்ளதுடன். இதற்கான முழு அதிகாரத்தையும் சந்திரிகா அம்மையாருக்கு அளித்திருப்பதானது ஜே.வி.பிக்கு அடுத்த பிடரி அடியாகியுள்ளது.

தடைகளை நீக்குதல் என்ற பதம் ஜே.வி.பியையே சுட்டிநிற்பதாகக் கூறுவது. ஆய்வாளர்கள். ஜே.வி.பியினரின் தன்னிச்சையுடன் கூடிய மேலாதிக்கச் செயற்பாடுகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும். ஜே.வி.பியினருக்கு எதிரான போக்கு கட்சிக்குள் முனைப்புக் கொள்ளத்தொடங்கியுள்ளதாகவும் கூறத்தொடங்கியுள்ளனர்.

இதுவும் ஜே.வி.பிக்கு அடியாகவே விழத்தொடங்கியுள்ளது.

இதே வேளை ஜே.வி.பியை அடக்கிவாசிக்குமாறு அழுத்தம் கொடுக்க சந்திரிகா நிர்ப்பந்திக்கும் சக்திகள். தவறின் அவருக்கான தமது ஆதரவை விலக்கிக்கொள்ளப்போவதாகவும் கூறியுள்ளதால் அவர் குழம்பிப் போயுள்ளாராம்.

ஜே.வி.பியினருடன் பேசி முரண்பாடுகளைக் களைய முயற்சிகளை மேற்கொள்ள சந்திரிகா முயன்றாலும் அவர்கள் அடங்கிப்போக தயாராக இல்லை என்றே செய்திகள் கூறுகின்றன என்றார் நிருபர்.

சமாதானத்தின் பேரால் அரசுக்குள் யுத்தமொன்று ஆரம்பித்துவிட்டது போலுள்ளது என்றேன் நான். 'இதுவும் சமாதானத்திற்கான யுத்தமோ தெரியவில்லை.' என்றுசொல்லிச் சிரித்தார்.

**செங்குட்டுவன்**

# படை நடவடிக்கைக்கு முன்னரான புலனாய்வுப்பணிகள்



**எந்தவொரு ஆர்ப்பாட்டங்கள் ஏதும் இல்லாது அமைதியாக சாதாரண மக்களாக தமிழர் தாயகப்பகுதிகளை ஆக்கிரமித்து இருக்கும் எதிரிப் புலனாய்வு முகவர்களின் பல சோடிக் கண்கள் தாய் நிலத்தை துளைத்துக்கொண்டிருக்கின்றன. அவர்களின் காதுகள் உன்னிப்பாக செவிமடுக்கப்படுகின்றன.**

மண்ணுலகில் அரசுகளுக்கிடையிலான போர்கள் நடைபெறத் தொடங்கிய காலத்திலிருந்து, இன்றைய நவீன போரியல் முறையிலான யுத்தங்கள் நடைபெற்று வருகின்ற வரை படை நடவடிக்கைக்கு முன்னரான புலனாய்வுப்பணிகள் முனைப்புப்படுத்தப்பட்டே வந்துள்ளன.

அரசு போர் ஒன்றைத் தொடுக்கும்போது படை வியூகங்களை வகுத்து, படையெடுப்புக்களை முன்னெடுக்க புலனாய்வுத் தகவல்கள் பெரும் பங்கினை ஆற்றி வருகின்றன.

போர்க்கள நிலைவரங்களை ஆராய்ந்த பின்னரே எந்த இடத்தில் உட்புகுந்து தாக்குவது என்கிற தீர்மானத்தை அரசும், படை உயர் பீடமும் மேற்கொள்கின்றன.

சிலங்கா அரசும், இராணுவ உயர் பீடமும் இதுவரையிலும் தமிழர் தாயகப் பகுதிகளில் மேற்கொண்ட பாரிய படையெடுப்புக்கள், தரையிறக்கங்கள் யாவற்றிக்கும் முன்னரான புலனாய்வுப் பணிகளை முன்னெடுத்தே வந்துள்ளது.

சிங்களப் புலனாய்வு அமைப்பினர் புலனாய்வுப் பணிகளில் பற்பல நுட்பங்களைக் கைக்கொண்டு, தகவல் மூலங்களிலிருந்து பெறக்கூடிய ஒவ்வொரு சிறிய தகவல்களையும் சேகரித்து வருகின்றனர்.

தமிழர் தாயகப் பகுதியினுள் செயற்படும் அவர்களது முகவர்கள், அவர்களால் கைதுசெய்யப்படுவோர்கள், விட்டோடிகள், நட்பு நாடுகளின் உளவாளிகள், போன்ற மூலங்களிலிருந்தும், வேவு விமானங்கள், வானொலிப் பரிவர்த்தனை ஒட்டுக்கேட்கும் கருவிகள் போன்ற தொழில்நுட்ப மூலங்களிலிருந்தும் தகவல்களை சேகரித்துக்கொள்கின்றனர்.

இவற்றை விடவும் பிற மூலங்களிலிருந்தும் தகவல்களை பெற்றுக்கொள்கின்றனர். அதாவது தமிழரின் தகவல் கசியும் அவர்களது அவதானமற்ற பேச்சுக்களும், அச்சுறுத்தி அழுத்தம் கொடுக்கும் போது தமிழர் வெளியிடும் தகவல்கள் போன்றவைகளுமாகும்.

சிங்களவர் தமிழரின் போர் முனையைத் தாக்கும் முதன்மை படை நடவடிக்கை ஒன்றை எந்தத் தினத்திலும் மேற்கொள்ளலாம் என்கிற சிவப்பு அபாய அறிவிப்புக்களே வெளிவந்த வண்ணம் இருக்கின்றன.

தமிழர் தாயகப் பகுதிகளில் போரைத் திணிக்கும் தாக்குதல் ஒத்திகை நடவடிக்கைகளை அரசு முழுமையான வேகத்தில் முடுக்கி விட்டுள்ளது. அடுத்ததாக என்ன நடக்கப்போகிறது என்கிற பரபரப்புடன் எதிர்பார்க்கும் போர்ச்சூழல் தோன்றியுள்ளது.

இந்தப் போர்ச் சூழல் வெளிப்படையாகத் தெரியும் அச்சுறுத்தல்கள். ஆனால், தமிழர் தாயகப் பகுதிகள் எப்போதுமே எதிரிப் புலனாய்வுப் படை யெடுப்புக்களால் ஆக்கிரமிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் ஆபத்து நிறைந்த புலனாய்வுப் போர்ச் சூழலிலே இருந்து வருகின்றது.

சிங்கள கவசவாகனப் படைப்பிரிவுகள், தலைக்கவசங்கள் அணிந்த, தவீன போர்க்கருவிகளை ஏந்திய சிங்களப் படையாட்கள், நவீன போர் விமானங்கள், பாரிய போர்க் கப்பல் போன்றவற்றின் அனைத்து அச்சுறுத்தல்களும் வெட்ட வெளிச்சமாக இருக்கும். இதில் அதிகம் புதுமையேதும் இல்லை.

ஆனால், எந்தவொரு ஆர்ப்பாட்டங்கள் ஏதும் இல்லாது அமைதியாக சாதாரண மக்களாக தமிழர் தாயகப் பகுதிகளை ஆக்கிரமித்து இருக்கும் எதிரிப் புலனாய்வு முகவர்களின் பல சோடிக் கண்கள் தாய் நிலத்தை துளைத்துக்கொண்டிருக்கின்றன.அவர்களின் காதுகள் உன்னிப்பாக செவிமடுக்கப்படுகின்றன.

இவற்றை இன்றும் விளங்கிக் கொள்ள தரணியில் நடந்து முடிந்த படையெடுப்புக்களும், அதற்கு உதவியாக முக்கிய நகரங்களில் புலனாய்வு நிலையங்களை மறைமுகமாக அமைத்து புலனாய்வுப் பணிகள் செய்யப்பட்ட உதாரணங்களை இங்கு நோக்குவோம்.

உலக மகாயுத்தங்களின் போது அமெரிக்கா வட ஆபிரிக்காவை ஆக்கிரமிப்பிற்கான தாக்குதல் வீயூகங்களை அமைத்து படைப் பிரிவுகளை தரை இறக்குவதற்கு தருணம் பார்த்துக்கொண்டிருந்தது.

அமெரிக்கா இந்தப் படையெடுப்பிற்கான அனைத்துத் தகவல்களைச் சேகரிக்கவும், பிற மறைமுக கள ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்ளவும் அப்போதிருந்த தனது புலனாய்வு அமைப்பான ஓ.எஸ்.எஸ். (0.S.S)யினரிடம் முதன்மைப் பணியாக ஒப்படைத்திருந்தது.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தினால் ஏற்கனவே வட ஆபிரிக்காவில் விடப்பட்டிருந்த நபர்களை பிரயோசனப்படுத்திக் கொள்வதில் ஓ.எஸ்.எஸ் யினர் கவனம் எடுத்தனர்.

அமெரிக்கா வட ஆபிரிக்காவுடன் பொருளாதார உடன்படிக்கைக்கு அமைய கப்பல்களில் அனுப்பிய அத்தியாவசியப் பொருட்கள் வட ஆபிரிக்காவிற்கு வெளியே ஏற்றுமதி செய்யப்படாதிருப்பதனை மேற்பார்வை செய்யவென விஷேட குழுவை அங்கு அனுப்பிவைத்தது.

இந்தக் குழுவினர் ஓ.எஸ்.எஸ் நபர்களாக இருந்தனர். இவர்களுள் கட்டுமானப் பணியாளர்கள், எண்ணைத் தொழிலாளிகள், வர்த்தக பிரமுகர்கள், இராணுவக் கல்லூரியில் பட்டம் பெற்றவர்கள், வங்கியாளர், சட்டத்தரணி, விளம்பரத்துறை சார்ந்தவர், பல்கலைக்கழக மனிதவியலாளர், நூலக அலுவலகர், மதுபான வர்த்தகர், வட ஆபிரிக்காவிற்கு பயணங்களை அடிக்கடி மேற்கொண்ட அனுபவம்மிக்கவர்கள் போன்றோர்கள் உள்ளடங்கி இருந்தனர்.

இந்த உளவாளிகளுக்குப் போதுமான தகவல் தொடர்பு ஒழுங்குமுறைகளுக்கான ஆயத்தங்களை உடனடியாக ஓ.எஸ்.எஸ் செய்தது. என்னவாகயிருந்தாலும் அவர்களுக்கு புதிதாகக் கற்றுக்கொள்வதற்கு அங்கு ஏராளமான விடயங்கள் இருந்தன. ஆனாலும் அவர்களின் முகவர்கள் மூலம் வெகு துரிதமாக விடயங்களை அறிந்துகொண்டனர்.

*நீலன்*

ஓ.எஸ்.எஸ் யினர் படைகள் தரையிறங்கும் மையங்கள் சம்பந்தமாகப் பெறக்கூடிய ஒவ்வொரு சிறிய தகவல்களையும் சேகரித்தனர். தரையிறங்கும் ஒரு படைக்கான அவர்களது முழுமையான விநியோக ஏற்பாடுகளின் சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய்வுசெய்தனர். அங்கு வாழும் பிரெஞ்சு மற்றும் அராபிய மக்களின் அபிப்பிராயங்களையும், உணர்வுகளையும் அறிந்துகொள்ளல், பிற நாட்டு கப்பல்கள் நடமாட்டங்களை அவதானித்தல்போன்ற பிறப் புலனாய்வுப் பணிகளையும் முன்னெடுத்தனர்.

இராணுவ யுத்த தந்திரோபாய ரீதியில் வடஆபிரிக்காவிலுள்ள "டக்கார்" என்ற கரையோர இடத்தில் தரையிறக்கம் நடைபெறும் சாத்தியங்கள் அதிகம் இருந்தது. இதனை அமெரிக்கா தனக்கு சாதகமாகப் பயன்படுத்தியது. அதாவது அமெரிக்கா டக்கார் மறைப்பு திட்டம் (DAKER COVER PLAN) என்ற ஏமாற்று தந்திரோபாயத்தை வகுத்தது. இத்தகவலை ஆபிரிக்காவில் பரவலாக நம்பகத்தன்மை பெற ஓ.எஸ்.எஸ் கடினமாக உழைத்தது.

இந்த வதந்தியை ஊக்குவித்ததற்கு என்னவெல்லாம் செய்ய முடியுமோ அத்தனையும் ஓ.எஸ்.எஸ் யினரும், அவர்களின் முகவர்களும் செய்தனர். உண்மையில் தரையிறக்கம் இடம்பெறும் இடத்திலிருந்து "டக்கார்" பல மைல்கள் தொலைவில் அமைந்திருந்தது.

"டக்கார்" என்ற இடத்திலேயே தரையிறக்கம் இடம்பெறும் என்று வட ஆபிரிக்காவை ஆக்கிரமித்திருந்த ஜேர்மனியர் நம்பிக்கையை வலுப்படச் செய்தல் என்ற வகையில் ஓ.எஸ்.எஸ் யினர் இன்னுமொரு புலனாய்வு யுக்தியைக் கைக்கொண்டனர்.

இவர்கள் "பிரெடி" என்ற தமது இரட்டை முகவரிடம் ஜேர்மனிய ஜெனரல் "ஓவரிடம்" தகவலை தெரிவிக்கும்படி தகவல்களை வழங்கினர். அது என்னவெனில் அமெரிக்கா தலைமையிலான நேச அணியினரின் இறுதிப்படையெடுப்புத் திட்டம் நிர்ணயஞ்செய்யப் பட்டாயிற்று. அது "டக்காரில்" தரையிறங்கவுள்ளது என்பது பற்றிய தகவல்களை வழங்கும்படி அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இரட்டை முகவரான பிரெடி இந்தத் தகவல்களை அன்றிரவே "ஓவரிடம்" தெரிவித்தார். இதைக் கேட்டறிந்த "ஓவர்" ஜேர்மனியத் தலைமையகத்திற்கு ஒரு விஷேட செய்தியாக இத்தகவல்களை அனுப்பிவைத்தார். இது டக்கார் மறைப்புத்திட்டம் வெற்றிகரமாக அமைய உதவிபுரிந்துள்ளது.

ஓ.எஸ்.எஸ் யினரின் முகவரான கடற்கரைகளுக்கு வழிகாட்டிச் செல்லும் மாலுமி மக்வேண் உதவியோடு மிகப் பாரிய நேச அணியினரின் ஆயுதந் தாங்கிய கப்பல் படையணி வட ஆபிரிக்கா "சிரானில்" தரையிறங்கியது.

இந்தப் போர் நிலைவரங்கள் அனைத்தினையும் ஜேர்மனியர் தங்கள் தலையிற் போட்டுக் குழம்பிக்கொண்டிருக்க அமெரிக்கா தலைமையிலான நேசஅணிப் படையினர் வட ஆபிரிக்கா முழுவதையும் கைப்பற்றிக் கொண்டனர்.

இந்த நிகழ்வைவிட அண்மைக்கால இன்னுமொரு உதாரணத்தைப் பார்ப்போம்.

அமெரிக்கா "ஈராக்கிற்கு சுதந்திரம்" (IRAQ FREEDOM) என்கின்ற படை நடவடிக்கையை ஈராக்கில் மேற்கொள்ளமுன்பே தனது புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏ (C.I.A)யை களத்தில் இறக்கியிருந்தது.

சி.ஐ.ஏயினர் ஈராக்கினது இரகசியங்களை எட்டக்கூடிய நிலையிலிருந்த அநேகமானவர்களை தமது உளவாளிகளாக ஆக்கிக்கொண்டனர். அதேசமயம் இஸ்ரேல் புலனாய்வு அமைப்பான மொசாட்டின் தகவல் மூலங்களிலிருந்தும் கணிசமான தகவல்களைப் பெற்றுக்கொண்டனர்.

இது போன்று சிங்களப் புலனாய்வு அமைப்பினர் தமிழர் படைத்தளங்களையும் அரண்களையும் பற்றிய தகவல்களை சேகரித்தல், கரையோரங்கள் ஆய்வுகளை மேற்கொள்ளும் தகவல்கள், வரைபடங்கள் சேகரித்தல்போன்ற புலனாய்வுப் பணிகளை முன்னெடுக்க தாயகப் பகுதிகளில் அடித்தளமிட்டுள்ளனர். அதற்கு அப்பாலும் படைகள் இரகசியமாக நகரக்கூடிய பாதை வழிகாட்டிகள் உட்பட படையெடுப்புத் திட்டத்திற்கு பயன்படலாம் என்று கருதக்கூடிய நபர்களையும் ஆட்சேர்த்துக்கொள்வதிலும் கவனம் செலுத்துகின்றனர்.

சிங்கள தேசம் நான்காம் கட்ட ஈழப்போருக்கு தன்னை தயார் படுத்தியுள்ளது என்கின்ற செய்திகளை ஊடகங்கள் ஆதாரங்களுடன் வெளியிட்டுவருகின்றன.

சிங்களப் படையினர் தமிழர் தாயகப் பகுதிகளை ஆக்கிரமிக்க படை நடவடிக்கைகளைச் செய்யும் என்ற விடயத்தில் இரகசியம் ஏதும் இல்லை. இரகசியம் இருக்குமென்றால் அது எத்தகைய போரியல் வியூகம் வகுத்து, எந்த இடத்தில், எத்தினத்தில் அல்லது கிட்டத்தட்ட எப்போதளவில் ஆக்கிரமிக்கும் நடவடிக்கையைத்தொடங்கும் என்பதிலேயே இருக்கும்.

சிங்களப் படையெடுப்பு எங்கே எப்போது இடம்பெறும் என்ற விடயம் பற்றி தமிழீழப் புலனாய்வு அமைப்பினர் ஆராயாதவண்ணம் இருப்பர். ஆதலால் தாயக நிலத்தை காப்பாற்றவேண்டிய காலத்தின் தேவையாக இருப்பதனால் தமிழர் புலனாய்வுப் போர் வீரர்களாக இயங்க வேண்டியுள்ளது.

தமிழர் தாயகப் பகுதிகள் பகைவரின் புலனாய்வுப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் தற்போதைய சூழ்நிலையில் தமிழருக்கு இந்தப் புலனாய்வு அச்சுறுத்தல்களை முறியடிக்கும் புலனாய்வுப் பணிகளில் பங்கெடுக்கவேண்டிய பாரிய சிந்தனையும் செயற்பாடும் அவசியமாகும். இக்கால கட்டத்தில் தமிழரின் விழிகளும் விழிப்பாக இருப்பது மிகவும் அவசியமான புலனாய்வுத் தேவையாக இருக்கின்றது.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 24 . 12 . 2004
மின் அஞ்சல் : weekly @ eezhanatham.com

## கைமீறிப்போகும் சமாதானம்...?

தற்போது அமுலிலுள்ள போர் நிறுத்த உடன்படிக்கை செயலிழந்துபோகக்கூடிய வாய்ப்பு இல்லையென அமெரிக்கா நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இதேவேளை நோர்வே பிரதமர் செல்மன்னே பொண்டவிக் விரைவில் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படல்வேண்டும். மிக முக்கியமானவிடயம் இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கை உரியமுறையில் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படல்வேண்டும். எனவும் அவசர அழைப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

இவை இப்படியிருக்க, இலங்கையின் சமாதான முயற்சிகளில் முன்னணி அனுசரணையாளர்களுள் ஒருவரான எரிக் சொல்ஹெய்ம் அவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களை லண்டனில் சந்தித்துப் பேசிய பின்னர் தேக்க நிலையிலுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தற்போதைக்கு மிகக்கடினமான காரியமாகவே உள்ளது எனத்தெரிவித்துள்ளார்.

மேற்கூறப்பட்ட மூன்று கூற்றுக்களை நோக்கும்போது மோசமடைந்துபோகும் நிலைமையை தணிக்க முயலுகின்ற அவாவையும்இதேநேரம் களத்தில் நிற்கின்ற சமாதான செயற்பாட்டாளர் என்றவகையில் நிலைமைகளை மதிப்பீடு செய்வதன் அடிப்படையில் நிலைமை மோசமாக இருப்பதனை வெளிப்படுத்தியுள்ளதையும் 'நோக்கக்கூடியதாக இருக்கிறது.

இலங்கையின் சமாதான முயற்சி தொடர்பான களநிலைமை விரும்புவதற்கு மாறாக கைமீறிப் போகின்ற ஒரு நிலைமையே காணப்படுகிறது.

உண்மையில் யுத்தநிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்து உயிர்ப்போடு கடைப்பிடிக்கவேண்டுமாயின் சமாதான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவேண்டும்.

ஆனால், சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுவதற்கான எந்த சமிக்ஞைகளையும் காணமுடியவில்லை.

உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படாது யுத்தநிறுத்த உடன்படிக்கையை பாதுகாப்பது என்பதோ அல்லது விரைவில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும் என்ற வகையில் காலத்தை இழுத்தடிக்க முயல்வதோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் யுத்தநிறுத்த உடன்படிக்கையை பாதுகாக்கும் சக்தியை கொண்டிருக்கப்போவதில்லை.

இந்த நிலையில் யுத்தநிறுத்தத்தின் வெற்றியும் தோல்வியும் இன்று சிறிலங்கா அரசின் கைகளில்தான் உள்ளது.

ஏனெனில் யுத்த நிறுத்த உடன்படிக்கையை ஆபத்தின் விளிப்புகளுக்குள் கொண்டுவருந்திருப்பது சிறிலங்கா அரசே அன்றி வேறுயாருமல்ல.

இப்போதுகூட நிலைமை கைமீறிப் போகாது-புலிகள் இயக்கம் சமர்ப்பித்திருக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான வரைவின் அடிப்படையில் பேச்சுக்களை அரசு ஆரம்பிக்கும் பட்சத்தில் இந்த நிலைமையை தவிர்த்துக்கொள்ள முடியும்.

ஆனால், அரசு அப்படியொரு நிலைமைக்கு தன்னை தயார்ப்படுத்துவதாக இல்லை.

மீண்டும் சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவை கூட்டுவது தொடர்பாகவும், பழைய பல்லவியான அனைத்துக்கட்சிகளை சந்தித்துப் பேசுவது, ஜே. வி. பியோடு புதுவருடத்தோடு பேசுவது என காலத்தை இழுத்தடிக்கும் காரியங்களில்தான் அரசு காரியமாற்றுகிறது.

இந்த நிலையில் அரசின் இந்த ஏமாற்று நாடகங்களின் மத்தியில் போர்நிறுத்த உடன்படிக்கை செயலிழக்கவாய்ப்பில்லை என, எப்படி நம்பிக்கை வெளியிடமுடியும்.

அவ்வாறானதொரு நம்பிக்கையை வெளியிடவேண்டுமாயின யுத்த நிறுத்த உடன்படிக்கை ஆபத்துக்குள்ளாவதற்கு காரணமாக இருக்கின்ற, ஆரம்பிக்கப்படாத சமாதானப் பேச்சுவார்ததையினை விரைந்து ஆரம்பிப்பதற்கு அரசுக்கு காத்திரமான அழுத்த பிரயோகங்களை மேற்கொள்ளப்படவேண்டும்.

அத்தோடு, தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கையை புரிந்துகொண்டுள்ளதன் அடிப்படையில் தமிழ்மக்கள் தொடர்பாக சர்வதேச நாடுகள் நல்முயற்சிகள் சிலவற்றை மேற்கொள்ள வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ் மக்கள் இந்த மூன்றாண்டுகாலமாக அனுபவித்துவரும் 'அரசியல்வெறுமையை' போக்க உருப்படியான நடவடிக்கைகளை எடுக்க சர்வதேச சமூகம் உரியமுறையில் பாடுபடவேண்டும்.

இதுவே இன்று அவசரமாக சர்வதேச சமூகம் செய்ய வேண்டிய பணிகளில் ஒன்றாக இருக்கிறது.

வெறும் அறிக்கைகளால் தமிழ் மக்களின் அதிருப்தியையும் நியாயமான கோரிக்கையையும் நிறைவேற்றமுடியுமா?

# தமிழ் மக்களின் தேர்வுக்கு சிங்கள தேசம் விடுவது...?

**இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத்திட்டத்தின் அடிப்படையில் அரசு பேச்சுக்குத் தயார் இல்லை என்பதில் அரசு உறுதியாகவுள்ளது.**

**சிங்கள தேசத்தைப் பேச்சுவார்த்தை மேசையில் இனி சந்தித்துப்பேசுவதில் அர்த்தமில்லையென்ற சூழலையே அரசு உருவாக்கிவருகின்றது. தமிழர் படையினை போருக்கு இழுப்பதற்கான நடவடிக்கையிலேயே அரசு ஈடுபட்டுள்ளது.**

"எங்களைப் பாதுகாப்பதற்கு எங்களைத் தவிர வேறுயாரும் வரமாட்டார்கள்" என்பதனை ஒவ்வொரு தமிழரும் உணரவேண்டிய காலகட்டம் இது.

தமிழினத்தை அடிமை கொள்வதையே அடிப்படைக்கொள்கையாக சிங்கள மேலாதிக்கவாதம் கொண்டுள்ளது. ஆகவே தமிழ் மக்கள் அனைவரும் போராடும் மனநிலையில் இருக்கவேண்டும்.

கடந்த கால சமரச முயற்சிகள் அனைத்தும் அர்த்தமற்றதாகி விட்டது. இது விழலுக்கு இறைத்த நீராகிவிட்டது. இந்த நிலை தொடர்வதில் அர்த்தமில்லை. கைகுலுக்கல்களும், பேச்சுக்களும், ஒப்பந்தங்களும் விருந்து உபசாரங்களும் சுற்றுப்பயணங்களும் விமானப்பறப்புக்களும் தமிழருக்கான தீர்வைத் தரவில்லை.

பேச்செனிலும், போரெனிலும் தமிழன் அமைதிக்கானதாகவும் விடுதலைக்கானதாகவும் இருக்கவேண்டும். ஆனால், அமைதிப பேச்சுவார்த்தை அசௌகரியங்களைத்தந்ததேயொழிய விடுதலைக்குப் பயனேதும் தரவில்லை.

மயக்க வாசகங்கள் காற்றலையில் வந்துகொண்டிருக்கிறது. தமிழ்மக்கள் அதில் மயங்கி விடாமல் அவற்றை புறமொதுக்கி சுவாசிக்க வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தலில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு தமிழீழ மக்களின் "மக்கள் ஆணை" கிடைத்திருக்கிறது.

அதனை சிங்கள அரசு வழங்க மறுத்தால் வேறு எதனை தரப்போகின்றது. தமிழரின் உரிமைகளை வழங்குவதில் சிங்கள அரசுக்கு உடன்பாடு இல்லை. இனியும் சிங் கள அரசுக்கு தமிழர்களின் அகிம்சைமொழி விளங்காது. தமிழர்கள் இனி ஆயுதமொழியில்தான் பேசவேண்டும் என [illegible]ருதுகிறதுபோலும்.

இன[illegible] விடுதலைக்காகத் தமிழர்கள் விலை கொடுக்கவேண்டியுள்ளது. கொடுத்தே ஆகவேண்டும், இடைவெளியில் பயணத்தை முடிக்க முடியாது.

இன்று ஒரு முக்கிய காலகட்டத்தில் தமிழினம் உள்ளது. சுதந்திர நாடு நோக்கிய பயணத்தில் முக்கிய காலகட்டம் தமிழீழ விடுதலைக்குப் போர் பயணம் தொடரவேண்டிய காலகட்டம், சமரச வழியில் எமது உரிமைகள் கிடையாது என்பதனை உணர்த்துகின்ற காலம். ஆகவே தமிழர்கள் எல்லோரும் போராடத் தயாராக இருக்கவேண்டும்.

போர் இல்லையேல் வாழ்வு இல்லை என்றநிலையில் தான் இன்று தமிழினத்தின் நிலையுள்ளது.

வாழ்வதற்காக போராடவேண்டிய தேவை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இனியும் மென்முறை வழியில் செல்வதில் அர்த்தமிருக்கிறதா?

தமிழர் தேசத்தின் பாதுகாப்பும் அதன் தலைவிதியும் இன்றைய தமிழீழ தலைமுறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்தப் பொறுப்பை இன்றைய தலைமுறை ஏற்றுக் கொள்ளவேண்டும். ஒதுங்கிவிட முடியாது.

தமிழினத்தின் உரிமைக்கு மதிப்பளிக்காத சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களை மீண்டும் ஆயுதம் ஏந்தத் தூண்டுகின்றது.



அண்மைக்கால சமரச முயற்சிகள் அனைத்தும் தோல்வியிலேயே முடிந்துள்ளன. சமரச வழியில் தமிழர் போராட்டத்தை இழுத்துச் செல்வதில் எனியும் அர்த்தமில்லை.

சிறிலங்கா அரசு நடந்து கொள்ளும் விதத்தைப்பார்த்தால் பேச்சுவார்த்தைமூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் எண்ணம் அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. யுத்த நிறுத்த காலத்தை தமக்குச்சாதகமாகப்பயன்படுத்தி போருக்கான ஆயத்தங்களிலீடுபட்டு ஆயுதங்களை வாங்கிக் குவித்து இராணுவத்தீர்வையே சிங்கள அரசு எதிர்பார்த்திருக்கின்றது. சிங்கள அரசு இராணுவத்தீர்வில் நாட்டம் கொண்டிருப்பதினால் தமிழர்களும் இனி இராணுவத்தீர்வுக்காக போராட்டத்தில் குதிக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

தமிழினத்தையும் போராட்டத்தையும் பாதுகாப்பதற்காக தமிழ் மக்களுக்கு மீண்டும் ஆயுதம் ஏந்திப் போராடவேண்டிய சூழல் ஏற்படுகின்றது, தமிழர் தாயகம் தமிழர் தேசியம் சுயநிர்ணய தன்னாட்சி உரிமையினை சிங்கள தேசம் அங்கீகரிக்கப்போவதில்லை.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தின் அடிப்படையில் அரசு பேச்சுக்குத் தயாரில்லை என்பதில் அரசு உறுதியாகவுள்ளது.

சிங்கள தேசத்தைப் பேச்சுவார்த்தை மேசையில் இனி சந்தித்துப் பேசுவதில் அர்த்தமில்லையென்ற சூழலையே அரசு உருவாக்கி வருகின்றது. தமிழர் படையினை போருக்கு இழுப்பதற்கான நடவடிக்கையிலேயே அரசு ஈடுபட்டுள்ளது.

சிங்கள அரசு ஒரு புறம் போருக்கான ஆயத்தங்களை செய்துகொண்டு மறுபுறம் தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்ற சமாதானக்கொடியை தூக்கியுள்ளது.

தமிழர் தரப்பு இனியும் பொறுமையினை கடைப்பிடிக்க முடியாது. ஆகவே தமிழ் மக்களும் போர்க்கோலம் கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

சிங்களப் பேரினவாதிகளை இனியும் தமிழர்கள் நம்பமுடியாது, நம்பிக்கெட்டகாலம் முடிந்துவிட்டது, இனியும் அரசின் கால இழுத்தடிப்புக்குள் தமிழ் மக்கள் புதையுண்டு போனால் தமிழரின் விடுதலையும் உரிமையும் கேள்விக்குறியாவது நிச்சயம், என்பதனை கடந்தகால வரலாறு சொல்லும் பாடத்தைப் புரட்டிப் பார்த்தால் யதார்த்தம் புரியும்.

தமிழ் மக்களின் விடுதலைக்கு தமிழீழ தனியரசுக்கான வழியில் யுத்த நடவடிக்கையில் எல்லோரும் இணைந்து ஈடபடவேண்டியதுதான் தமிழ்மக்களுக்கு எஞ்சியுள்ளது. தமிழ் மக்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழவேண்டுமேயானால் அது தமிழீழ தனியரசைத்தவிர வேறு எதுவாக வும் இருக்கமுடியாது.

**சசி.சங்கரன்**

# காத்திருப்பின் அறுவடை



பொறுமை காத்து, சீண்டல்களுக்கும் ஆத்திரமூட்டல்களுக்கும் ஆட்பட்டுவிடாமல் இராசதந்திர நிதானத்துடன் காத்திருந்த புலிகளின் சாணக்கியம் அறுவடைகளைத தரத்தொடங்கியிருக்கிறது. அறுவடை நேரடியாகத் தமிழர் தரப்புக்குக் கிடைக்காவிடினும்; தமிழர் தரப்பினுடைய காத்திருப்பின் பின்னான நிதானம், நியாயம் என்பன சர்வதேச சமூகத்தின் கணிப்பீட்டில் கவனத்திற்கெடுக்கப்பட்டிருக்கின்றன. அத்தோடு எதிர்த்தரப்பின் பித்தலாட்டங்களே சமாதான முயற்சிகளுக்கான தடைக்கல்லாக விளங்குவது வெளிப்படுத்தப்பட்டு, கண்டிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சக்திகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா அம்மையாருக்கு நேரில் வலியுறுத்தியிருக்கின்றது சர்வதேச சமூகம். இன்னொரு விதத்தில் சொல்வதானால் இன்றைய சிறிலங்காவின் பொருண்மிய வண்டி ஓடுவதற்கு எரிபொருள் ஊற்றும் கொடையாளர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ஆக, அம்மையாருக்கு அங்கோ இங்கோ வெட்டியோடி மறித்தான் விளையாட்டுக்காட்ட எந்த ஊடுகளுமே இல்லாது நெத்தியடியும் கிடுக்குப் பிடியும் விழுந்துவிட்டன.

உண்மையில், "ஜே.வி.பி உள்ளிட்ட பேரினவாத சக்திகளின் போக்கே சமாதான நடவடிக்கைகளின் நகர்வுக்கு தடையாகவுள்ளன. அவற்றை சனாதிபதி கட்டுப்படுத்த வேண்டும்," என்றவாறாக விடுக்கப்பட்ட அறிவுறுத்தல், அதனது பின்னணியில் மிகப்பெரிய இராசதந்திர அழுத்தங்களைக்கொண்டிருக்கிறது. இராசதந்திர மொழியென்பது வெளிப்படையாகத் தெரிவதிலும் பார்க்கிலும் கனமான, விவகாரமான உள்ளடக்கங்களைத் தன்னகத்தே கொண்டிருப்பது அரசறிவியலின் அடிப்படை உண்மைகளில் ஒன்று. அதன்படி பார்க்கில், இந்தச் செய்தி பல கூறுகளாகப்பகுத்து நோக்கப்படவேண்டியதாகும். இதனுள்ளே ஒன்றுக்கு மேற்பட்ட செய்திகள் உள்ளன என்பதோடு, ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்கும் செய்திகள் உள்ளன என்பதும் கவனிக்கத்தக்கது.

சமாதான நடவடிக்கைகளின் ஆரம்பத்துக்குத் தடையாகவுள்ள பேரினவாத சக்திகளைச் சனாதிபதி கட்டுப்படுத்தவேண்டும் என்றால்; அவை அவரது கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன என்பதே சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு என்பது பெறப்படுகிறது. எனவே சந்திரிகா அம்மையாரும் சமாதான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதன் தாமதத்துக்கு பொறுப்பேற்கவேண்டும் என்பது அதன் உட்கிடையான செய்தியாகும். ஏனெனில், சர்வவல்லமையும் பொருந்திய நிறைவேற்றதிகார சனாதிபதிக்கு, தனது கட்டுப்பாட்டிலுள்ள சில சக்திகளைச் சம்மதிக்க வைத்து சமாதான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதென்பது 'மலையைக் கவ்வி எலியைப் பிடிக்கும்' வேலையல்ல, ஆகவே சனாதிபதியிடம் வழங்கப்பட்ட செய்தி என்பது உண்மையில் சனாதிபதிக்கு வழங்கப்பட்ட செய்தியென்றே கொள்ளப்படுதல் தவறானதல்ல.

இந்த இராசதந்திரச் செய்திக்கு, ஜே.வி.பி தனது வழக்கமான குதர்க்கப் பாணியிலும் எடுத்தெறிந்து பேசும் தொனியிலுமே பதிலளித்திருக்கிறது. உதவி வழங்கும் நாடுகளின் கூற்று தமக்கு ஆச்சரியமளிப்பதாகக் கூறியுள்ளது அது.

ஜே.வி.பி யானது தன்னைத் தானே அம்பலப்படுத்திக் கொள்ளும் செயற்பாட்டில் இதுவும் ஒன்றாகும். புலிகளின் ஆலோசனைப்படி பேச்சுக்களை நடாத்த முடியாது. அப்படிப் பேச்சு நடத்த ஜே.வி.பி அனுமதிக்காது, அரசாங்கம் அதை மீறிப் பேச்சுக்களை ஆரம்பித்தால் அரசாங்கத்தைக் கவிழ்த்து விடுவோம் என மிரட்டிவரும் ஜே.வி.பி:

இதனையே பட்டிதொட்டு எங்கும் பரப்புரைசெய்து இனவாத சிந்தனைக்கு சிங்களமக்கள் மத்தியில் புதுப்பொலிவு கொடுத்துவரும் ஜே.வி.பி உதவி வழங்கும் நாடுகளுக்கு வழங்கியிருக்கும் பதிலைக் குதர்க்கமானது, திசைதிருப்பும் பாணியிலானது என்று குறிப்பிடுவதில் தவறில்லையல்லவா?

நோர்வே புலிகளுக்குச் சார்பாகச் செயற்படுவதாகக் கூப்பாடு போடுவது இவர்களது பிந்திய கைங்கரியங்களில் முதன்மையானது. எனவே நோர்வேயைச் சமாதான முயற்சிகளிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்றும், இந்தியாவுக்கு அந்தப் பாத்திரத்தை வழங்கவேண்டும் என யதார்த்தம் இன்றிப் புலம்பும் ஜே.வி.பி முந்திரிக்கொட்டைத் தனமாகத் தாமே அரசாங்கம் என்ற தோரணையில் நோர்வேக்கு ஒரு கடிதம் எழுதப்போக அது சந்திரிகா அம்மையாருக்கு மிகுந்த சங்கடங்களை ஏற்படுத்தியதும் குறிப்பிடத்தக்கது.




உண்மையில் உதவி வழங்கும் நாடுகளின் சனாதிபதிக்கான செய்தியின் பின்னணியில் ஜே.வி.பியின் இந்தப் பித்தலாட்டங்கள் இருந்தன என்பது வெளிப்படையானது.

இதன் மறுபக்கம் என்னவெனில்; தமிழர் தரப்பு வெளிப்படையாகவும்; மாற்றங்கள், பிறழ்வுகள் இன்றியும் சொல்லிலும் செயலிலும் தனது அரசியல் நிலைப்பாட்டினை முன்வைத்து வந்ததாகும். தமிழ் மக்களின் அன்றாட வாழ்வுப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படல் வேண்டும், அதற்கு ஒரு இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான வரைபினை முன்வைத்து அதன்மீது தமிழ் மக்களின் ஒட்டுமொத்த வாக்குகளையும் பெற்றுச்சமர்ப்பித்துவிட்டுப் பொறுமை காக்கும் தமிழர் தரப்பின் கருத்துக்கள் ஏதோ ஒருவகையில் சர்வதேச சமூகத்தின் செவிகளை எட்டியுள்ளன.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான யோசனைகள் முடிந்த முடிவல்ல. அதில் பிரச்சினைகள் இருந்தால் அவற்றைப் பேச்சு மேசையில் தீர்த்துக்கொள்ளலாம். உடனடியாக இந்த யோசனை மீது பேச்சுக்களை ஆரம்பியுங்கள் என்ற செய்தியை கடந்த 14மாதங்களாகப் புலிகள் திரும்பத் திரும்ப முன்வைத்து வருகின்றமை புரிந்துகொள்ளப்பட்டிருக்கின்றது.

கடந்த ஒக்ரோபரில் புலிகள் மேற்கொண்ட ஐரோப்பியப் பயணத்தின் போது சுவிஸ் வெளிவிவகார அமைச்சுக் குழுவிடம் இதைக் கூறியிருந்தனர். அதைச் செவியேற்றுக் கொண்ட பின்னர் சிறிலங்காவுக்கு வந்திருந்த சுவிஸ் வெளிவிவகார அமைச்சர் மிச்சரின் அம்மையார்;

**"இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனை என்பது பேசித் தீர்க்கமுடியாத விவகாரமல்ல என்று புலிகள் எமக்குத்தெரிவித்தனர். அதையே நாம் எடுத்து வந்து சிறிலங்கா அரசுக்குத் தெரிவித்திருந்தோம். பேச்சு . மேசைக்கு விரைந்து திரும்புங்கள் என்ற செய்தியை அரசு- புலிகள் இரு தரப்புக்கும் விடுக்க விரும்புகிறோம்" என்று கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தமை, சர்வதேச சமூகத்தின் மனப்போக்கில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தின் முக்கிய குறிகாட்டியாகும்.**

**புலிகளின் செய்தியை அரசுக்குக் கொண்டுவந்ததுவும், "பேச்சு மேசைக்குத் திரும்புங்கள்" என்ற ஒரே செய்தியினை அரசுக்கும் புலிகளுக்கும் விடுத்ததுவும் நிச்சயமாகப் பெரும் திருப்பமே. ஏனெனில் முன்பெல்லாம் இந்தச் செய்தி தனியே புலிகளுக்கு மட்டுமே விடுக்கப்பட்டு வந்திருந்தது கவனிக்கத் தக்கது.**

**இதன் அடுத்தகட்ட வளர்ச்சியாகவே உதவிவழங்கும் நாடுகளின் பேரினவாத சக்திகளை முன்வைத்ததாக சந்திரிகாவுக்கு வழங்கப்பட்ட செய்தி வந்திருக்கிறது. இதன் முக்கிய அம்சம் என்னவெனில், இது அரச தரப்புக்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது.**

**இதைத்தான்; காத்திருப்பின் நிதானத்தின் அறுவடை என முற்பகுதியில் குறிப்பிடப்பட்டது. தமிழர்தரப்பு இராசதந்திரக்களத்தில் முதிர்ச்சியையும் வீச்சையும் வெளிப்படுத்தி வெற்றிகளை ஈட்டத் தொடங்கிவிட்டதன் ஒரு வெளிப்பாடு இப்போது வந்திருக்கிறது.**

பு.சத்தியமூர்த்தி

---

## சந்தேக மணியத்தார்...



என்ன பெரியண்ண இந்த முறை சகுனம் அவ்வளவு நல்லதாய் இருக்கவில்லையாம்.... என்ன... என்னடாப்பா எதைச் சொல்லுறாய்... எல்லாம் எங்களைப் பற்றியதுதான் எங்களோடை சம்பந்தப்பட்ட பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட பிரச்சினைக்குரிய ஆளின்ர வருகையோடு சம்பந்தப்பட்டதுதான்.

யாரடாப்பா... நீ என்னவோ பார்த்தீபனும் வடிவேலும் கதைச்ச குண்டக்கா மண்டக்கா போல கதைக்கிறாய்.

சரி.... சரி விசயத்துக்கு "டிரெக்டா" வாரன் உவர்தான் எங்க எரிக்சொல்ஹெய்ம் இலங்கைக்கு வந்தவரெல்லோ ஓமோம்.. ஓமோம்.

அவர் இஞ்ச வாறத்துக்கு முதலே ஹெலி விடமாட்டம், வாகனத்திலதான் விடுவம் எண்டெல்லாம் பேசினவை பிறகு பார்த்தா ஹெலியை விட்டினம், அதையும் பிறகு அனுராதபுரத்தில வைச்சு அரைவாசியோட காலநிலை பிழையெண்டு சொல்லி மனுசனை இறக்கி காவலுக்கு இரண்டு பொலிஸ்காரர் இருந்த பள்ளிக்கூடத்தில கணிசமான அளவு நேரம் காக்க வைச்சாப்பிறகு வாடகை வாகனத்தில வவுனியாவுக்கு அனுப்பி வவுனியாவிலிருந்து பிறகு வேற வாகனத்தில கிளிநொச்சி வந்தவரெல்லோ எரிக்சொல்ஹெய்ம் அது சரி இதையேன் உப்ப நீ கிளறுறாய் மணியண்ண.

ஒண்டுமில்லை பெரியண்ண எனக்கு உதுல ஒரு சந்தேகம்.

அப்படியென்ன சந்தேகம் உனக்கு. அது சரி உன்ர வீட்டை பூட்டிப் போட்டுத்தான் வந்தநீயோ.

அண்ண குளப்பிப் போட்டியள் என்னை இனி வீட்டபோய் பார்க்கவேணும் வீடு பூட்டிக்கிடக்கோ எண்டு.

சரி...சரி.... விசயத்துக்கு வா

அதென்ன ஹெலி விட மாட்டம் எண்ட விசயத்தில் பாதி வெற்றியும் பாதி தோல்வியுமாய்... சும்மா விழுந்தும் மீசையில மண் படேல்ல எண்டாப் போல காட்டத்தான் அந்த நாடகம் எண்டு நான் நினைக்கிறன்.

அப்ப அம்மையாரோட சொல்ஹெய்ம் கதைச்சுக் கொண்டு இருக்கேக்குள்ளதான் நோர்வே தூதுவரகத்துக்கு அந்திராக்ஸ் பவுடரும் அனுப்பினவையாம் விசயத்த உடனேயே செல்போனில சொல்ஹெய்முக்கு நோர்வே தூதுவராலயக்காரர் அறிவிச்சவயாம் ஆளிண்ட முகம் உடனேயே அவ்வளவு நல்லாய் இல்லையாம். அம்மையார் கூட ஆளிட்ட இருந்துதான் விசயத்தை தெரிஞ்சு கொண்டவவாம்.

பத்தாதுக்கு புலிகளுக்கும் நோர்வே காரருக்கும் இடையில நடந்த தொலைபேசி உரையாடல் ஒட்டுக் கேட்ட விசயமும் அம்பலத்துக்கு வந்திருக்கெல்லே.

அது சரியடாப்பா நீ என்ன தான் சொல்லவாறாய்.

அது ஒண்டுமில்ல சண்டை மறிக்கவந்தவ அதாவது சமாதானம் செய்ய வந்தவ கொஞ்சம் ஆத்திரப்பட வேணும் எண்டும் சொல்லுறன்.

அதாவது தங்கட அதிருப்தியை காரசாரமாய் கொஞ்சம் சொல்ல வேணும் எண்டுறன்.

உனக்கு எல்லாம் சந்தேகம் தான். நீ வீடு பூட்டிக்கிடக்கோஎண்டு போய்ப் பார்.

நான் வாறன்.

# விபத்துக்களைத் தூண்டும் வீதி விளம்பரங்கள்




**எஸ். ஜெயா**

இன்று ஏ9 நெடுஞ் சாலையின் உள்நுழைவுத் தடைநீக்கத்தினால் பன்னாட்டுக்கம்பனிகள் யாழ்குடா நாட்டினை நோக்கிப்படையெடுத்த வண்ணமிருப்பதோடு, அவை யாழ்குடா நாட்டினை, அதிக இலாபம் ஈட்டக்கூடிய பொருட்கள், சேவைகளை விற்கும் விற்பனைச் சந்தையாகவும் நோக்குகின்றன.

இத்தகைய நோக்கினை அவர்கள் அடைவதற்கும் அதிக மூலதன இலக்கினை எட்டுவதற்கும் யாழ்குடா நாட்டின் பண்பாட்டியல் காலசாரப் பழமைகளை தமது வணிக நோக்கிற்கு ஏற்ப நெகிழ்ச்சிகாண வைக்க வேண்டிய ஒரு தேவை ஏற்படுகின்றது.

அவ்வாறு தமது வணிக நோக்கிற்கேற்ப நெகிழ்ச்சிகாண வைப்பதன் மூலமே, தமது சந்தை வாய்ப்பினை பன்னாட்டு கம்பனிகள் பரவலடையச் செய்வதோடு, இலாபம் என்ற மூல நோக்கினையும் அடைய முடியும். இதற்காகவே இவர்கள் விளம்பரம் என்ற "தகவல் யுத்தம்" ஒன்றைத் திணித்துள்ளனர்.

இதன் மூலம் தமிழ் பண்பாட்டின் யாழ்ப்பாண கலாசாரத்தினை ஆட்டங் காண வைத்ததோடு மட்டுமல்லாது நாகரிகம் எனும் பெயரால் மாற்றம் காணவும் செய்துள்ளனர். இவர்கள் மக்கள் மீது விளம்பரத் தகவல் யுத்தத்தினை நடாத்துவதற்கு தேர்ந்தெடுத்த போர்க் களங்களே, பிரதான நெடுஞ்சாலைகளாகும்.

இதன் மூலம் இவை ஒவ்வொருநாளும் ஒவ்வொரு தடவையும் இவ்வீதி வழியாகப்பிரயாணம் செய்கின்ற ஒவ்வொருவரதும் உளத்தில் ஆழ்ந்த பாதிப்பினை ஏற்படுத்தி விடுகின்றன. இப்பாதிப்பானது காலப்போக்கில் அப் பொருளை நுகர வேண்டுமென்ற வெறியினை ஒருவரது உள்ளத்தில் தூண்டுவதால் அவர்கள் அப்பொருளினை நுகர வேண்டிய (அப்பொருளுக்கு அடிமையாகும்) கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இப்படிப்பட்ட ஓர் நிலையினையே விளம்பரத் தகவல் யுத்தம் செய்வோர் எதிர்பார்ப்பதால் இது அவர்களுக்குச் சாதகமாக அமைந்துவிடுகின்றது. இந்நிலையானது ஏனைய நுகர்வோரையும் தகவல் யுத்தத்தில் எதிர்த்துப் போரிட முடியாது சரணாகதியை அடைய வைத்து விடுகின்றது. அதாவது ஒரு பொருளினை அதன் சாதகமான தன்மைகளை மட்டும் கூறி விளம்பரப்படுத்துகின்ற போது, நாம் அப்பொருளினை உடனடியாக நுகர்வதோடு மட்டுமல்லாது அதற்கு அடிமையாகவும் மாறிவிடுகின்றோம்.

ஆனால், இதன் பாதகமான விளைவுகள் பற்றியோ, நிதியியல் பெறுமானங்கள் பற்றியோ சிந்திப்பதில்லை. அதாவது எம்மை விளம்பர உலகம் சிந்திக்க விடுவதில்லை என்பதாகும். அதன் மூலம் விளம்பர உலகம் நுகர்வோரை வசீகரித்து வெற்றிகண்டு விடுகின்றது. இதுவே தகவல் யுத்தத்தின் உச்ச நிலையான வெற்றி எனலாம்.

உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டால் இன்று எல்லோரும் ஒரு கைத்தொலைபேசியுடனும், மோட்டார் சைக்கிளுடனும் திரிவதனைக் காண முடிகின்றது. இது தகவல் யுத்தத்தில் விளம்பரம் மனிதனை அடிமை கொண்டு விட்டதனையே எடுத்துக் காட்டுகிறது. இந்த அடிமைத் தனமானது ஏனையோரிடையேயும் பரவலடைந்து அந்த சமூகத்தினையே அடிமையாக்கி விடுகின்றது.

இதனால் இச் சமூகம் இதிலிருந்து மீளுவது கடினமாகின்றது. இதுவே பன்னாட்டுக் கம்பனிகளின் வர்த்தக வாணிப இலக்கிற்கு சிறந்த ஆதாயம் தேடிக் கொடுக்கின்றன. இப்படியே இத்தகைய விளம்பர இலக்கிற்கு அடிமைப்பட்டுப் போன சமூகம் பின்பு அதன் பாதகத்தன்மையைப் புரிந்து கொண்டாலும் அதிலிருந்து மீண்டெழ முடியாது தவிக்கின்றது.

உதாரணமாக புகைத்தல், மதுபானம் போன்ற விளம்பரங்களால் கவரப்பட்டு அக்கலாசாரத்துக்குள் உள்நுழைந்தவர்கள், புனர்வாழ்வு பெறமுடியாது தவிப்பதைக் காணலாம். இந்நிலைமையானது, எம்மைவிட்டு பன்னாட்டுக் கம்பனிகள் நகர்ந்தாலும் அவர்களை நோக்கி நாம் ஓட்டமெடுக்கும் நிலையினையே தோற்றுவித்து விடுகின்றது. இதுவே இன் நூற்றாண்டின் விளம்பர யுக்தியின் சிறப்பெனலாம்.

இன்று விளம்பர யுக்திகளில் ஒன்றாகவே பிரதான நெடுஞ்சாலைகளை விளம்பரம் செய்யப் பயன்படுத்துகின்றனர். கண்டி நெடுஞ்சாலை (ஏ9) யாக இருந்தாலும் சரி, ஏனைய பிரதான சாலைகளாக இருந்தாலும் சரி வீதிகளின் ஓரங்களில் விளம்பரப்பலகைகள் ஆக்கிரமித்து நிற்கின்றன.

இங்கு ஏ9 பாதையினை எடுத்துக் கொண்டால் இவ்வீதியின் சந்திகள், வளைவுகளில் பெருமளவான விளம்பரப்பலகைகள் தென்படுகின்றன. இத்தகைய விளம்பரங்கள் வீதிவிபத்தினை தூண்டுபவையாகவே அமைந்து விடுகின்றன.

வீதிகளின் வளைவுகளிலேயும், சந்திகளிலேயும் விளம்பரப்பலகைகள் காணப்படும் போது வீதிகளில் வாகனத்தினைச் செலுத்துவோரின் கவனம் விளம்பரப்பலகையினை நோக்கி நகர்வதால், அவர்களின் வீதிக் கண்காணிப்பில் கவனச்சிதறல் ஏற்படுகின்றது. இது எதிரே வரும் வாகனத்தினை குறித்த நேரத்தில் அடையாளம் காண்பதனை தாமதமாக்குவதால் விபத்துக்கள் நிகழ்ந்து விடுகின்றன.

இதனால் வீதி விளம்பரங்கள் தவிர்க்கப்படுதல் வேண்டும். அல்லது அதற்குரிய தர்மங்களை கடைப்பிடிக்க வேண்டும். அதாவது கவர்ச்சியான படங்களைக் கொண்ட வீதி விளம்பரப் பலகைகளை நிறுத்துவது தடை செய்யப்பட வேண்டும். இதன் மூலம் வாகனச் சாரதிகளின் கவனம் கவர்ச்சி மீது ஈர்க்கப்படுவதால் வீண்விபத்துக்கள் தூண்டப்படுகின்றமையை தடுக்கலாம்.

இதேபோன்று சிறிய எழுத்துக்களாலான விளம்பரங்களோ அல்லது நிறைந்த வசனங்களைக் கொண்ட விளம்பரங்களோ வீதி. ஓரத்தில் நிறுத்தப்படுவது தடை செய்யப்பட வேண்டும்.

ஏனெனில் குறுகிய நேரத்தில் வாகனத்தினை செலுத்துபவரால் அதிக செய்திகளை வாசிக்க முடியாது போகவோ அல்லது சிறிய எழுத்துக்கள் கண்ணுக்குப்புலப்படாது போகவோ அவர்கள் அவ்விளம்பரப்பலகையினை உற்றுப்பார்ப்பதாலோ அல்லது திரும்பித் திரும்பி பார்ப்பதாலே கவனச் சிதறல்கள் ஏற்பட்டு வீதிவிபத்து நிகழலாம். இதே போல் அவ்வீதியில் பலர் ஒன்று கூடி நின்று அவ்விளம்பரங்களைப் பார்ப்பதாலும் இடர்பாடுகள் தோன்றுகின்றன.

இதேபோல மேலும் கடின நிறங்களைப் பாவித்து வீதி விளம்பரங்களை செய்கின்றபோது அந்நிறங்கள் இயல்பாகவே மனித உளத்தினை தூண்டுவதற்கு உட்படுத்தி ஓர் பதட்ட உணர்வினை தோற்றுவித்துவிடுவதால் வாகனம் செலுத்துவோர் விபத்தினை அடைய காரணமாகின்றது. சிலருக்கு சில நிறங்களைக் கண்டாலே அலர்ஜ்ஜி ஏற்படுவது வழமையாகும். அது அவர்களின் உளரீதியான தாக்கமாகும்.

அப்படியாயின் இத்தகைய குறைபாடுகளை யார் கவனிப்பது என்ற கேள்விகள் மக்கள் மனதில் தோன்றலாம் இத்தகைய விளம்பரம் செய்யப்படும் பகுதி மாநகரசபையாகவோ அல்லது நகரசபையாகவோ அல்லது பிரதேச சபையாகவோ இருப்பின் அவர்களிடம் அனுமதி பெற்றே விளம்பரம் செய்தல் வேண்டும். அப்பொழுது இதனை சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் தீர்மானித்துக்கொள்ளலாம்.

இந்த எல்லைகளுக்கு உட்படாத அதாவது வீதியோர விளம்பரங்கள் வீதி அதிகார சபையின் அனுமதியுடனேயே செய்யமுடியும். எனவே இவர்கள்தான் இது சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

இத்தகைய சபைகளோ நிர்வாகங்களோ வீதி விளம்பரம் மூலம் தமக்குக் கிடைக்கும் பணவருவாய்களைக் கருத்தில் கொண்டு நடவடிக்கை எதுவும் எடுக்காது இருப்பது போல் தெரிகின்றது. இது மக்கள் சமூகத்தினை பாதிக்கும் ஓர் செயலாக இருப்பதால் இதனை விடுவிப்பது முக்கியமானதொரு கடமையாகும். அதாவது கொடிய தகவல் போரிலிருந்து அணுகுண்டு போல் வெடிக்கும் விளம்பரங்களை சிறைப் படுத்த வேண்டும். அல்லாது போனால் இன்றைய நிலைமையில் எந்த மீடியாக்களை எடுத்துக் கொண்டாலும் பத்திரிகை தொடக்கம் இணையம் வரை விளம்பரப் பூச்சிகளே மொய்க்கின்றன. இவை இப்பொழுது பிரதான பஸ்தரிப்பிடம் தொடங்கி வீதிகள் வரை கலைக்கத் தொடங்கி விட்டன. இன்றைய தகவல் யுகத்தில் இந்த விளம்பரப் பூச்சிகளின் தொல்லைகளால், சமூகத்தில் பாரிய தொற்று நோய் ஒன்று ஏற்படப் போகின்றது. இதற்கு முன்னேற்பாடாகக் கொடிய விளம்பரப் பூச்சிகளை தடை செய்ய தடுப்பு மருந்து சமூகத்தில் விசிறப்பட வேண்டும். அவ்வாறு இல்லாது போனால் இதனால் ஏற்படப் போகின்ற பின்விளைவிற்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்க முடியாது போய்விடும். இது சமூகத்தினை மீள முடியாத நோய்க்குள் அமிழ்த்தி விடும்.

# சமாதானத்தின் எதிரிகள் இனங்காணப்பட்டனர்




சமாதானப் பேச்சு முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக உள்ள சக்தி எது என்பது இப்பொழுது சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளால் உணரப்பட்டுள்ளது. இதனை அவர்கள் வெளிப்படையாகவும் தெரிவித்துவிட்டனர். அதாவது சமாதான நடவடிக்கைகள் தொடர்பில் பிடிவாதமாக நின்று சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடும் சர்வதேச சக்திகளையும் தூற்றித் திரியும் அமைப்பான ஜே.வி.பி இனங்காணப்பட்டு அதற்கு ஓர் எச்சரிக்கையையும் உதவிவழங்கும் நாடுகள் விடுத்துள்ளன.

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் ஆயுதப்போராட்டமாக பரிணாமம்பெற்று அது வளர்ச்சி அடைந்து வந்த காலத்தில் இப் போராட்டத்தை பயங்கரவாதமாகவும் விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகளாகவும் வர்ணித்து அவற்றை நம்ப வைப்பதில் சிறிலங்காவை ஆட்சி செய்து வந்த அனைத்து ஆட்சியாளர்களும் ஓரளவு வெற்றி பெற்றே வந்துள்ளனர்.

இதனை ஒடுக்குவதற்கு சிறிலங்காவுக்கு பல்வேறு சக்திகளும் உதவிவந்தன. உதவிவழங்கும் நாடுகளின் மாநாடுகள் நடைபெறும் போது இலங்கையில் சிறிலங்கா அரச இயந்திரத்தால் தமிழ் மக்கள் மீது புரியப்படும் மனித உரிமை மீறல்கள் பற்றி வெளிப்படுத்தப்பட்ட போதும் சிலவேளைகளில் கவலை தெரிவிக்கப்பட்டபோதும் அவை தமது உதவிகளைக் குறைத்துக் கொண்டதில்லை. சிலவேளைகளில் தாம் கோரிய உதவியிலும் பார்க்க கூடுதலாக கிடைத்துவிட்டதாக சிங்கள அரசுகள் பெருமைப்பட்டுள்ளன. 1983ஆம் ஆண்டு ஜூலைமாதம் தமிழ் மக்களுக்கு எதிராகப் பெரும் வன்முறை வெளிப்படையாகவே சிங்கள இனவாத ஆட்சியாளர்களால் கட்டவிழ்த்து விடப்பட்டபோதிலும் கூட இவ்வாறான நிலையே காணப்பட்டது.

1994 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் தன்னை ஓர் சமாதான தேவதையாகக் காட்டிக் கொண்டு தமிழ் மக்கள் அளித்த வாக்குப்பலத்தால் 62 வீத வாக்குகளைப் பெற்று ஆட்சிபீடமேறிய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பெரும் யுத்தத்தை தமிழ் மக்கள் மீது கட்டவீழ்த்துவிட்டார். தமிழ் மக்களின் வரலாற்றில் என்றுமில்லாத துன்பங்களும் துயரங்களும் சூழ்ந்து கொண்டபோதும், தான் புரிந்த யுத்தத்தை "விடுதலைப்புலிகளிடமிருந்து தமிழ் மக்களை மீட்பதற்கான யுத்தம்" எனவும் "சமாதானத்திற்கான யுத்தம்" எனவும் சர்வதேசத்தை நம்பவைக்க முனைந்தார்.

இதற்கு அவரின் புத்திஜீவிகள் அமைச்சரவையில் அவரால் நியமிக்கப்பட்ட கதிர்காமர் பெரும் பங்காற்றினார். அதில் ஓரளவுக்கு வெற்றியும் கண்டார். இந்தக் காலகட்டத்தில் கூட உதவி வழங்கும் நாடுகள் சந்திரிகா அரசாங்கத்தை நிலை நிறுத்துவதில் பங்காற்றியிருக்கின்றன. சிறிலங்கா ஆட்சியாளரிடம் சுயமான பலம் இல்லாத நிலையில் யுத்தம் அபிவிருத்திக்கென உதவிவழங்கும் நாடுகள் வழங்கிய பணத்திலேயே நடத்தப்பட்டு வந்தது.

ஜே.ஆர் ஜெயவர்த்தனவின் காலத்தில் மகாவலி அபிவிருத்திக்கென வழங்கப்பட்ட நிதி ஏனைய வளங்கள் யுத்தத்துக்குத் திருப்பி விடப்பட்டமை பின்னர் வெளிப்பட்டது.

சனாதிபதி சந்திரிகாவின் முதலாவது ஆட்சிக் காலத்தில் நாட்டின் அனைத்து வளங்களும் யுத்தத்திற்கே எனக்கூறப்பட்டு பாரிய யுத்தம் மேற்கொள்ளப்பட்டது. ஏறத்தாள ஐந்து வருடங்கள் இடைவிடாது நீடித்த பாரிய யுத்தமானது சிறிலங்காவின் அபிவிருத்திகள் அனைத்தையும் நிறுத்திவைத்தது மட்டுமல்லாது அங்கு பொருளாதார அழிவையும் ஏற்படுத்தியது. யுத்தத்தை வடக்கு கிழக்கில் மட்டுப்படுத்தப் பட்டுவிடமுடியும் என இனவாத ஆட்சியாளர் நம்பியதற்கு மாறாக யுத்தம் இலங்கை முழுவதுக்குமானதாக- அனைத்துப் பகு[illegible]யும் சிங்கள மக்களையும் பாதி[illegible]தாக மாறிய போதுதான் சமாதானம் குறித்த எண்ணப்பாடு சிங்கள மக்களிடம் மட்டுமல்ல சர்வதேச ரீதியாகவும் உருவாகியது.

இங்கே உள்ள சிக்கல் என்னவென்றால், நாட்டைப் பாதிக்கும் இனப்பிரச்சினை யுத்தமாயினும் சரி சமாதானமாயினும் சரி கட்சி அரசியலுக்குள் புதையுண்டு இருப்பது தான் அது இன்று நேற்றல்ல தமிழ் மக்கள் சமாதான வழியில் தமது உரிமைகளைக் கேட்ட காலம் முதல் இன்றுவரை அதுதான் நிலைமை.

இந்தவகையில் இன்றைய சமாதான முயற்சிகளும் கூட கட்சி அரசியலுக்குள் அல்லது அதிகாரப் போட்டிக்குள் சிக்குண்டு இழுபறி நிலையை அடைந்துள்ளது. இந்த இழுபறி நிலை சிங்கள அரசியல் கட்சிகளிடையே உள்ளதே தவிர தமிழர் தரப்பிடம் இல்லை என்பது சர்வதேச ரீதியாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது.

இப்பொழுது சமாதான சூழலில்தான் சிறிலங்கா ஆட்சியாளருக்கு உதவிவழங்கமுடியும் என உதவிவழங்கும் அமைப்புக்கள் முடிவுசெய்துள்ளன. ஆனால் நிதி உதவியைப் பெறுவதற்குக் காட்டும் ஆர்வத்தை சமாதான முயற்சியில் காட்ட சிங்கள ஆட்சியாளர்கள் தயாராக இல்லாமையே சமாதான நடவடிக்கைகள் பின்னடைவைச் சந்திக்கக்காரணமாக உள்ளது.

சனாதிபதி சந்திரிகாவும் கூட்டாளிகளும் புலிகள்தான் சமாதான நடவடிக்கைகள் முன்நகரா திருக்கக்காரணமென நிறுவிவிட எடுத்தமுயற்சிகள் பலன்தரவில்லை. அதேவேளை நிர்ப்பந்தத்தின் காரணமாகவேனும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன் வந்தாலும் பங்காளிகளான ஜே.வி.பியினர் அதற்கு முட்டுக் கட்டையாக உள்ளனர்.

அதாவது தமிழ் மக்களின் தரப்பில் விடுதலைப்புலிகள் எடுத்துள்ள நிலைப்பாடு சர்வதேசரீதியாக நியாயமானதாக ஏற்கப்பட்டுவிட்ட நிலையில் மறுதரப்பு சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக இணங்கி வராதிருப்பதும் அதற்கு ஜே.வி.பியே முழுக்காரணமாக இருப்பதும் இப்பொழுது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

தான் இணக்கத்துக்கு வராமைக்கு ஜே.வி.பி விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக் கால நிர்வாகத்திட்டவரைவுதான் காரணம் என இப்பொழுது கூறுகிறது. ஆனால், புலிகள் திட்டவரைவை முன்வைக்க முன்னரே ஜே.வி.பி சமாதான முயற்சிகளை எதிர்க்கத் தொடங்கி விட்டமை வெளிப்படையான ஒன்றாகும்.

அது ஐக்கிய தேசியக் கட்சி சமாதான வழிமூலம் புலிகளுடன் பேசித்தான் பிரச்சினையை தீர்க்கமுடியும் என்பதை 2001ஆம் ஆண்டு 'தனது தேர்தல் மனுவாக வைத்த உடனேயே சமாதான நடவடிக்கைகளை எதிர்க்கத் தொடங்கிவிட்டது. எனவே எந்தத் தீர்வு ஏற்பட்டாலும் அது யுத்தம் மூலம் உருவாக்கப்படவேண்டும். தமிழ்மக்களின் போராட்டத்தை இராணுவ வழிமூலம் அழிக்கவேண்டும் என்ற அடிப்படைக்கொள்கையுள்ள ஜே.வி.பி எந்நிலையிலும் எந்தமட்டத்திலுமான அதிகாரப் பகிர்வை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்பதை நிச்சயமாகக் கூற முடியும்.

"இந்நிலையில் ஜே.வி.பியை பேச்சுவார்த்தைக்கு இணங்கச் செய்யமுடியும். ஐ.தே.கவுடன் இணைந்துசெயற்படுவதைவிட ஜே.வி.பியுடன் பணியாற்றுவது இலகு" என்றெல்லாம் சனாதிபதி கொண்டுள்ள கருத்தானது அவரும் எத்தகைய மன நிலையில் உள்ளார் என்பதுடன் அவர் ஜே.வி.பியின் பௌத்த சிங்கள மன நிலையிலேயே உள்ளார் என்பதையும் வெளிப்படுத்துகிறது.

**வேலவன்**

---

## நேர்நோக்கு

# மக்களின் போராட்டத்தை புரிந்துகொள்ளவேண்டும்



சந்திரிகாவின் தற்போதைய நிலையை ஒப்பிடுவதனால் 'மத்தளத் தோடு' ஒப்பிடுவதே பொருத்தமானதாக இருக்கும்.

அவர் இன்று பல பக்க நெருக்குவாரங்களை சந்தித்துக் கொண்டிருக்கிறார். சமாதானத்துக்கான சர்வதேச அழுத்தம் சமாதானத்துக்கெதிரான ஜே.வி.பியின் அழுத்தம், எஸ்.பி. திஸநாயக்கவை கைது செய்து தன் பழிவாங்கல் திட்டத்தை அரங்கேற்றியதன் விளைவால் ஏற்பட்ட எதிர்க்கட்சியின் அழுத்தம் என நீண்டு கொண்டு போகும் அவர் மீதான அழுத்தத்தின் மற்றுமொரு அடியாக வட கிழக்குப் பகுதியில் வெடித்துள்ள மக்கள் போராட்டங்கள் சந்திரிகாவிற்கான மற்றுமொரு அழுத்தம்.

இவ்வாறு சிறிலங்கா அரசு யுத்தமுனைப்புச் செயற்பாடுகளை நிறுத்தி இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில் பேச்சுகளை ஆரம்பிக்குமாறு கோரி கடந்த 20.12.2004 இல் சாவகச் சேரியில் மாபெரும் மனிதச் சங்கிலிப் போராட்டம் ஒன்றும் நடைபெற்றுள்ளது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் பெருமளவான மக்களும் கலந்து கொண்டு தங்கள் உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்தியுள்ளனர். இதில் 'எமது நிலம் எமக்குவேண்டும்'. 'எங்கள் தலைவர் பிரபாகரனே' 'விடுதலைப்புலிகளிடம் இடைக்கால நிர்வாக சபையை வழங்கவேண்டும்' என்ற கோசங்களை மக்கள் எழுப்பியதுடன் பதாதைகளையும் தேசியத் தலைவரின் படங்களையும் ஏந்தியவாறு இந்த மனிதச் சங்கிலிப் போராட்டம் நகர்ந்தது. தொடர்ந்தும் இவ்வாறான மக்கள் போராட்டங்களை தொடரவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறியுள்ளனர். ஆனால், இனவாத மதவாத சிந்தனைக்குள் ஊறிய பேரினவாத அரசு அகிம்சை போராட்டங்களுக்கும் சனநாயகத்திற்கும் மதிப்பளிக்குமா? கடந்த காலங்களில் (ஆயுதப் போராட்டம் உருவாக முன்பு) வடகிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்களால் நடாத்தப்பட்ட போராட்டங்களுக்கு அவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்காததன் விளைவை இன்று இலங்கை எதிர்கொள்கிறது.

அன்று நடாத்தப்பட்ட அகிம்சை போராட்டங்களின் போது தமிழ் மக்களிடம் அகிம்சை என்ற, சனநாயகம் என்ற, வழியைத்தவிர வேறு வழி இருந்ததில்லை, அவர்கள் அன்று சனநாயகம் எனும் கோட்பாட்டின் பெயரால் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்பட்டார்கள்.

ஆனால் இன்று தமிழர்கள் இலங்கை அரசை போன்ற ஒரு மரபு வழி இராணுவத்துடனும், சமபலத்துடனும் இருக்கின்றார்கள். சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு போற்றப்படும் சனநாயக வழியில் இனப்பிரச்சினையை தீர்க்க திடசங்கற்பம் பூண்டுள்ளார்கள். இதனை தமிழர்களின் பலயீனமான நிலையென கருதி ஆயுத முனையில் தமிழர் போராட்டத்தை ஒடுக்க அரசு முனைகிறது. எனவே அரசின் இந்த யுத்த முனைப்புக் கெதிரான அகிம்சா வழியிலான போராட்டத்திற்கு அரசு மதிப்பளித்து பேச்சுக்கு திரும்பாவிடின் விடுதலைக்கான ஆயுத ரீதியான மக்கள் போராட்டங்கள் வெடிக்கும் என்பது மாற்றுக் கருத்துக்கிடமில்லாத உண்மை. இதுவே இலங்கை வரலாற்றின் கடந்த காலப்பாடம்.

எனவே சந்திரிகா இன்று எதிர்கொள்கின்ற பல பக்க அழுத்தத்தில் ஆபத்தானதும், உதாசீனம் செய்யமுடியாததுமான ஒரு போராட்டமாக வடகிழக்குப் பகுதியில் வெடித்துள்ள மக்கள் போராட்டம் உள்ளது.

ஒரு பேரினவாத அரசுக் கெதிராக மக்கள் சனநாயக வழியில் போராட்டங்களை நடத்தி தங்கள் உரிமைகளை பெற்றுக்கொள்ள முடியாதென்பது இலங்கை இனப் பிரச்சினை விவகாரத்தை வைத்து சர்வதேச சமூகம் புரிந்துகொண்டிருக்கும். இன்று மக்கள் உண்மையான சமாதானம் வேண்டி அகிம்சா வழியில் நடத்துகின்ற போராட்டங்களுக்கு செவி சாய்த்து, காலந்தாழ்த்தி விடுதலைப்புலிகளுடன் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்த முன்வரவேண்டும் எனக் கோரி நிற்கின்றனர். இம்மக்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொள்கின்றதோ இல்லையோ சர்வதேச சமூகம் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும் என்பதும் தமிழ்மக்களின் விருப்பமாகும். ஏனெனில் கடந்த காலங்களில் மூடிமறைக்கப்பட்ட படுகொலைகள் மனித உரிமை மீறல்கள் போன்ற அரச பயங்கரவாத நடவடிக்கைகள் இனிவரும் காலங்களில் மூடி மறைக்கப்படாது வெளிக்கொணரப்படவேண்டுமாயின் சர்வதேச சமூகம் தமிழர்களின் நியாயமான அரச பயங்கரவாதத்திற்கெதிரான போராட்டத்தை புரிந்துகொள்ள வேண்டும் என்பதே.

**ஏநல்**

கடந்த ஆண்டுகளை தொடர முதல் நிகழ்தீவகத்தை ஒரு தடவை பார்க்கலாம்.
யாழ்ப்பாணம் தீவகம் சிறிலங்கா படையினரின் இரட்டை முற்றுகைக்குள் உள்ள பிரதேசமாகத் தொடர்ந்துள்ளது.

இராணுவ ஆட்சி நிலவும் யாழ்ப்பாணத்தினுள் சிறிலங்காக்கடற் படையினரின் ஆட்சியுள்ளதாக தீவகம் உள்ளது.

யாழ்ப்பாண நிலப்பரப்பு சுற்றுப்புற கடற்கரைகள் வேலிகளால் அமைக்கப்பட்டு படையினரால் முழுதும் முற்றுகைக்குட்பட்டதாக உள்ளது. இதில் மாதகல் முதல் தொண்டமனாறு வரையான கடற்கரை முற்றுமுழுதாகத் தடை செய்யப்பட்ட பகுதி. தூரத்திலிருந்து கூட அதனை பார்க்கக்கூடமுடியாத உயர் பாதுகாப்பு வலயம் அது.

இராணுவ முற்றுகைக்குள் கடற்படை முற்றுகைக்குட்பட்ட தனித்த பகுதியாக தீவகம் உள்ளது.

பொன்னாலைப்பாலம் வழியாக யாழ்ப்பாண பெருநிலப்பரப்புடன்




# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

தாம்போதி வழி இணைக்கப்பட்ட தீவாக காரைநகர் உள்ளது. பொன்னாலைப் பாலத்திலுள்ள சிறிலங்காப்படை சோதனை அரணால் சோதனைகளுக்குள்ளாகியே இங்கு மக்கள் செல்ல முடியும். இங்குள்ள நீலங்காடு என்ற பகுதியில் சிறிலங்கா கடற்படையின் வடபகுதி தலைமைத்தளமான எலரா உள்ளது. காரைநகரின் தெற்குக் கரையில் சீனோர் முதல் மேற்கே கடற்கோட்டை வரையான பகுதி மக்களின் நடமாட்டத்துக்கு நுழைவுக்குத் தடை விதிக்கப்பட்ட அதி உயர்பாதுகாப்பு வலயமாக உள்ளது. சீனோர் முதல் ஊர்காவற்றுறை இறங்குதுறை முதல் மேற்கான கடற்கோட்டை வரையான கடற்பரப்பு முழுமையாக சிறிலங்கா கடற்படை உயர் பாதுகாப்பு வலயமாக முற்றுமுழுதாகத் தடை செய்யப்பட்ட பகுதியாக 2000 ஆண்டுமுதல் இன்றுவரை பேணப்படுகின்றது.

யாழ் கடலேரி மீனவர்கள் இதனூடாகவே பெருங்கடலுக்கு செல்வது வழமை. ஆனால் 1990 முதல் இது தடைசெய்யப்பட்ட பகுதியாகவே உள்ளது. வளமிகு பேசாலை கடற்பரப்பில் கடலேரி மீனவர்கள் மீன்பிடிப்பதாயின் புங்குடுதீவைச் சுற்றியே செல்லவேண்டிய நிலைமை இன்றுமுள்ளது.

காரைநகரில் நீலங்காடு, மருதநகர், கோவளம், கசோரினா கரை, வல்லன் ஆகிய இடங்களில் சிறிலங்கா கடற்படையினரின் பெரிய முகாம்கள் உள்ளன.

படையினரின் சோதனையின் பின்னரே இத்தீவுக்குள் நுழையமுடியும்.

காரைநகர் தவிர ஏனைய தீவுகளுக்கான நுழைவுப்பாதை யாழ் பண்ணைவழியான தாம்போதி வீதிவழியானதாக உள்ளது. இந்த வீதி இருபுறமும் படையினரால் முட்கம்பி வேலியால் அடைக்கப்பட்டுள்ளது. முதலாவது தீவான மண்டைதீவு வேலுசுமண என்ற கடற்படை தளத்தை கொண்ட அதி உயர் பாதுகாப்பு வலயமாக உள்ளது.

இங்கும் சிறிய எண்ணிக்கையில் மக்கள் குடியமர்ந்துள்ளனர். இங்கு மக்கள் செல்லவேண்டுமாயின் நுழைவாயிலில் கடற்படை சோதனைக்குட்பட வேண்டும். மண்டைதீவு அடையாள அட்டை இல்லாதோர் தம்பேர் முகவரியை வழங்கி தன் அடையாள அட்டையை ஒப்படைத்துச் செல்ல வேண்டும். திரும்பு போதே அது திருப்பி வழங்கப்படும். எழுவைதீவு, அனலைதீவு, ஆகிய தீவுகளில் இந்த நடைமுறையே இன்றும் பேணப்படுகின்றது. மண்டைதீவு முழுமையும் கடற்படை அதி உயர்பாதுகாப்பு வலயமாக அதிபலமான முட்கம்பி வேலிகளால் சூழப்பட்டுள்ளது. மண்டைதீவின் கிழக்கே பிரதான கடற்படை தளமும் ராடர் நிலையமும் உள்ளன. குறிப்பிட்ட தூரஇடைவெளியில் உயரமான அவதானிப்பு நிலையங்கள் தேடல்வெளிச்சத்துடன் உள்ளன.

மண்டைதீவின் கரையோர வளமிகு கண்டல் கடுகள் படையினரால் அழிக்கப்பட்டு வெளியாக்கப்பட்டுள்ளன. மண்டைதீவுக்கு ஒளிப்படக் கருவிகள் செல்பேசிகள் கொண்டு செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதற கான அறிவிப்புப்பலகை அதன் நுழைவாயிலில் நிறுத்தப்பட்டுள்ளது.

ஏனைய தீவுகளுக்கு செல்வோர் அல்லைப்பிட்டியில் உள்ள சிறிலங்கா கடற்படையினரால் சோதனையிடப்பட்டே அனுமதிக்கப்படுகின்றனர்.

அங்கிருந்து. வடக்கே ஊர்காவற்றுறை வரையான வேலணைத் தீவு கஞ்சதேவ என்ற கடற்படை தளத்துக்குரிய வலயமாகும். அல்லைப் பிட்டியிலும் மண்கும்பான் பிள்ளையார் கோவிலடியிலும், அதற்கு வடக்கே கடற்கரையிலும், மண்கும்பான் கிராமத்திலும் சாட்டி கடற்கரை, செட்டிபுலம் பெருங்குளம் வேலணைத்துறை,சுருவில் சந்தி, சுருவில் ஐயனார் கோவில் கடற்கரை, புளியங்கூடல் சந்தி, நாரந்தனை, ஊர்காவற்றுறை இறங்குதுறை கைத்தனைச் சந்தி, கரம்பொன் செபஸ்தியார் கோவிலடி E.P.D.P தேசவிரோதிகள் முகாமுடன் இணைந்து, கரம்பொன் கண்ணகை அம்மன் கோவிலடி ஆகிய வேலணைத்தீவின் இடங்களில் சிறிலங்கா கடற்படை முகாம்கள் உள்ளன. அராலிச் சந்தியில் அவதான நிலையமும் கடற்படை சூட்டுப்பயிற்சித்தளமும் உள்ளன.

துருவன்

## தொல்லியல்

# லெமூரியாவின் கபாடபுரமும் யாழ்ப்பாணத்து கந்தரோடையும்

கடலுள் அமிழ்ந்து போனதாகக் கூறப்படும் முது தமிழ் நிலம் லெமூரியாவின் கபாட புரத்துக்கும்- யாழ்ப்பாணத்துக்கும் கந்தரோடைக்கும் தொடர்புள்ளது.

தமிழின் முது நாகரிகமான சிந்துவெளி முதல் தமிழ் மக்களின் முது வரிவடிவங்களை ஆய்வு செய்யும் வாசித்துவரும் பிரபல வரலாற்றாசிரியரும்- சாசனவியலாளருமான தமிழகத்தின் ஐராவதம் மகாதேவனே இக்கருத்தைக் கூறுபவர்.

கடைத் தமிழ்ச்சங்கம், மட்டுமே தமிழகத்திற்குரியது. முதலிரு தமிழ்ச்சங்கங்களும் இலங்கைக்குரியவை. ஆய்வுகள் செய்யப்படவேண்டும் எனவும் ஐராவதம் மகாதேவன் கூறுகிறார். இவர் வரலாற்றை அறிவியல் பூர்வமாக ஆராய்பவர், லெமூரியாவில் தமிழகமும் இலங்கையும் இணைந்திருந்தபோது ஓடிய ஆறுதான் தாமிரபரணி எனப்படும் பொருணைநதி எனக் கூறுகிறார்கள். இலங்கையில் தாமிரபரணியின் தொடராக உள்ள ஆறு- புத்தளத்தின் பொன்பரப்பி ஆறு என்கிறார்கள். பொருணை அல்லது பொருநல் அல்லது தண் பொருணை அல்லது தண் பொருந்தம் என்றழைக்கப்பட ஆறோ ஆரியத்தால் மருவி தாமிரபரணி ஆனது, இதனடிப்புடையிலேயே கிரேக்க அறிஞர் மெகஸ்தனிஸ் இலங்கைக்கு தப்ரோபேன் என கூறியது திரிவு என அறிஞர்கள் கூறுகின்றனர். தாமிரபரணியின் மருவலே சிங்களவர் தமக்குரியதாகக் கூறும் தம்பபன்னி, தாமிரபரணியின் தொடர் எனக்கூறப்படும் புத்தளத்தின் பொன்பரப்பி ஆறு மிகமுக்கியமானதாகும்.

இது தவிர கடல் கோளுக்கு ஆட்பட்டதாக கூறப்படும் முதலிரு தமிழ்ச்சங்கங்களில் கூறப்படும் கபாடபுரம் கந்தரோடையுடன் இணைக்கப்பட்டு பார்க்கும் கூற்று, வடபாலி நாடு, தென்பாலி நாடு எனக்கூறப்படும் பாலி என்பது வன்னியின் மிகமுக்கிய ஆறாக உள்ளது. இதன் படுகைகளில் தொல்பொருட் சான்றுகள் எடுக்கப்பட்டுவருகின்றன. தொல்கால மக்கள் வாழ் பகுதியாக இந்த ஆறின் கரையோரங்கள் இருந்துள்ளன.

பாலிஆறின் கரைகள் தொல்கால திராவிட குடியேற்றங்களை கொண்டதாக இருந்ததாக 19ஆம் நூற்றாண்டில் இப்பகுதிக்கு நீர்ப்பாசன கட்டுமானப்பணிக்கு, வந்து இன்றைய வவுனிக்குள புராதன கட்டுமானத்தையும் பாலி ஆறின் கரைகளையும் ஆராய்ந்த பிரிட்டிஷ் பொறியியலாளரும்-



ஆய்வாளருமான எச்- பார்க்கர் குறிப்பிடுகிறார். 19ஆம் நூற்றாண்டில் வவுனிக்குள அணியின் வடபகுதிக் காட்டினை ஆராய்ந்த பிரிட்டனின் நில அளவை பொறியியலாளர் சி.எவ்.எஸ்.பேசர் நகர் ஒன்று இருந்ததற்கான அழிபாடுகளை கண்டுபிடித்துள்ளார். அன்று அழிபட்ட நிலையில் அணையில் ஐந்து உடைப்புக்கள் இருந்த நிலையில் இன்றைய வவுனிக்குளம் தூர்ந்தநிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. அன்று அது 1975 ஏக்கரில் பரந்திருந்தது. 569 மில்லியன் கன அடி நீரை கொள்ளத் தக்கதாக இருந்தது. தொல் காலத்தில் இது மிகப்பெரிய கட்டுமானம் ஆகும். இந்தக்குளத்தின் கீழும்- ஆறின் ஓரங்களில் வாழ்ந்தவர்கள் மகாவம்ச வரலாறு கூறுவது போல கங்கைச் சமவெளியில் இருந்து வந்தவர்கள் அல்ல. நாகர்கள் அல்லது அன்று வேடுவத்தொழில் செய்தவர் திராவிடர்களே. வவுனிக்குளத்தின் கீழும்- பாலி ஆறின் ஓரங்களிலும் வாழ்ந்தவர்கள். அவர்கள் நெற் பயிர்ச்செய்கை செய்தார்கள் என்கிறார்கள். எச்- பார்க்கர் கங்கைச் சமவெளியில் இருந்தவர்கள் பார்க்கர் குறிப்பிடுவது. மகாவம்சம் கூறும் ஆரியனான விஜயனின் வம்சத்தவரையாகும்.

முதலிரு தமிழ்ச்சங்கங்கள் கூறும் பாலி நாட்டை கருதுகையிலே நமது வன்னியின் பாலி நாட்டையும் பொருத்திப் பார்க்கும் வகையிலேயே வவுனிக்குளம் பற்றி ஆராய்ந்தோம். எச்- பார்க்கர் 1873இல் இப்பகுதியை ஆராய்ந்தபோது எடுத்த செங்கல்லை, கிறிஸ்துக்கு முன்னதாகக் குறிப்பிடுகிறார் அன்று காலக்கணிப்பு அறிவியல் ரீதியாக இல்லாததால் சரியான ஆண்டை பார்க்கரால் தரமுடியாது போனது.

இங்கு லெமூரியா வடக்கில் அமிழ்ந்ததாக கூறப்பட்டாலும் அது தொடர்பாக அறிவியல் பூர்வமான முடிவுகள் தெளிவாக முன்வைக்கப்படாத பரிதாபம் உள்ளது.

ஆதாரம்- தொல்லியலும் யாழ்ப்பாண தமிழர்

பண்பாட்டுத்தொன் மையும்- செ.கிருஸ்ணராசா-1978.

புத்தளம் வரலாறும் மரபுகளும்- ஏ.என்.எம் சாஜகாந் - 1992.

தொல்கால இலங்கை- எச்- பார்க்கர்- கடைசிப்பதிவு - 1992.

குரலோன்

# குருதி சொட்ட... சொட்ட... களம் விரைந்தவன்

காரிருள் சூழ்ந்த எத்தினையோ இரவுகளில் காரிருளையும் பகல் பொழுதாய் மனதில் கொண்டு எதிரியின் காவலரணேறி துல்லியமான வேவுத் தரவுகளை கொண்டுவரும் அவனது செயற்பாடு எப்பொழுதுமே வித்தியாசமாகவே இருந்தது.

தம்பி இன்றைக்கு போகேலாது போலகிடக்கு.

என்ன செய்யப் போகிறீர்கள் என்று பொறுப்பாளர் கேட்டதும் எனக்கென்று தந்த வேலையை நான் செய்து முடிக்கத்தான் வேண்டும். எப்படியும் நான் போவேன் என்று உறுதிப்பட கூறிவிட்டுச் செல்லும் துணிச்சல் மிக்கவன்.

எதிரியின் முகாமைச் சுற்றி அமைக்கப்பெற்ற மிக இறுக்கமான தடைகளுக்குள் உட்புகுவது என்பது இலகுவான காரியமல்ல. ஒன்று, இரண்டு என தொடர்ந்து பத்துவரை தொடரும் நெருக்கமான கம்பித்தடைகளுக்குள்ளும் இராணுவ பொறி வெடிக் குள்ளும், சூழ்ச்சி இடர் பொறிகளுக்குள்ளும் கடந்து கண்ணிவயல்களை கடந்தும் எதிரி விழித்திருக்கும் போதே அவனது கண்ணில் மண்ணைத்தூவி உள் நுழையும் அபார ஆற்றல் படைத்தவன் அந்தவீரன்.

எப்போது பார்த்தாலும் மெல்லிய சிரிப்புடனேயே போராளிகளிடத்தில் உலாவித் திரியும் அந்த வீரனை, அவனது செயல்திறனை மறக்கவேமுடியாது என்ற அளவிற்கு சண்டைக் களங்களில் அவனது வீரம் நிறைந்திருக்கும்.

மன்னார் மாவட்டத்தைச் சொந்த இடமாகக்கொண்ட லெப்.நித்திலன் (செபமாலை முத்து விஜயகுமார்) மன்னார் மாவட்ட சண்டை அணியில் நிறைய சாதனைகளைச் செய்தவன் மன்னார் மாவட்டத்தில் இருக்கும்போது சிறியவனாக இருந்தாலும் நிறையவே சாதனைகளைச் செய்தவன் என்பதை பல போராளிகளும் தளபதிகளும் நினைவு கூருவதுண்டு. மாவீரன் லெப்.கேணல் ராஜசிங்கம் இவனிடத்தில் நல்ல அபிப் பிராயம் வைத் திருந்தான். நித்திலனின். துணிச்சல் சாதனைகள், அவனது வீரம்மிகுந்த செயற்பாடுகள் அனைத்தையும் நினைவூட்டி எல்லோருக்கும் சொல்வதுண்டு.

எல்லோரும் சொல்வதுபோல் நித்திலன் உண்மையாகவே ஒரு துணிச்சல்மிக்கவன் என்பதை பல சந்தார்ப் பங்களில் சாதித்துக்காட்டி இருக்கிறான். அவனது சாதனைகள் எத்தினையோ சொல்லப்பட்டிருந்தும் நாம் நேரேபார்த்த பல சந்தர்ப்பங்கள் இருந்தாலும் நெஞ்சை உலுக்கிய ஒரு சந்தர்ப்பம் நிகழ்ந்ததை என்றுமே மறக்கமுடியாது.

1998ஆம் ஆண்டின் இறுதிக்காலப்பகுதி. தியாகிதிலீபனின் நினைவு நாளோடு கிளிநொச்சி சிங்களப் படைத்தளத்தை அழித்தொழிக்கும் சண்டையும் தொடங்கிவிட்டது. கிளிநொச்சியின் முன்னரங்க காவல்நிலைகளை ஊடறுக்கும் புலிகளின் படையணிகளுள், சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியும் ஒன்று. இப்படையணி உள்நுழையும் பிரதான பாதையின் வேவுநடவடிக்கையை பார்வையிட்டவன்தான் நித்திலன்.

மாவீரன் லெப். நித்திலன் எடுத்து வந்த வேவுத்தரவுகள் துல்லியமானதாயே இருந்தன. எதிரி எங்கெங்கு எப்படி இருக்கிறான் என்று சொன்னானோ அதேபோல் எதிரியின் சகல நடவடிக்கையும் இருந்தது. எனவே நித்திலனின் தரவுக்கமையவே அணிகள் நகரத்தொடங்கின.

தடை அணிகளை நித்திலனே முன்னே நகர்த்திச்சென்றான். தடையணிகள் முன்னே செல்லும் போது ஏற்படக்கூடிய எதிர்ப்புகள், விளைவுகள் என்பனவற்றையும் சொல்லி

**மிரேசு**

அணிகளை நகர்த்தினான். கட்டம் கட்டமாக பிரிக் கப்பட்ட அணிகளுக்கேற்ப முதலாவது தடை அணியை கூட்டிக்கொண்டு முன் நகர்ந்தான். அந்த நிமி டங்கள் மிக மிக அமைதி யாகவும் பதற்றமாகவும் இருந்தன. என்ன நடக்குமோ என நாம் தவிக்க என்ன நடக்கப்போகுது என்பது தெரியாமல் எதிரி தவித்திருக்க சண்டைக்கான நகர்வுகள் தொடர்ந்தன.

கிளிநொச்சியை ஆக்கிரமித்திருந்த சிங்கள எதிரியின் பாசறையை மீட்கவென புலிகள் உக்கிரச்சமரை ஆரம்பித்து விட்டனர். எங்குமே வேட்டோசையும் எறிகணைகளின் வெடிப்பும் தேடொளிகளின் ஆக்கிரமிப்பும் ஆட்கொண்டுவிட்ட நிலையில் உக்கிரச்சமர் நடந்தது.

கிளிநொச்சி நகரின் முன்னரங்கில் தடை உடைக்க வென சென்ற எமது தடையணி ஒன்றை நித்திலனே வழிகாட்டி கூட்டிச்சென்றான். தடையணி தடையை உடைக்க மிகவும் இக்கட்டான நிலைக்குள் சிக்கிக்கொண்டது. தடையை இரகசியமாக நெருங்கும் முன்பே எமது அணிக்கு அதிர்ச்சியொன்று காத்திருந்தது.





எதிரியின் தடைக்கு முன்பாகவே வழமைக்கு மாறாக காத்திருந்த எதிரியின் திரையிடும் அணி ஒன்று எதிர்பாராத விதமாக தாக்குதலைத் தொடுத்ததனால் சில விநாடிகள் நிலைமை மோசமடைந்தது. முன்னால் என்ன நடக்கிறது என்பது ஏனைய அணிகளுக்குத் தெரியாதிருந்தது. எனவே தளபதி மாவீரன் லெப்.கேணல் சேகர் நித்திலனோடு தொடர்பினை மேற்கொண்டார்.

நித்திலன்.....நித்திலன்....3.9
நித்திலன்.....நித்திலன்....3.9
என்றதும் எதிர்முனையில் 3.9 நித்திலன் எனத்தொடர்பை மேற்கொண்டான்.

என்ன மச்சான் நடக்குது முன்னுக்கு என்ன நடக்குது என்று நிலைமையை தெளிவாகச் சொல் என்றான்.

3.9....ஒரு பிரச்சினையும் இல்லை. முன்னுக்கு நின்றவன் சும்மா அடிச்சிட்டு ஓடுறான். தடையை உடைச்சிட்டு தொடர்வு எடுக்கிறன் என்று சொன்னவனின் குரல் ஏனைய அணித் தலைவர்களின் நடைபேசியில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

சண்டை தொடங்கி விநாடிகள் நிமிடங்களாகி நிமிடங்கள் மணித்தியாலங்களாகிவிட்டபோதும் தடை உடைப்பது மிகவும கடினமானதொன்றாகி விட்டது. எனவே அவ்விடத்தில் பதற்றம் நிலவத்தொடங்கியது. நிலைமையை உணர்ந்த, நித்திலன் எஞ்சிய சிலபோராளிகளை கூட்டிக்கொண்டு உக்கிரமாக சண்டையை செய்யத்தொடங்கினான்.

வேவுக்காக அடிக்கடி சென்றுவந்த அவனுக்கு மாற்று நடவடிக்கை எதைச் செய்யவேண்டும் என்றிருந்தது. உடனே செயலில் இறங்கியவன், தடை அணிகளை முன் நகர்த்தி வேகமாகத் தாக்குதலைத்தொடுத்து முன்னேறும்போது காயமடைந்துவிட்டான். காயம் ஓரளவு பெரிது என்றாலும் அவன் வெளியில் வர முயற்சிக்கவில்லை. எப்படியும் அணிகளை உள்ளே அனுப்பி விடவேண்டும் என்று துடிப்பாகச்செயல்பட்டு சண்டை அணிகளை உள்ளே அனுப்பிவிட்டான்.

அணிகள் உள்ளே சென்றதும் காயத்திற்கு மருந்து கட்டவென கட்டளை பீடத்திற்கு வந்தவன் மருந்து கட்டிவிட்டு, பின்னுக்குப் போகும்படி பணிக்கப் பட்டான். நான் போக மாட்டேன் எனது போராளிகளை விட்டிட்டு நான் என்னவென்று போறது என்றவன், தனது சார்வுக்கு அணித்தலைவர்களுடன் தொடர்புகொண்டு கட்டளைகளை வழங்கிக் கொண்டிருந்தான்.

அவனது முதுகில் ஏற்பட்ட காயத்தால் இரத்தம் கடுமையாக கசியத் தொடங்கியும் அவன் பின்னால் போக மறுத்து விட்ட நிலையில், முன்நகர்ந்த அணிகளை கூட்டிச்சென்ற வேவுப் போராளிகள் வீரச் சாவடைந்து விட்டதை கேள்விப்பட்டதும் உடனே நான் போகிறேன் என்று சொல்லிவிட்டு தனது நடைபேசியுடன் இரண்டு குண்டையும் எடுத்துக் கொண்டு முன்னேசென்றான். முன் சென்றவன் அணிகளை நடத்தி கூட்டிச்செல்வது அவனது கட்டளைகளில் தெளிவாக தெரிந்தது. பொழுதும் விடிந்து விட்டதனால் அணிகள் வேகமாகவே நகரத் தொடங்கின. அணிகள் நகரநகர வெற்றியின் வாய்ப்பு அதிகரித்தது. ஆனால் அந்த வெற்றிக்குக் காரணமாய் இருந்த எங்கள் நித்திலனுக்கு முன்புபட்ட காயத்திலேயே ஒரு சூடும், நெஞ்சில் ஒரு சூடுமாகப் பட்டு கிளிநொச்சியில் வெற்றியோடு சங்கமித்து விட்டான். தனது விழுப் புண்ணையும்விட எதிரியை வெற்றி கொள்வதிலேயே நித்திலன் முனைப்பாக இருந்தான். ●






# காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்–ம
# தேர்த்திருவிழா சிறப்

## ஈழத்துச் சிதம்பரத்தில் பஞ்சரத பவனி

ஈழத்திருநாட்டின் பழம் பெரும் தீவுகளில் ஒன்றான காரைநகர் யாழ்ப்பாணத்தில் இருந்து வடமேற்குத் திசையில் இருபது கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. காரைச்செடிகள் அதிகமாக இருந்தமையால் காரைதீவு என்றும், காலப்போக்கில் இணைப்புப்பாலம் மூலம் குடாநாட்டுடன் இணைக்கப்பட்டு காரைநகர் எனப் பெயர்பெற்று விளங்குகின்றது.

இவ்வூரிலே "ஈழத்துச் சிதம்பரம" என அடியார் களினால் அழைக்கப்படும் ஆலயம் திண்ணபுரப் பதியில் அமைந்துள்ள சிவன் கோவிலாகும். இவ் ஆலயத்திலே மார்கழி



மாதத்தில் நடைபெறும் திருவாதிரை விழாமிகவும் சிறப்பு வாய்ந்தாகும். ஆதிரை அபிஷேகத்தையும் அதன் மேல் சூரியோதயத்தில் நடைபெறும் ஆருத்திரா தரிசனத்தையும் கண்டுகளிக்க ஈழத்தின் நாற்றிசைகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மெய்யன்பர்கள் இங்கு வருகை தருவார்கள். தமிழகதில்லைச்சிதம்பரம் சென்று ஆருத்திரா தரிசனம் காணமுடியாத சிவனடியார்களுக்கு இது பெரிய வரப்பிரசாதமாகும்.

கடந்த 18.12.2004 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகிய ஆதிரை விழாவில் ஒவ்வொரு நாளும் விசேட அபிஷேக ஆராதனைகள் நடை பெற்று மணிவாசகப் பெருமானை கூத்தபிரான் சந்நிதிக்கு எழுந்தருளச் செய்து திருவெம் பாவைப் பாடல்களைப் பாடுபவர் மணிவாசகப் பெருமானாகப் போற்றப்பட்டு அவருக்கு கோயிற்பட்டு, தலைப்பாகையாக அணிவித்து, கேட்போர் உள்ளங்களை உறையவைக்கும் வண்ணமாக திரு வெம்பாவைப் பாடல்கள் ஓதப்பட்டு தொடர்ந்து வசந்த மண்டபப் பூசைகள் நடைபெற்று சுந்தரேசப்பெருமான் அம்பாள் சகிதம் பிள்ளையார்,சுப்பிரமணியர் ஆகி யோருடன் இரண்டாம் வீதி உலா வந்து அடியார்களுக்கு அருட்காட்சி வழங்குவர். எதிர் வரும் 26.12.2004 ஞாயிற்றுக்கிழமை ஒன்பதாம் திருவிழாவாகிய தேர்த்திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

அதிகாலை 5.00 மணிக்கு திருப் பள்ளியெழுச்சி பூஜையும்,5.30 மணிக்கு சுந்தரேஸ்வரப் பெருமானுக்கு அபிஷேகமும்,6.30 மணிக்கு காலைசந்தி பூஜையும், 8.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும், காலை 8.30 மணிக்கு திருவெம்பாவை ஓதலும் அதனைத் தொடர்ந்து சௌந் தராம்பிகா சமேத சுந்தரேஸ் வரப்பெருமான் பரிவாரமூர்த்திகளுடன் ரதோற்சவத்திற்காக காலை 10.30 மணிக்கு எழுந்தருளுவார். அதனைத் தொடந்து பஞ்சரதபவனியும் நடைபெறும். மறுநாள் திங்கட்கிழமை அதி காலை 2.00 மணிக்கு சிவகாமசௌந்தரி சமேத சிதம்பரேஸ்வரப் பெருமானுக்கு ஆரூத்திரா அபிஷேகம் நடைபெறும். அதிகாலை 6.00மணிக்கு ஆருத்திரா தரிசனமும், அதனைத்தொடர்ந்து 7.30 மணிக்கு காலைச் சந்தி பூஜையும், 8.00 மணிக்கு திருவொம்பாவை ஓதலும், 8.30 மணிக்கு மணிவாசகர் திருவீதியுலா வும் நடைபெறும். மாலை 3.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும், 4.00 மணிக்கு திருவூடலும் மாலை 5.00 மணிக்கு தீர்த்தோற்சவமும், 6.00 மணிக்கு சாயரட்சைப் பூஜையும்,6.30 மணிக்கு திருவெம் பாவை ஓதலும்,7.00 மணிக்கு அர்த்தயாமப் பூஜையுடன் திருவாதிரை சாந்தி மகோஷ்சவ விழா இனிதே நிறைவு பெறும்.

இவ்வருட திருவாதிரை உற்சவத்திற்கான விரிவான ஏற்பாடுகளை ஆலய ஆதீன கர்த்தாக்கள் செய்துள்ளனர். உற்சவத் தினையெட்டி பத்துத் தினங்களும் மாணிக் கவாசகர் மடாலயத்திலும் ஈழத்துச் சிதம்பர சைவ அறப்பணி நிலையத்திலும் அன்னதானம் வழங்கப்பட்டு வரு கின்றமையும் குறிப்பிடத் தக்கது.

## சைவத்தமிழ் மக்கள்

சைவப்பெருமக்கள் அனைவராலும் கோயில் என்று போற்றப்படும் சிவ ஸ்தலம் சிதம்பரம் ஆகும். நாயன்மார்கள் அனைவரும் சிதம்பரம் நடராஜப் பெருமான் மீது உள்ளம் உருகிப் பாடல்களைப் பாடியுள்ளார்கள். மணிவாசகப் பெருமான் திருவா சகத்தைப் பாட சிதம்பரம் நடராஜப் பெரு மானே தன் கைப்பட எழுதி



திருச்சிற்றம் பலமுடையான் எனக் கையெழுத் தும் இட்டு வைத்தார் என திருவா தவூரடிகள் புராணம் கூறுகிறது. சேந்தனார் பெருமான் சிதம்பரத்தில் ஓடாது நின்ற தேரை ஓடச் செய்வதற்காக திருப்பல்லாண்டு பாடியருளினார். சேக்கிழார்பெ பரியபு

## காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் தேரேறி வரும் தில்லையம்பலவ


பொன்னம்பலம் அரிசி ஆலை
யாழ்சாலை, பரந்தன், கிளிநொச்சி.
தொ.பே: 021-2285742
(சி-10944)

றூபாபன்முக வர்த்தகநிலையம்
இல:104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-10947)

இ.ச பேரம்பலம் சக நிறுவனம்
இல:50,52,54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-11101)

ஈஸ்வரன் ரேட
இல:69, கஸ்தூரியார்
யாழ்ப்பாணம்.
(சி-11104)

லக்சுமி பென்சி
இல:244, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-10945)

எஸ்.வி.முருகேசு
இல:154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-10948)

லலிதா புடைவையகம்
இல:42, பஜார்வீதி, வவுனியா.
இல: 5,6, நவீன சந்தை யாழ்ப்பாணம்.
(சி-11102)

கலைவாணி நகைமா
இல:111B, கஸ்தூரியார்
யாழ்ப்பாணம்.
தொ.பே.021-2227356
(சி-11105)

யாழ் நகரில் THAMPI LIONAIR விமான சேவையுடன்
இல:90, கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2222823, 021-2222504
தொ.நகல்: 021-222 2040
அவசர அழைப்புக்களுக்கு.
0777-382343, 0722-401423
(சி-10946)

சீமாட்டி புடைவைக் கடல்
இல:122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(சி-10949)

சிவன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்
இல:70/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021-2222763
(சி-11103)


அற்புதா ரேடிங் கொ
இல:198, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
(சி-11106)

முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை
யோகபுரம், மல்லாவி.
யாழ்சாலை, கிளிநொச்சி.
(சி-10950)

பிள்ளை
உதி
யோகபுரம், மல்லாவி.


# ம்–மார்கழித்திருவாதிரை உற்சவ
# றப்பிதழ் 26-12-2004





## மக்கள் அனைவருக்கும் உரிய தேசக்கோயில் – ஈழத்துச்சிதம்பரம்

அனைவராலும் ம் சிவ ஸ்தலம் யன்மார்கள் ஜப் பெருமான் பாடல்களைப் கப் பெருமான் பரம் நடராஜப் ப்பட எழுதி



னக் கைபெழுத் வா தவூரடிகள் ார் பெருமான் தேரை ஓடச் பல்லாண்டு ார்பெ பரியபு

ராணத்தை சிதம்பரம் நடராஜப் பெருமானது சந்நிதானத்தின் ஆயிரம் கால் மண்டபத்தில் இருந்து தில்லை நட ராஜனே அடியெடுத்துக்கொடுக்க அருளினார் என்றே வரலாறுகள் கூறுகின்றன. ஆடவல்லான் இருந்து அருள்நடனம் புரியும் சிற்சபையை நினைவு கூரும் முகமாக காரை நகரில் ஈழத்துச் சிதம்பரம் ஆலயம் அமைந்துள்ளது.

ஈழமணித் திருநாட்டைச் சிவ பூமியெனத் தவயோகி திருமூல நாயனார் தனது தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணக் குடாநாடு ஞான பூமியாகச் சைவமும் தமிழும் வளர்த்த மண்ணாகத் திகழ்கிறது. பக்தர்கள், சித்தர்கள், ஞானிகள், அருளாளர்கள், சமய அபிமானிகள், செல்வப்பிரபுகள் எனப் பலரும் செறிந்து வாழும் பிரதேச மாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் காரை நகர்ப் பகுதி திகழ்கிறது. காரைநகர் மக்கள் மாத்திரமல்லாது ஈழம்வாழ் சைவத்தமிழ் மக்கள் அனைவருக்கும் உரிய தேசக் கோயிலாக காரை நகர்ச்சிவன் கோயில் மிளிர்கிறது.

மார்கழி மாதம் புனிதமான மாதமாக தெய்வத்தின் திருவருளை அடியார்கள் பெறுவதற்குரிய மாதமாகப் போற்றப் படுகின்றது. "மாதங்களில் நான் மார்கழி" என்று கிருஷ்ண பரமாத்மா பகவத் கீதையிலே கூறுகின்றார். மார்கழித் திருவாதிரையைத் தீர்த்தமாகக் கொண்டு பத்துநாட்கள் இங்கே திரு விழா சிறப்பாக நடைபெறுகின்றது. ஒன்பதாம் நாள் சிவகாமி அம்பாள் சமேதராக நடராஜப்பெருமான் தேரிலே எழுந்தருளி அடியார்களுக்கு அருள்புரியும் காட்சியைக்கான பலநூற்றுக்கணக்கான மக்கள் குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் ஈழத்துச் சிதம்பரம் நோக்கி வருகைதருகின்றார்கள்.

"ஆடுவதும் பாடுவதும் ஆனந் தமாக நினைத் தேடுவதும் நின் னடியார் செய்கை பராபரமே"

என்ற தாயுமான சுவாமிகளின் வாக்கிற்கு அமைய ஆடியும் பாடியும் அழுதும் தொழுதும் வணங்கும் அடியார்களின் திருக்கூட்டத்தை இங்கே காணலாம். "என் கடன் பணி செய்துகிடப்பதே" என்ற அப்பர் பெருமானின் வாக்கிற்கு அமைய ஆலயத்திலே திருத் தொண்டு செய்யும் அடியார்கள் பலரை இங்கே காணலாம். சீவனுக்குள்ளே சிவமணம் பூத்த செம்மல்கள் இருக்கும் அருளா ளர்கள் பலரை இங்கே தரிசிக்கலாம்.

சைவத் தமிழர்களின் கருவூலமாக அருளாளர்களின் அனுபூதி வாசகங்களாக இருக் கின்ற தெய்வத்திரு முறைகளின் ஒலி ஆலயச் சூழலிலே ஒலித்த வண்ணம் இருக்கும். அருள் வாசக மாக, மதுரவாசகமாக, தெய்வ வாசகமாகத் திகழும் திரு வாசகத்தின் சிறப்பினை அனை வரும் உணர்ந்து கொள்ளும் வகையில் "திருவாசக விழா" இங்கே பல்லாண்டு காலமாகச் சிறப் பாக நடாத்தப்பட்டு வருகின்றது.

சிதம்பரம் நடராஜப்பெருமானுடைய சந்நிதானத்திலே நடைபெறுவதனைப் போன்று திருவாதிரை உற்சவம், ஆருத்திராதரிசனம் இங்கே மிகச்சிறப்பாக நடைபெறுகின்றது. இந்த ஆருத்திரா தரிசனத்தைக் காண்பதற்காக சிவனடியார்கள் பலதிக்குகளில் இருந்தும் இங்கே வருகை தருவார்கள். சிவமணம் கமழும் பூமியாகத் திகழ்கின்ற ஈழத்து சிதம்பரேஸ்வரப்பெருமானைத் தரிசித்து நாம் அனைவரும் சீவனுக்குள்ளே சிவ மணம் பூத்த செம்மல்களாக உய்வோமாக.

**சிவத்தமிழ்வித்தகர்**
**சிவ. மகாலிங்கம்**

### திருவாசகமே பேச்சும்! மூச்சும்!!

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில் சைவமக்கள் அனைவரும் ஈழத்துச்சிதம்பரத்தை நோக்கி ஓடுகின்றனர். திருவெம்பாவை காலத்தில் எடுக்கப்படும் இவ்விழாக்களில் இருபத்தைந்து வருடம் தொடர்ந்து அங்கு சென்று உரையாற்றி உள்ளேன் என்பது குறிப்பிடத்தக்கது. காரைநகர் மக்களுக்கு திருவாசகமே பேச்சும்,மூச்சும் ஆகும். இந்த அனுபவத்தை அங்கு நான் நேரில் கண்டேன். காவடி எடுத்து ஆடுவார்கள். சொற் பொழிவுகளைக் கேட்டு நயப்பார்கள். ஆனந்த நடராஜனின் திருக் கூத்தை கண்களினால் பருகுவார்கள். அங்கு நடைபெறும் பக்தி பூர்வமான பூசையிலே பங்கு பற்றுபவர்கள் பலர். வீதிகள் எங்கும் அடியார் கூட்டம் திருவாசகத்தை ஓதி ஓதி வலம் வருவார்கள். மார்கழி மாதம் ஆகையால் மழையும்,பனியும் குளிரைத்தந்துகொண்டு இருக்கும். ஆனாலும் பக்தர் கூட்டம் இறைவனையே பாடுவதும், காவடி ஆடுவதும் ஒரு கண் கொள்ளாக்காட்சியாகும்.

"சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டு உன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வேறு இருந்து உன் திருநாமம்
தரிப்பார் பொன்னம் பலத்தாடும்
தலைவா என்பார் அவர் முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ
நம்பி இனித்தான் நல்காயே"

திருவாசகத்தில் கோயில் மூத்த திருப்பதிகத்தில் அமைந்த பாடல் இதுவாகும். அம்பலத்தாடும் அப்பனையும்,அம்மையையும் முற்றாக அனுபவித்தவர் மணிவாசகர். அவரே அழுது அழுது எம்பெருமான் திருவடியை அடைந்தவர் ஆவர். எனவே கூத்தப் பெருமானையும் மணிவாசகப் பெருமானையும் ஒருசேர வணங்கி ஆனந்தம் அடைவோமாக.

**கலாநிதி செல்வி தங்கம்மாஅப்பாக்குட்டி**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

## லவன் அருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.


ர் ரேடர்ஸ்
ல்தூரியார் வீதி,
ப்பாணம்.

சிவனருட்செல்வன்
அரிசி ஆலை
உருத்திரபுரம் வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி.
(சி-11109)

ஈழத்துச் சிதம்பர
சைவ அறப்பணி நிலையம்
சிவன்கோவிலடி, காரைநகர்.
தொ.பே 021-2225615
இவ் அறப்பணி நிலையத்தின் சிறப்புப் பணியாக நாளாந்தம் அன்னதானம் வழங்கப்படும் என்பதனை சிவனடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.
(சி-11108)

சிறப்பிதழாக்கம்
காரையூரான்

ரி நகைமாளிகை
தூரியார் வீதி,
ாணம்.
1-2227356

மணி ஐயப்பா
நகைமாடம்
(சி-11110) யாழ்சாலை, கிளிநொச்சி.

ங் கொம்பனி
பத்திரி வீதி,
ாணம்.


ஸ்ரீ முருகன்
இல:303, கே.கே.எஸ்,வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-11111)

திருமுருகன் கொம் நெற்
இல:259, கே.கே.எஸ்,வீதி, யாழ்ப்பாணம்.
(சி-11112) தொ பே: 021-2227835


Aero Lanka
(General Sales Agent)
air SAHARA
Passenger Sale Agent
குறைந்த கட்டணத்தில்
விமானப் பயணச்சீட்டுக்களை
பெற்றுக் கொள்ள
MANOJ
EXPRESS SERVICES
No:32,Clock Tower Road, Jaffna.
021 222 3916, 0777377784
No:06, Hospital Road, Jaffna.
021 222 7916, 0777801038
(சி-11114)

ளையார் பல்பொருள்
உதிரிகள் வாணிபம்
லாவி. (சி-11107) யாழ்சாலை, கிளிநொச்சி.

மருதடிப்பிள்ளையார்
களஞ்சியம்
(சி-11113) யோகபுரம், மல்லாவி.




# கேள்விகள்...?



சிறி.இந்திரகுமார்

நீங்கள் எங்களுக்கு என்ன செய்திருக்கிறியள்...

சும்மா எங்கட உடம்பையும்... உங்கட உடம்பையும் வளர்த்ததைத் • தவிர....

பக்கத்தில பொன்னுத்துரை மாமாவையள பாருங்கோ.... உவன் ராசன் ராசாத்தி, பெரியவன் எண்டு எல்லோருக்கும் போதும், போதும் எண்டு சொல்லுற அளவுக்கு பொன்னுத்துரை மாமா நிறையவே செய்திருக்கிறார்.

ஒண்டு மட்டும் சொல்லுறன் என்னை பொறுத்த மட்டில உங்களப் போல நான் இருக்கமாட்டன். நான் கலியாணம் கட்டினாப்பிறகு என்ர பிள்ளையளயும் உங்களப் போல இருக்க விடமாட்டன்.

இப்ப பெய்யிற மழை எப்படி விடாமல் பெய்திச்சோ அப்படி வாய மூடாமல் தவம் உளறிக்கொண்டிருந்தான்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த விசாலம்மா பொறுமையை இழந்து டேய்... வாயை மூடடா என்ன நினைச்சுக் கொண்டு யாரோட கதைக்கிறன் எண்டு நினைச்சுக் கொண்டு கதைக்கிறாய் என தன்னுடைய கண்களில் வழிந்த கண்ணீரையும் ஆத்திரத்தால் மூக்கில் வழிந்ததையும் துடைத்துக் கொண்டே வீடுகளில் நடக்கும் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையிலான மகா போர் ஒன்றுக்குத் தனது மகன் தவத்தோடு போர்' புரியத் தயாரானாள். ஆனால்....

கொஞ்சம் பொறு விசாலம் ராசன் கதைக்கட்டுமே. உவன் பிள்ளைய நான் என்ன கதைக்கத்தெரியாத ஊமையாகவா வளர்த்திருக்கிறன். அவனுக்கு எது சரியெண்டு படுதோ அதை கதைக்கிறதுக்கும் கேக்கிறதுக்கும் அவனை விடு.

நான் என்ர அப்பரிட்ட உப்படியெல்லாம் கேக்கேல ஏனெண்டா என்ர அப்பரை எனக்குத் தெரியும். ஆனால், உவன் ராசனுக்கு என்னத் தெரியேல. அவன் ஒருநாள் என்ன புரிஞ்சு கொள்வான். இல்லாட்டியும் என்ர அப்பரிட்ட நான் கேட்காததை என்னட்ட என்ர மகன் கேக்கிறான் எண்டால் அவனிட்ட அவன்ர மகன் கேட்பான். சிலவேளை அவன்ர மகன் அவனிட்டக் கேக்காத அளவுக்கு ராசன் நடந்துகொண்டான் எண்டால் அதுலயும் எங்களுக்கு நிறம்பிப்போன சந்தோசம் தானே கிடைக்கும்.

நீ ஏன் சும்மா குளறுறாய்....என மணியத்தார் தனது கண்ணாடியைச் சரி செய்துகொண்டு கையிலிருந்த பேப்பரின் அடுத்த பக்கத்தில தனது கண்களை செலுத்தினார்.

என்னதான் மணியத்தார் பெருந்தன்மையோடு நடந்து கொண்டதாக விசாலம் நினைச்சாலும் உவன் ராசன் மணியத்தாரைப் பார்த்து நெடுக உப்படிக் கதைக்கிறதை விசாலத்தால தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. சிலநேரங்களில் இறந்து போன மூத்தவனின் படத்துக்கு முன்னால யாருக்கும் தெரியாமல் கண்கலங்கி வாயில் ஏதோ முணுமுணுத்த படி இருப்பாள். ஆனால், மணியத்தார் எதுக்கும் அசையாமல் குளத்துக்கரையிலயிருக்கும் கருங்கல்லுப் போல தன்னைக் காட்டிக்கொள்ளுவார்.

மணியத்தார் தன்னைப் பற்றியும் தன்ர மனிசி விசாலத்தைப் பற்றியும் அருமை பெருமையாய் கதைக்கிறதெண்டால் உப்படித்தான் ஆரம்பிப்பார் டேய்....நானடா உன்ர கொம்மாவ கலியாணம் செய்யேக்க வெறும் முப்பது ரூபா காசு தாண்டா கையில இருந்தது. ஆனால், யாருக்கும் அடிமைப்படாமல் நாங்கள் தனிக்குடித்தனம் போய் எனக்கெண்டு ஏதோ இண்டைக்கு நீங்கள் எல்லாம் நிரந்தரமாய் இருக்கக்கூடிய உந்த வீட்டையும், உங்களைப் படிப்பிச்சதும், உன்ர கொக்காவையள் இரண்டு பேரை கலியாணம் கட்டிக் கொடுத்ததும் எண்டு நான் நானாகத்தானடா இருக்கிறன்.

ஆனால், என்னவோ தவம் தன்னுடைய பெற்றோரில் திருப்திப்பட்டதே இல்லை.

விசாலத்துக்குக் காட்டிக்கொள்ளாவிட்டாலும் மணியத்தார் மனதுக்குள் பலமுறை அழுதிருக்கிறார்.

அவர் என்றுமே ஒரு இறுக்கமான தந்தையாக நடந்து கொண்டதில்லை. தன்னைப் போலவே தன்மகனையும் சரிசமமாக நினைப்பவர். எந்தவிடயம் என்றாலும் தந்தை மகன் என்ற உறவுக்கு அப்பால் எந்த விடயமோ அந்தவிடயம் சார்ந்த இரண்டு விமர்சகர்கள் போலவே தர்க்கிப்பார். அப்படித்தான் தன் பிள்ளை வளரவேண்டும் என விரும்புபவரும்கூட. தந்தையும் மகனும் நல்ல நண்பர்களாகவும் இருக்கவேண்டும் என ஆசைப்படுபவர். இதற்காக சிலவீடுகளில் இருக்கும் தந்தைக்கும் மகனுக்கு மிடையிலான சம்பிரதாய அணுகுமுறைகளைக்கூட கேலி செய்பவர்.

அவர் தன்னுடைய வாழ்நாளில் தன் பிள்ளைகளை படிப்பிப்பதும் அவர்கள் மற்றவர்களை நம்பி இருப்பதைவிட தங்களை நம்பியே வாழவேண்டும் எனவும் ஆசைப்படுபவர்.

நாட்டில் நடந்த யுத்தத்தால் ஏற்பட்ட வாழ்க்கைச் செலவு உயரவும் இடம்மாறி இடம்மாறி சந்தித்த இடப்பெயர்வுகளும் அவரால் யாருடைய பெயரிலும் பணத்தை வங்கியில் வைப்புச் செய்யவோ நாலைந்து காணியை வளைத்துப் போட்டு ஒவ்வொருவருடைய பெயரிலும் எழுதிவைக்கவோ முடியவும் இல்லை. அதை அவர் விரும்பவும் இல்லை.

ஆனால், இதைத்தான் இன்று ராசன் நாள்தோறும் வீட்டில் நச்சரிக்கும் பிரச்சினையை கிளப்பிக் கொண்டிருக்கின்றான்.

ஏன் பொன்னுத்துரை மாமாவால தன்னுடைய பிள்ளைகளின் பெயரில் பணமும், காணியும் சேர்த்துவைக்க முடியுமென்றால் தன்னுடைய தந்தையால் முடியாதுபோனது என்பதே அவனது கேள்வி.

ஆனால், இவ்வளவுக்குள்ளும் மணியத்தாருக்கும், பொன்னுத்துரைக்கும் இடையில் எத்தனையோ விடயங்களில் பெரிய இடைவெளி உண்டு.

பணம் சம்பாதிப்பது முதல் பிள்ளைகளை வளர்ப்பது வரை மணியத்தாருக்கும் பொன்னுத்துரைக்கும் இடையிலான இடைவெளி பெரிது. இயன்றவரைக்காவது நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும் என்பதிலும், இயன்றவரைக்காவது நேர்மையான வழியிலேயே பணம் சம்பாதிக்கவேண்டும் எனவும் மணியத்தார் விரும்புபவர்.

தான் நினைப்பதையெல்லாம் பிள்ளைகள் மீது திணிக்க வேண்டும் என்பதிலேயோ தனது கட்டளைகளுக்கு கீழ்ப்படியும் ஒரு படையதிகாரி போலவும், சாதாரண சிப்பாயைப் போலவும் தானும் தன்னுடைய பிள்ளைகளும் இருக்கவேண்டும் எனவும் விரும்பாதவர்.

எல்லாமே இயல்பாக, ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டவர்களாக யதார்த்தத்தை மதிப்பீடு செய்யத்தெரிந்தவர்களாக தன் பிள்ளைகள் இருக்க வேண்டும் என விரும்புவார்.

ஆனால், மணியத்தாரின் ஆசைகளுக்கு அப்பால் பணத்தின் மீது ஆசைகொண்ட ஒருவனாக தவம் பிறந்துவிட்டான். இவ்வளவுக்கும் தவம் ஒன்றும் பத்து வயதுகொண்ட பையனல்ல அவனுக்கு வயது இருபத்து இரண்டு.

தன்னால்தான் நினைத்தபடியெல்லாம் பணம் சம்பாதிக்கவும் தன்னுடைய மேலதிக தேவைகளுக்குப் பணம் தேடமுடியாமல் இருப்பதற்கு சூழல் இடங்கொடுக்காத போதெல்லாம் தவம் மணியத்தாரோடு மோதுவான்.

அவன் மணியத்தாரோடு மோதுவதற்கு அவன் வைத்திருக்கும் ஒரே கேள்வி பக்கத்து வீட்டு பொன்னுத்துரை மாமாவால் முடியுமென்றால் ஏன் உங்களால் முடியாது போய்விட்டது என்பதே.

ஆனால், தனது தந்தை முப்பது ரூபாவோடு வாழ்க்கையை ஆரம்பித்து பரம ஏழைகள் என்றில்லாமலும் பெரும் பணக்காரர்கள் என்றில்லாமலும் ஒரு நடுத்தரக் குடும்பமாக தன்னால் முடிந்தளவு கட்டிவளர்த்திருக்கிறார் என்பதை தவம் புரிந்து கொள்ள முயல்வதில்லை. மணியத்தாரின் எல்லா உழைப்புகளும் எல்லாக் கனவுகளும் தங்கள் மீதே முதலீடு செய்திருக்கின்றார் என்பதை அவன் நினைத்துப்பார்ப்பதில்லை.

தன் உருவில் அவர் செய்திருக்கும் முதலீட்டை விட ஒரு சிறு புத்தகத்தில் சில இலக்கங்களால் அவர் முதலீடு செய்யவில்லை என்பதே தவத்தின் ஆத்திரம்.

இப்படித்தான் ஒரு நாள் சண்டை அதி உச்சத்துக்குப் போய் தவம் ஏதோ எல்லாம் கதைக்க மணியத்தார் டேய், தவம்.... அப்ப என்னட்ட இருந்ததும் இப்ப என்னட்ட இருக்கிறதும் உனக்குத்தாண்டா.... என்று மட்டும் கூறினார்.

அப்படி இப்படியென்று காலங்கள் கடந்து போய் விட்டது. மணியத்தார் படுக்கையிலும் விழுந்து கடைசியில் பாடையிலும் ஏறிவிட்டார்.

எல்லாம் முடிந்து மணியத்தாரின் எட்டு வீட்டன்று இரண்டு பேர் கைகளில் பைல்களோடு வந்திருந்தார்கள்.

யார் விசாலம்மா யார் தவம் என விசாரித்தார்கள்.

என்னவோ ஏதோ என எல்லோரும் பதறியபடி நிற்க சிலபடிவங்களில் கையொப்பம் வாங்கிய பின்னர் மணியத்தார் தன்னுடைய இறப்பையும் தன்னுடைய மனைவிக்கும், மகனுக்கும் பிரயோசனமாக இருக்கவேண்டும் என நினைத்து அவர் செய்திருந்த ஆயுள்காப்புறுதிப்பணத்திற்கான காசோலையை, வந்த இரண்டு பேரும் தவத்திடம் நீட்டினார்கள்.

# வெள்ளம் அழகாயிருக்கிறது

வானத்துக்கு
அப்படி என்ன இப்பிடிச் சோகம்
ஏனிப்படி அழுது தொலைக்கிறது?

மூன்று நாள் மழையில்
மூழ்கிப் போயிற்று வீடு

முற்றத்தில் கிடந்த
மூலைபிய்ந்த சுளகையும்
வெள்ளம்
முடக்கடி ஒழுங்கை வரை
இழுத்துப்போய் போட்டிருக்கிறது
எடுப்பதற்கு வெட்கமாயிருக்கிறது.

ஈரமூறிப்போன விறகுக்கட்டைகள்
மூச்சை வாங்குகிறது
போதாக்குறைக்கு
மழைக்குளிருக்கு இன்னும் அதிகமாய்
வாயடுப்புக்கள் புகைந்து தள்ளுகின்றன

வீட்டுக்குள் நடக்க முடியாத படி
கால்கள் புதைகின்றன
வெளிநாட்டுக்காரரின் வெள்ளைக் ஹயசுக்கள்
வீதிகளில் சேறடிக்கின்றன.

அடுப்பு
படுக்கை
அலுவலகம்
எல்லாம் ஓரிடமாய் சுருங்கியாயிற்று
ஆ......
எங்களுக்கும் வெளிநாட்டு வாழ்க்கை
தொட்டால் விழுமாற்போல்
ஊசலாடுகிறது
ஊறிப்போன சுவர்.

கையில்
வண்ணவண்ண "பைல்களோடு"
கடவுள்கள் வந்து
வெள்ளைத் தாள்களில்
வீட்டைச் சுற்றிச்சுற்றிப் பார்த்து
ஏதோ எழுதிப் போகிறார்கள்.

சுவாசம் முட்டும்
இரண்டு "மோட்டீன்" சுருள்
புகையை தாண்டியும்

நுளம்புகள்
பதுங்கித்தாக்குதல் நடத்திவிட்டு
பறந்து போய்விடுகின்றன.

வாங்கிக் கொடுத்த சித்திரக் கொப்பியின்
வரையாத தாள்களையும் கூட
கிழித்துக் கிழித்து
கப்பல் விட்டுக் கொண்டிருக்கிறது
என். கடைசி.

எல்லாவற்றையும்
சகித்துக் கொண்டிருக்குமென் மனசுக்கு
தேவையற்று ஆத்திரமூட்டுகிறான்
கிறுக்குப்பிடித்த ஒரு கவிஞன்.

ஒரு பால் தேனீரையும்
வெள்ளைச் சொதியையும்
ஞாபகப்படுத்திக் கொண்டே பாயும்
வெள்ளத்தைப் பார்க்க
அழகாக இருக்கிறதாம்.

யாழ்வீரன்

# வருண தேவா நீயுமா?

வருணதேவா நீயுமா?
இது உனது சமாதானப்
போர் முறையா?
கரையில் போட்ட
மீனாகத் துடிக்கும்
சேடமிழுத்துக் கொண்டிருக்கும்
அந்திம கால
மனிதனாய் அவதியுறும்
சமாதான காலத்தை
வெள்ளிக் கம்பிகளால்
அலங்கரிக்க வந்தாயா?
இங்கே எம் தெருக்கள்
பல்விழுந்த கிழவியாகச் சிரிக்கின்றன.
மதகுக்கண் மேலேயே
கப்பல் விட
வெள்ள நீர் சுழிக்கிறது.
மிதக்கின்ற ஊர் செல்ல
வழியேது மனிதருக்கு?
சுடுகாட்டில் பிணம்சுட்டுக்
கடன் முடிப்பதெப்போது.

மகவீன்ற பெண்ணுக்கு
சன்னியாய் ஒரு பரிசு.
அணைப்பிழந்த குழந்தைக்கு
குளிர்ப்போர்வை ஒரு பரிசு.
நற்தரைக்கும் நித்திரைக்கும்
நுளம்புகளால் நோய்ப்பரிசு.
பயிர் சரிந்த வயல்களுக்கு
நீர்க்காடோ நின் பரிசு.
வயிறெரியும் மனிதருக்கு
பட்டினியோ உன் பரிசு.
[illegible]ாட்சி நிவாரணமும்
[illegible]க்கெட்டவில்லை.
வெள்ள நிவாரணமும்
வீடு வரவில்லை.
உலகுக்கு எங்கள் குரல்
ஏன் கேட்குதில்லை.
உறக்கம் போல் நடிக்கின்ற
மானுடர்க்கே பஞ்சமில்லை.
வருண தேவா நீயுமா?
தருணமறிந்தே தான் வந்தாயா
இது முறையா?


——— அம்புலி

# நிச்சயமற்றதாய்...

புதிய புதிய
ஒப்பந்தங்கள் என்று
கை குலுக்கப்படும்
பருவ கால மலர்களாய்
எங்கள் மனங்களில்
நம்பிக்கை பூக்கள்
ஆனாலும்...
நாளையே உதிருமோ?
நிச்சயமற்றதாய்
நிகழ்கால நிகழ்வுகள்.

கு.தவசீலன்




# நமது காட்டுப் பூனைகள்



நீங்கள் வண்ணமய மான பூனைகளை வளர்ப்பீர்கள். பார்த்திருப்பீர்கள்.ஆனால் அவை எமது மண்ணின் பூர்வீக இனம் இல்லை.இங்கு நாம் தரப்போவது எங்கள் மண்ணின் மரபுரிமைச் சொத்தான பூனைகள் பற்றி.

காட்டுப்பூனை நமது காட்டில் வாழும் பூனை இனங்கள் நான்கு. இவற்றில் ஒன்று சிறுத்தை. இங்கு சிறுத்தை தவிர்ந்த ஏனைய நமது காட்டில் வாழும் பூனை இனங்களைப் பார்ப்போம். அந்த மூன்று பூனை இனங்களும் புனுகுப்பூனை, மஞ்சள் மரநாய், கறுப்பு மரநாய்.

புனுகுப் பூனைகள் ஆங்கிலத்தில் சிவெட்ஸ் என்று அழைக்கப்படுகின்றன. இவை பூனைகளைவிட தோற்றத்தில் வித்தியாசமானவை. கீரி மாதிரி நீண்ட உடல். நீண்ட வால்.

கட்டையான கால்கள். கீரி மாதிரியே நீள முகம்.

சாம்பல் நிற உடலில் கறுப்பு வரிகள் புள்ளிகள். அதுதான் புனுகுப்பூனை. எங்களின் கட்டையான காடுகளின் பூர்வீக விலங்கு இது. இதன் நீளம் இரண்டரை அடி வரும். துல்லியமாக பார்த் தால் 84 சென்ரிமீற்றர்.

இந்தப்புனுகுப் பூனையும் அணில்கள். எலிகள், கீரிகள் மாதிரி கொறிவகை விலங்குதான் உணவுகளை கொறித்தே உண்ணும். இதற்கு துல்லியமான பார்வைப் புலன் இருக்கிறது.

துல்லியமான கேட்டல் திறன் உள்ளது.நன்றாக நாய் மாதிரி மோப்பம் பிடிக்கும். இது சிறிய பூச்சி கள், பறவைகள்,தவளைகள் சிறிய விலங்குகள்.

தாவரங்கள் கிழங்குகள் பழங்களை உண்ணும். உலகளவில் அருகிவரும்.

உயிரினங்களில் நமது புனுகுப்பூனையும் ஒன்று. அதனால் அதனை அழியாது காக்கும் பொறுப்பும் நமக்கு உண்டு.

இது குட்டி ஈனுகையில் நிலத்தின் கீழ் சுரங்கம் தோண்டி அதற்குள்ளும் அல்லது பாறைகளின் இடுக்குகளிலும் வாழும்.ஒரு தடவையில் 3 முதல் 5 குட்டிகளை ஈனும்.

ஆண் புனுகுப்பூனைகளை விட பெண்புனுகுப்பூனைகள் அளவில் சிறியவை. இவற்றின் உயிரியல் பெயர் விவெரிக்குலா இன்டிகா மயோறி. நமது பூனை இனங்களில் அடங்குகின்றது.

## சிந்தனைத் துளிகள்

01. இயலாமை என்பது உடலிலல்ல மனதிலே மனவலுக் கொண்டவர்க்கு இயலாமை என்பதே கிடையாது.
02. ஊரார் கதைகளுக்கு செவிசாய்க்காதே அப்படி இருந்தால் உன்னுடைய இலட்சியப் பாதை பாதியிலே பள்ளத்துள் வீழ்ந்துவிடும்.
03. மனச்சாட்சியின் படி நட அடுத்தவர் கதைகள் உனக்கு தேவையற்றவை.
04. ஆடம்பரத்தில் ஆசைகொண்டு அலையாதே அதுதான் உன்னை ஆட்டிப்படைத்து அலங்கோலமாக்கிவிடும்.
05. துன்பம் வரும்போது கலங்காதே எவ்வளவு துன்பத்தை நீ அனுபவிக்கின்றாயோ அவ்வளவுக்கு உன்மனம் பக்குவப்பட்டு பலவிதமான அனுபவங்களைக் கற்றுக்கொள்கின்றாய்.

## சொற்சிலம்பம் - 67

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உ | கோ | ம | தி | ல் | ட் | ஸ் |
| டி | கு | நீ | நா | ள் | ர் | ட் |
| நெ | பா | ல் | கோ | ன் | ணி | ம் |
| நி | அ | க் | ய | சு | ங் | பெ |
| நா | ட் | த | ஷ் | ரா | வா | ர |
| ர | வ | கா | சா | ய் | யெ | ஜே |
| சி | பூ | ய் | ஓ | கி | வி | த் |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் - 65 இன் விடைகள்

01. ஜேம்ஸ்வாட்
02. திபெத்

## சொற்சிலம்பம் - 65 இன் பரிசுக்குரியவர்

சூ.மோகன்ராஜ், தரம்-8
விபுலானந்தா கல்லூரி,
பண்டாரிக்குளம்,
வவுனியா.

## சொற்சிலம்பம் - 65 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. சூ.சுபராஜ், 155 லக்சபானா வீதி, வவுனியா.
02. ந.கங்கா, கிளி/மத்திய கல்லூரி, கிளிநொச்சி.
03. யோ.நஜிதரன், வ/பூந்தோட்டம் அ.த.க, பாடசாலை.
04. சு.மாதவி, றோ.க.பாடசாலை, முல்லைத்தீவு.
05. அ.ரோஜிதா, அ.த.க.பாடசாலை, நட்டாங்கண்டல்.
06. வ.கிசோபன், வ/இறம்பைக்குளம், வவுனியா.
07. ந.டயாழினி, திரு நாவுக்கரசு மா.வி, யா.கொடிகாமம்.
08. S.லதாங்கி, துன்னாலை தெற்கு, கரவெட்டி.

01. சங்க காலத்து நிலப்பிரிவுகளில் ஒன்று.
01) ........................................

02. மத்தியதரைக் கடலையும் செங்கடலையும் இணைக்கும் கால்வாய்.
01) ........................................

பெயர் :- ..................................................


முகவரி :-..................................................


..................................................

சொற்சிலம்பம்-67
ஈழநாதம்.
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## காட்டுக் காவல் துறை

பகுதி-01





# அகதிகளாய்; நாடோடிகளாய் திரவியந்தேடிகளாய்....

**கருணாகரன்**

'இப்பொழுது தமிழ்க் குடும்பங்கள் அல்பங்களில்தான் ஒன்றாக வாழ்கின்றன' என்று சொல்வார் நண்பர் ஒருவர். இதை இன்னும் திருத்தமாகச் சொன்னால் 'அல்பங்களில்தான் இன்றைய தமிழ்க்குடும்பங்கள் ஒன்றிணைந்திருக்கின்றன' எனலாம்.

ஒரு பிள்ளை நோர்வேயில், அடுத்தது பிரான்ஸில், இன்னொன்று அவுஸ்திரேலியாவில், மற்றது போராட்டத்தில், மற்றொன்று கனடாவில் அல்லது லண்டனில், இப்படி கண்டத்துக்கொன்று, தேசத்துக்கொன்று எனக் குடும்பங்கள் பிரிந்து போயுள்ளன என மேலும் சொல்வார் அந்த நண்பர். இது உண்மைதான். சிலகுடும்பங்களில் பெற்றோர் மட்டும் இங்கேயிருப்பார்கள். சிலவற்றில் தாய் ஒரு நாட்டில் ஒரு பிள்ளையுடன். தகப்பன் வேறொரு பிள்ளையுடன் வேறுநாட்டில்.

அநேகமாக இந்தப் பிராந்தியத்திலுள்ள சமூகங்களில் ஈழத்தமிழர்களின் வாழ்க்கைதான் இப்படி இருக்கிறது. யூதர்களும் இப்படியொரு வாழ்க்கையைத்தான் போன நூற்றாண்டுவரையில் சந்தித்திருக்கிறார்கள்.

சொந்த நாட்டில் வேரிழக்கும்போது தவிர்க்க முடியாமல் வேறு நாடுகளில் வேர்விடுவது இயல்பாகிறது. சொந்த நாட்டில் அகதியாகும்போது வேறுநாடுகளில் தஞ்சம் கோருவது தவிர்க்க முடியாததாகிறது.

இப்போது அகதிகளால் நிரம்பி வருகிறது உலகம். அதிலும் அரசியற் பிரச்சினைகளால் அகதியாவதுதான் கூடுதல். இன்று எல்லா நாடுகளிலும் அகதிப் பிரச்சினையுண்டு. பல நாடுகளில் அரசியல் நெருக்கடி, சமூக நெருக்கடி காரணமாக அகதிகள் பெருகுகிறார்கள். சிலநாடு களில் தஞ்சமடையும் அகதிகள் பெருகுகிறார்கள். ஆகவே எங்கும் அகதி முகாங்கள் நிறைகின்றன. அகதிப்பிரச்சினையென்பது பெரிதாக வளர்ந்துவருகிறது.

முன்பு- இருபது வருசங்களுக்கு முன்- கஞ்சியைக் குடித்தாலும் கண்ணுக்கு முன்னால் பிள்ளைகள் இருக்கட்டும் என்றிருந்தவர்கள் இப்போது கண்டம் விட்டுக் கண்டத்துக்குப் பிள்ளைகளை அனுப்புகிறார்கள். கூழைக் குடித்தாலும் கூடியிருப்போம் என்று சொன்னவர்கள் பணந்தேடத் தொலைவுக்கேவுகிறார்கள் பிள்ளைகளை, ஊருக்குள் பெண் பார்த்து, அல்லது மாப்பிளை பார்த்து மணம்முடித்து வைத்தார்கள் அன்று. அது தங்களுடைய வயதான காலத்தில் ஆறுதலாக இருக்கும் என்று. இப்போது வசதிகள் பார்த்து கல்யாணம் பொருத்துகிறார்கள் வெளிநாடுகளுக்கனுப்புவதற்கென்று.

காலம் மாறிவிட்டது. வாழ்க்கையும் மாறிவிட்டது. மனமும் மாறிவிட்டது. தெரிவுகளும் மாறிவிட்டது. ஆனால், இந்த மாற்றங்கள் இயல்பான மாற்றமாக, வளர்ச்சிக்குரிய மாற்றமென்றால் பரவாயில்லை. அது வரவேற்கவேண்டியதும் கூட.

ஆனால், இவை நிர்ப்பந்தங்களால், வலிந்த காரணங்களால் நிகழும் போக்குகள். போட்டி உலகப் பொறிக்குள் விழுந்துவிட்ட மனச்சிதைவு இது.

அகதி வாழ்க்கை துயரம் நிறைந்தது. அவலமானது. நிம்மதியற்றது. உறவுகளை இழத்தல், தேசத்தை இழத்தல், ஊரை இழத்தல் என்பதெல்லாம் சாதாரணமானதல்ல. பெருங்கொடுமையானது.

ஒருபக்கம் இழத்தலின் வலியும் கொடுமையும் மறுபக்கம் அகதி வாழ்வின் அந்தரிப்பு, அந்நியச்சூழலில் ஒட்டமுடியா நிலை. மூன்றாம் நான்காம் தர மனிதனாக மற்றவர்களின் கருணைக்காகவும் இரக்கத்துக்காகவும் ஏங்கிக்கிடத்தல்.

சொந்த மண்ணிலேயே ஏதிலியாக வாழ்ந்த அனுபவம் பலருக்குண்டு. அதன் கொடுமையை அறிந்த அனுபவம் மறக்கமுடியாதது. அந்நிய நாட்டில், வேற்றுச் சூழலில் அகதி என்ற நிலை எவ்வளவுக்கு கொடுமையாக இருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

அங்கே அகதி என்பதை நிரூபிப்பதே பெரியவேலை. அகதி அந்தஸ்துக்கோருவது அதைவிடப்பெரிய காரியம். அகதி அந்தஸ்துக்கிடைத்துவிட்டால் அதைவிடப்பெரிய ஆறுதல் வேறில்லை. அகதி என்ற அடையாளத்தைப் பெறுவதற்கே எத்தனை பாடுகள் படவேண்டியிருக்கிறது. பார்த்தீர்களா? 'அகதிக்காட்' கிடைத்துவிட்டால் மனிதனாக வாழ்வதற்குக் கிடைத்த அங்கீகாரம் போன்ற நிலையை ஏற்கவேண்டியிருக்கிறது.

உலகின் எல்லாக் கண்டங்களிலும் இன்றைக்கு ஈழத்தமிழ் அகதிகள் இருக்கிறார்கள் என்கிறது அகதிகளுக்கான சர்வதேச அமைப்பொன்று. பிள்ளைகள் 'அகதி' என்ற அந்தஸ்துடன் தொலைநாடுகளில் வாழ, இங்கே பெற்றோர் தனிமையில் ஆதரவற்றிருக்கிறார்கள், காணி உறுதிகள், சொத்துரிமைகள் எல்லாம் கவனிப்பாரற்றுக் கிடக்குதிங்கே. அங்கே எல்லாவற்றையும் பெறுவதற்காக சிரமப்படவேண்டியுள்ளது.

மடிக்குள் பிள்ளைகளை பொத்தி வைத்திருந்த வாழ்க்கை மாறி பதினேழு, பதினெட்டு வயதிலேயே 'அகதி' என்ற அடையாளத்தோடு வெளிநாடுகளுக்கனுப்பும் வாழ்க்கை உருவாகியுள்ளது, முகம்தெரியாத முகவர்களுடன். அறியாத சூழலுக்கு தனியே வாழப்பிள்ளைகள் அனுப்பப்படுகிறார்கள், காசு தேவை என்பதே இதன் அடிப்படை. சொந்த மண்ணில் வாழ்க்கை உத்தரவாதமற்றிருக்கிறது என்ற காரணம் இதற்கு முன்வைக்கப்படுகிறது. உயிர்வாழ்வதற்கும் உழைப்பதற்கும் வளப்பயன்பாட்டுக்கும் ஏற்றநிலை இல்லாதபோது வெளியேற்றம் நிகழ்வது தவிர்க்கமுடியாதது என்பதும் ஒருவாதம்.

எப்படியோ பெற்றோர் தனியே வாடிக்கொண்டிருக்க, தவித்துக்கொண்டிருக்க பிள்ளைகள் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

இங்கே பெற்றோருக்கு காசு வருகிறது. கடிதங்கள் வருகின்றன. பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் ஒளிப்படங்கள் வருகின்றன. வீடியோப்படங்களும் வருகின்றன. தொலைபேசி வசதியிருக்கிறது. ஆனால் அவர்களைப் பராமரிக்கத்தான் ஆளில்லை. அல்பங்களை அடிக்கடி எடுத்துப்பார்த்துக்கொண்டு, பிள்ளைகளின் சிறிய வயது நினைவுகளை மீட்டுக்கொண்டு பொழுதைக் கழிக்கிறார்கள். முதுமை நாளின் பெரும் பகுதி பிள்ளைகளிடமிருந்துவரும் கடிதங்களைப் படிப்பதிலேயே கழிகிறது. தங்களின் இறுதி நாட்கள் குறித்த கவலையைத்தான் அவர்களால் வெல்லமுடியவில்லை.

வெளிநாடுகளிலுள்ள சில இடங்களில் பிள்ளைகளின் படங்களைப் பெருமையுடன் காட்டித்திரியும் பெற்றோரும் இருக்கிறார்கள். பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் கதைகளைப் பெருமையுடன் புகழ்கின்றவர்களும் உண்டு. ஆனால் அவர்களைச்சூழ்ந்திருக்கும்



தனிமையை வெல்ல அவர்களால் முடிவதில்லை. அவர்களில் நிரம்பியிருக்கும் பொறுமையை வெல்வதற்காக அவர்கள் இப்படியெல்லாம் நடந்துகொள்கிறார்கள். சமநிலையற்ற தன்மையே இது என்கிறார்கள் உளவியல் மருத்துவர்கள்.

ஆக வலிநிரம்பியதாகவே தமிழரின் இன்றைய வாழ்க்கையிருக்கிறது. இந்த வலிமிக்க வாழ்க்கையில் அகதி அடையாளத்துடன் படாத பாடெல்லாம் பட்டு வெளிநாடுகளில் உழைக்கும் காசின் பெறுமதி என்ன? அது எப்படியாக்கப்படுகிறது?

வெளிநாட்டு வாழ்க்கையின் அந்தரிப்பையும் அவலத்தையும் அங்கிருந்து வருவோர் சொல்கிறார்கள். ஓய்வற்ற வேலை கணவனும் மனைவியும் சந்திப்பதற்கே முடியாத அளவுக்கு வேலைச்சுமையும் உழைக்கவேண்டிய தேவையும்.

தனியன்களாக, இளைஞர்களாக இருப்போர்கூட சராசரி தினமும் இருபது மணித்தியாலம் வரையில் வேலை செய்கிறார்கள். நித்திரையில்லை. நல்ல சாப்பாடில்லை. தனியே சமைத்து, தனியே இருப்பிடத்தைப் பராமரித்து, தனியே தன்னுடைய காரியங்களைப் பார்த்து, தனியாகவே உழைக்கவும் வேண்டியிருக்கிறது. தங்கள் உடலையும் மனதையும் அவர்கள் சக்கையாகப் பிழிகிறார்கள். தங்களைப் பிழிந்த சாற்றைத்தான் இங்கே காசாக அனுப்புகிறார்கள்.

தலையிடியோ, காய்ச்சலோ என்றால்கூட ஒரு தேநீர் ஊற்றிக்கொடுப்பதற்கு உதவியில்லை. மனதை விட்டுப் பேசுவதற்கு ஆளில்லை என்ற நிலைமைகளுக்கூடாக வாழ்ந்து உழைத்தே பணத்தை இங்கே அனுப்புகிறார்கள்- புதல்வர்கள்.

அப்படி வருந்தி உழைத்த பணம் இங்கே பயன்படுத்தப்படும் விதத்தைப்பார்த்தால் சகிக்கமுடியாத அளவுக்கு வருத்தமாக இருக்கிறது.

காணிவிலைகளை உயர்த்துவதற்கும், ஆட்களில்லாமலே பெரிய வீடுகளைக் கட்டுவதற்கும் கோவில்களைப் பெருப்பிப்பதற்கும் சீதனத்தைக் கூட்டுவதற்கும் 'டொல்பின்' மோட்டார் சைக்கிள்களை வாங்குவதற்கும் என்று பயன்குறைந்த வகையில் காசு பாழ்படுகிறது.

அங்கிருந்துவரும் பணத்தை உற்பத்திக்கான முதலீடாக்கும் நோக்கம் எவருக்கும் இல்லை. புதிய தொழில் முயற்சிகள், சமூக நலத்திட்டங்கள் ஒன்றுக்கும் அதைப்பயன்படுத்துவதில்லை.

குறுகிய வட்டத்தில், தற்பெருமைக் கான இலக்கிலேயே பெருமளவு வெளிநாட்டுக்காசும் செலவழிக்கப்படுகிறது.

புலம்பெயர்ந்திருக்கிற நாடுகளில் போராட்டத்துக்கென வழங்கப்படுகிற காசுதான் பயனுள்ளதாகிறது. அதை இன்னும் விரிவுபடுத்தலாம். அதைப்போல இங்கே அனுப்புகிற காசையும் குடும்பத்தவர்களே தமக்கு வருமானம் தரக்கூடியதாகவும் பிறருக்கு நலன் வழங்கக்கூடியதாகவும் பயன்படுத்தலாம். அதற்குரிய எண்ணத்தை வளர்க்க வேண்டும் - ஒவ்வொருவரும்.

அப்படி ஒரு செயல்முறை வளரும்போது புதிய உறவுகள் இங்குள்ள பெற்றோருக்கோ புலம்பெயர்ந்த உறவுகளுக்கோ உருவாகும். அந்த உறவுகள் இவர்களின் தனிமையையும் வெறுமையையும் போக்கிவிடும். அதையே இன்றைய நாள் எதிர்பார்க்கிறது. பழிகளிலிருந்தும் அகதி அடையாளத்திலிருந்தும் விடுபடுவதற்கான வழியும் அதுவே.

## வீடு

# உணரப்பட வேண்டிய உண்மை

பெண்களின் அறிவு பெருகவேண்டும். பெண்களின் ஆளுமை சிறக்கவேண்டும் என்பதில் யாருக்குமே மாறுபாடு கிடையாது. ஆனால், இந்த அறிவும் ஆளுமையும் எவ்வளவுக்கு வளரலாம் என்பதில் மாறுபாடுகள் இருப்பதாகவே கருதமுடிகிறது.

'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாய்' என்றார் அன்று பெண்விடுதலைக்காக குரல் கொடுத்த பாரதி. இன்றைக்கு நூற்றாண்டு கடந்த பிறகும் சிந்தனைகளில் மாற்றம் இருக்கிறதா எனக் கேட்டுப் பார்த்தால்.

'ஆண்களைப்போல வளரவேண்டும்'

'ஆண்களுக்கு நிகராக அனைத்தையும் செய்தார்கள்' என்கின்ற மாதிரியான கருத்துகளே காணப்படுகின்றன. ஆண்கள் அளவுகோல்களாகக் கருதப்படலாமா? இன்றைக்கு பெண்களின் ஆற்றல்களும் ஆளுமைகளும் சரிநிகர் சமானத்தை தாண்டி மேலோங்கி நிற்பதை காணமுடிகிறது. பல இடங்களில், பல சந்தர்ப்பங்களில் ஆண்களான தந்தை, துணைவன், சகோதரன் போன்றோர் தமது மகள், துணைவி,சகோதரி தன்னையும் மிஞ்சிய ஆற்றல் பெறுவதை விரும்புகிறார்கள். எதிர்பார்க்கிறார்கள். பாடுபடுகிறார்கள். இந்த நிலையில்,

ஆண்களைப்போல வளரவேண்டும் என்பதும், ஆண்களுக்கு நிகராக அனைத்தையும் செய்ய வேண்டுமென்பதும் ஆரோக்கியமான கருத்துகளல்ல. இவை ஆண்கள் மீது குரோதங்கொள்ளவைப்பதாகவே அமையும்.

பெண்விடுதலை என்பது ஆண்களுக்கு எதிரான போராட்டமல்ல. ஆணாதிக்கத்துக்கு எதிரானது தான் என்பது தெளிவானது. பெண்ணின் விடுதலை என்பது ஆணை வெறுத்துப் புறந்தள்ளுவதோ அல்லது ஆணை அடிமைப்படுத்த நினைப்பதோ அல்ல. மாறாக பெண் இந்தச் சமூகத்தில், தேசத்தில் சுதந்திரமாக வாழ்வதற்கானதே.

எத்தனையோ குடும்பங்களில் ஆண் பிள்ளைகள் படிப்பை இடையிலே குழப்பிவிட்டு இருக்க, பெண் பிள்ளை படித்து குடும்பத்தையும் முன்னேற்றி தானும் முன்னேறியிருக்கிறாள். மிகவும் கடினமான துறைகளில் பல பெண்கள் உச்சத்தில் இருக்கிறார்கள். இந்தப் பெண்களின் உயர்ச்சி எந்த அளவீடுகளுக்கும் அப்பாற்பட்டதாகவே இருக்கின்றது.



ஒரு காலத்தில் வானம் வசப்படாததாகவே இருந்தது. பின்னாளில் அந்த வானத்திலேயே வலம் வருபவர்களாக மாறிய பெண்கள் இருக்கிறார்கள். காலம் பெண்களுக்கு கடினமான பாடங்கள் பலவற்றைக் கற்றுத் தந்திருக்கிறது. இந்தப் பாடங்களே அனைத்து அடக்குமுறைகளையும் தகர்த்தெறிந்தது. சுதந்திரமாக வாழவேண்டும் என்கின்ற எண்ணத்தை பெண்களிடம் தோற்றுவித்தது. இன்றைக்கு பெண்கள் தமது கால்களைச் சுற்றியிருந்த பல அடக்குமுறைப்பாம்புகளை உதறி எறிந்துவிட்டார்கள். தனித்துவம்மிக்க பல பெண்கள் இருக்கிறார்கள். இருந்தாலும் பெண்கள் அடையவேண்டிய இலக்குகள் இன்னமும் பல இருக்கின்றன.

இந்த இலக்குகள் 'ஆண்களைப்போல வரவேண்டு'மென்பதாக அமையக்கூடாது. ஆண் என்பதும் பெண் என்பதும் படைப்பியல் ரீதியானது. மனித ஆளுமை என்பது இந்தப் படைப்பியல் நியதிக்கு அப்பாற்பட்டது. இந்தப் படைப்பியலைக்கூட பெண் நிலையிலிருந்தே பலர் நோக்குகின்றார்கள். பெண்களுக்கான கருத்தரங்குகள் வெறுமனே. பெண்களை மட்டுமே உள்வாங்குவனவாக இருக்கின்றன. பெண்களின் பிரச்சினைகளை ஆண்கள் அறிவதற்கான வாய்ப்புகளை இக் கருத்தரங்குகள் வழங்குவதில்லை. இதனால் ஆண்களும் 'பெண்களுக்கென்றே பிரச்சினைகள். அவற்றை பெண்கள் பேசுகிறார்கள்' என நினைத்துக்கொள்கிறார்கள். ஒதுங்கிக்கொள்கிறார்கள். இத்தகைய கருத்தூட்டல்கள் ஒரு சமூகத்தின் அங்கத்துவர்களான ஆண்களையும் பெண்களையும் சேர்த்தே வழங்கப்படவேண்டும். இந்த முறைமை ஆண்- பெண்களையும், பெண் ஆணையும் புரிந்துகொள்ள வழி வகுக்கும்.

ஆணும் பெண்ணும் இரு துருவங்களல்ல சமாந்திரக் கோடுகளுமல்ல ஆணும் பெண்ணும் இணைந்ததே சமூகம். ஆணையும் பெண்ணையும் உயர்த்துவதன் மூலம் சமூகம் உயரப் பாடுபடவேண்டும்.

**ஆதிலட்சுமி சிவகுமார்**

## இப்படிச் செய்யலாம்...

*காய்கறிகளிலே அவற்றின் தோலை ஒட்டியே விட்டமின் சத்தும் உலோகச் சத்தும் அமைந்திருக்கின்றன. அதனால் அவற்றின் தோலைச் சீவாமல் நறுக்கிப்போட்டு வேகவைக்க வேண்டும். வேக வைக்கும்போது பாத்திரத்தை மூடிவையுங்கள்.*

✤ ✤ ✤

*பெண்கள் சமையல் செய்யும்போது சூடான எண்ணெய் பட்டுவிட்டால், அந்த இடத்தில் உருளைக்கிழங்கைச் சிறிது அரைத்துப்பூசுங்கள். கொப்புளங்கள் ஏற்படாது. குணம் ஏற்படும்.*

*இஞ்சி தேவைக்கு அதிகமாக இருந்தால், அதை மண்ணில் புதைத்துவைத்துத் தண்ணீர் விட்டு வையுங்கள். தேவைப்படும் போது எடுத்து உபயோகிக் கலாம். இஞ்சி காய்ந்து போகாது.*

✤ ✤ ✤

*பாகற்காய், வேகமாக பழுத்து விடும். இதைத் தவிர்க்க பாகற்காய்களை இரண்டிரண்டாக நறுக்கி வைத்துவிடுங்கள்.*

*கிழங்கை உப்புக் கரைத்த நீரில் பதினைந்து நிமிடங்கள் ஊறவைத்து விட்டுப் பிறகு அடுப்பில் வைத்தால் வேகமாக அது வெந்துவிடும்.*

✤ ✤ ✤

*முதல் நாள் மாலையில் பிடுங்கிய பூ, மறுநாள் காலை வரையில் இருக்கவேண்டுமா? பூவை ஈரத்துணியில் சுற்றி வைக்காதீர்கள். ஒரு பாத்திரத்தை நன்றாக கழுவிட்டு, அந்தப் பாத்திரத்திற்குள் பூவை வைத்து மூடி வையுங்கள். பூ வாடாமல் நீங்கள் வைத்தது மாதிரியே இருக்கும்!*

✤ ✤ ✤

# புரிந்து கொள்ளுதல் அவசியம்

சில ஆண் பெண்களைப் பார்த்தால் என்நேரமும் அவர்கள் எமக்கு உதவில்லை என்று குறை கூறியபடியே அலட்டிக்கொண்டிருப்பார்கள். உண்மையில் இப்படியான குணம் கொண்டோர் யோசிக்க வேண்டும். அடுத்தவரிடம் எமக்கு உதவி கிடைக்கவேண்டும் என்ற எண்ணம்வரும் போது எம்மைக் கேள்வி கேட்டுப் பார்க்கவேண்டும். நர்ம் அவர்களுக்கு என்ன செய்கின்றோம் என்பதை.

ஒரு அண்ணனோ தம்பியோ அல்லது சகோதரியோ எமக்கு பண உதவி செய்யாத போது அவர்கள் என்ன நிலையில் உள்ளார்கள் என்பதை அறியாமல் எம்வாயில் வந்த படி இவனும் ஒரு மனிதனோ என்று கொடிய வார்த்தைகளை அவர்கள் மீது வீசிவிடுகின்றனர்.

நாம் இப்படி அவர்கள் நிலை புரியாமல் நடப்பது மிகவும் வேதனைக்குரியவிடயம்.

எப்பவும் எம் துன்பங்களைப் பெரிதாக எண்ணும் நாம் எம் சகோதரங்களின் நிலையை எண்ண மறப்பது ஏன்?

இன்றைய விலைவாசிகளைப்பார்க்கும்போது குடும்பச் செலவுக்கு இரண்டுபேர் உழைத்தாலும் போதாது. இவற்றைப் புரியாமல் அண்ணா எனக்கு காசு தரவில்லை என்று சண்டை பிடிப்பது நியாயமா?

இந் நிலை மாறினால் தான் குடும்பங்களில் நிம்மதி அமைதி கிடைக்கும் பெரும்பாலான குடும்பங்களில் நிம்மதி இருப்பதில்லை. ஏன் இந்த நிலை கொஞ்சம் சிந்தியுங்கள். உங்களுக்குத்தான் கஷ்டம் கவலைகள் [illegible]டன்களா? மற்றவர்களுக்கு இல்லையா? அவர்கள் ஒன்றையும் வெளிப்படையாக சொல்லாதபடியால் உங்களுக்கு அது புரிவதில்லை.

நீங்கள் அவர்கள் துன்பங்களில் பங்கெடுப்பதில்லை. வாலிபனாக இருக்கையில் எவ்வளவோ செய்திருப்பார்கள் என்பதை சிந்தியுங்கள். அவர்கள் திருமணம் செய்த பிற்பாடு அவர்களை குடும்பத்தில் நின்மதியாக இருக்க விடுவதில்லையே. ஏன் தான் இப்படி சுயநலத்தோடு வாழ்கிறீகள். கொஞ்சம் கருணை காட்டுங்கள் அவர்களின் வாழ்விலும் வசந்தம் வரட்டும்.

**சு.சிவாஜினி**

## முட்டை வடை




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| கோதுமை மா | -1கிலோ |
| சீனி | -200 g |
| முட்டை | -05 |
| அப்பச்சோடா | -சிறிதளவு |
| உப்பு | -சிறிதளவு |

செய்முறை:-

முட்டையை நன்றாக அடித்து எடுக்கவும். அரித்த மாவுடன் சீனி, அப்பச்சோடா, உப்பு என்பவற்றை கலந்து பிசையவும். பின் அடித்த முட்டையை மாவுடன் ஊற்றி பிசைந்து சிறிது உருண்டையாக பிடித்து றொட்டித் தட்டில் உருட்டி எடுத்து முட்டை வடிவில் வட்டம் வட்டமாக வெட்டி எண்ணெயில் பொரித்து எடுத்து ஆறியதும் சுவைக்கலாம்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்–28**

பெயர்:..........................................

முகவரி:..........................................

..........................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில். பங்குபற்றமுடியாது.

# சிரிக்க மறக்கலாமா...?

இன்றைய யுகம் ஒரு இயந்திர யுகமெனலாம். மனிதன் எந்நேரமும் பணம் தேடி அலையும் ஒரு இயந்திரமாக மாறிவிட்டான். எனவே அவன் காலம் காலமாக பேணிவந்த பல விடயங்கள் இன்று கைவிட்டுப் போயுள் ளன. அவ்வாறு இன்று மனிதனிடம் அருகிவரும் ஒன்று 'சிரிப்பு' மனிதன் சிரிக்க மறந்துபோய் திரிகிறான். அவன் எந்நேரமும் தனது முழுக் கவனத்தையும் உழைப்பில்தான் செலுத்துகிறான்.


தன்னுடைய உடலில் ஏற்படுகின்ற நோய்களைக் குணப்படுத்த தவறிவிடுகிறான். சிரிப்பினால்கூட பல நோய்கள் குணமாகின்றன என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தன்னுடைய நோயை சிரித்துக்கூட மனிதன் சுகப்படுத்த மறந்து போகிறான். வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்பார்கள். (அதற்காக மலேரியா நோய்வந்து விட்டால் இருந்து சிரித்துக்கொண்டிருக்காதீர்கள். பின்னர் நீங்கள் சிரித்து செத்ததாகிவிடும்)நாம் வாய்விட்டுச் சிரிக்க வேண்டும்.

முற்காலத்து அரச கதைகளில் அரச அவையிலே சிரிப்பை ஏற்படுத்தவென விகட கவிகள் இருந்துள்ளதை நாம் இலக்கியங்கள் வாயிலாகவும் வரலாறுகள் வாயிலாகவும் படித்துள்ளோம். இதில் தென்னாலி ராமன், முல்லா, பிர்பால் போன்ற விகட கவிகளைக் கூட குறிப்பிடலாம். பண்டையகால இலக்கியங்களில் கூட நகைச்சுவையுணர்வுடன் எழுதப் பட்டுள்ளதை நாம் படிக்கின்றோம். அதாவது அரச அவையில் நகைச்சுவை இலக் கியங்களில் நகைச்சுவை என்று சிரிப்புக்கு முற் காலத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதெனில் அதன் முக்கியத்துவம் அன்று எவ்வாறு உணரப்பட்டுள்ளது. அப்படியானால் இந்தச் சிரிப்பில் என்ன நன்மை இருக்கின்றதென இனிப்பார்ப்போம்.

சிரிப்பு நான்கு வழிகளில் எமக்கு உதவுவதாக நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

1.கவனத்தை திசை திருப்புகிறது.
2.பதற்றநிலையை குறைக்கிறது.
3.எதிர்பார்ப்புகளை மாற்றி அமைப்பது.
4.இயற்கையாக உடலில் உள்ள நோய்க் கொல்லியான ENDORPHINS எனும் இரசாயன பதார்த்தங்களின் உற்பத்தியை அதிகரிப்பது ஆகிய நான்கு செயற்பாட்டை செய்கின்றது.

சிரிப்பு உடல்வலியை குணப்படுத்தி சமநிலைப்படுத்தும் ஆற்றல் கொண்ட பக்கவிளைவுகள் அற்ற ஒரு இயற்கை மருந்து. நாம் சிரிக்கும் போது Pitutory சுரப்பியில் இருந்து Endorphins எனப்படும் பதார்த்தங்கள் நாம் சிரிக்கச் சிரிக்க மூளையில் Endorphins பதார்த்தங்களின் அளவு அதிகரிக்கின்றது. இதனால் வலியை அல்லது துன்பத்தை உணரும் தன்மை குறைகின்றது. எனவே எமக்கு மகிழ்ச்சி தருகின்ற சுரப்பானது



சுரப்பிற்கு சிரிப்பு காரணமாக அமைகின்றது.

நாம் வாய்விட்டுச் சிரிக்கும் போது முகத்திலும் அடிவயிற்றிலும் உள்ள தசை நார்கள் நன்கு விரிந்து சுருங்கி நன்மை தருகின்றன. அதேவேளை உடலில் உள்ள ஏராளம் தசைகளும் ஓய்வெடுத்து நன்மை தருகின்றன.

சிரிப்பு, நோய் எதிர்ப்பு சக்தியை உண்டு பண்ணுகிறது.

சிரிக்கும்போது இதயத்துடிப்பு அதிகரிக்கின்றது. இதனால் மேலதிகமான ஒட்சிசன் மூளைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. இதனால் இதயமும், உடலும் ஓய்வு பெற்று அமைதியடைகின்றன. இவ்வாறு சிரிப்பின் நன்மைகள் நீண்டு கொண்டே போகும்.

எமக்கு ஒரு வருத்தம் வந்தால் நேரத்தை, பணத்தை செலவிட்டு அதை குணப்படுத்துகிறோம். பல நோய்களை எதிர்க்கும், வராமல் தடுக்கும் சிரிப்பை வாயில் வைத்துக் கொண்டு சிரிக்காமல் இருக்கின்றோம். சிரிப்பு ஒரு செலவில்லாத ஆடம்பரப்பண்டம். எனவே நாம் துன்பங்களை எதிர் கொள்ள சிரிக்க வேண்டும். துன்பத்திலும் சிரிக்க வேண்டும்.

மேடையில் பேசும்போது நகைச்சுவை கலந்து சிரித்த முகத்துடன் பேசினால்தான் மக்கள் அதனை கேட்பார்கள். பேசுபவரின் கருத்தும் அவர்களின் மனதில் நிலைத்திருக்கும். சிரிப்பு வியாபாரிகளுக்கும் முக்கியம். 'சிரிக்கத்தெரியாதவன் சிறந்த வியாபாரியாக இருக்க முடியாது' என்கிறது. ஒரு சிரிப்புப்பழமொழி. சிரிக்கத் தெரிந்தவன் வறுமை எனும் சிறைக்குள் ஒரு போதும் அகப்படமாட்டான் என்று ஓர் அறிஞர் கூறியுள்ளார்.

திருப்தியை, மகிழ்ச்சியை, தெம்பை, ஆளுமையை, ஆற்றலை, உற்சாகத்தை தரக்கூடிய சிரிப்பை நாம் சிறைவைக்கலாமா? ஆரோக்கிய மான மனிதர்கள் தினமும் சராசரி 100தடவை சிரிக்கிறார்கள் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

சிரிப்பை நகை என்றும் கூறுகிறார்கள். நகை என்பது ஆபரணம் என்பதை ஒத்த சொல் அதாவது தங்க பொன் நகைகளை பணத்திற்கு வாங்கி உடலுக்கு மெருகூட்டும் நாம் செலவில்லா ஆடம்பரப் புன்னகையை முகத்தில் அணிந்து உள்ளத்தை அழகூட்டத் தவறிவிடுகிறோம். எனவே நாம் சிறைவைக்கப்பட்ட சிரிப்புப்பறவையை திறந்து விட்டு மகிழ்ச்சி வானில் சிறகடிப்போம்.

# இலக்கியப்பகிர்வு

## காடு=நாடு



இறுக்கமான பொருண்மியத்தடை எரிபொருட்தடை எனப் பல விதமான தடைகள் விதிக்கப்பட்ட காலம். வன்னிமண் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தின் மையத்தின் மையத்தளமாக இருந்த சூழல். போராட்டம் முனைப்புப் பெற்ற அந்தவேளையிலே வன்னியில் ஏற்பட்ட மாற்றங்கள், மாற்றீடுகளில் பிரதானமான கலை இலக்கியத்துறையின் எழுச்சி, அச்சடிப்புத்தாளும், அச்சு மையும் கண்காட்சிப் பொருளாக இருந்த அந்தவேளையில்கூட தேய்ந்த ஈய எழுத்துக்களைப் பாவித்து கொப்பித் தாள்களிலும் வெளியீடுகள் வெளிவந்ததை இப்போது நினைத்துப் பார்க்கும்பொழுது கனவுபோல உள்ளது.

சிறுகதைத் தொகுப்புக்கள், கவிதைத் தொகுப்புகள் எனத் தனித்தும், பல் கூட்டுச் சேர்ந்தும் நூல்கள் வெளிவந்ததோடு மாத்திரம் அல்லாது அவை யாவராலும் பேசப்பட்ட நூல்களாகவும் இருந்தன.

அக்காலத்தில் பல புதிய பழைய எழுத்தாளர்கள் ...ப்புக் களைப்படைத்தாலும் முல்லைக் கமல், அமரதாஸ், பிரதீபகுமாரன், சு.மகேந்திரன், சித்தாத்தன், கருணாகரன் போன்ற பலரின் நூல்கள் முதற்தடவையாக நூல்களாகி அச்சுக்கு வந்தன. அவ்வாறான தனது முதல் நூலை அப்போது தந்தவர் வளநாடன் என்னும் மு.கனகரட்ணம்.

இப்போது கணனி மூலம் அச்சுத்தொழில் அல்லது வெளியீடு என்பது குடிசைக் கைத்தொழில் மாதிரி ஆகிவிட்டது. விதம்விதமான வடிவமைப்புக்களில் வெவ்வேறு வகையான நூல்கள் வன்னியிலும், யாழ்ப்பாணத்திலும் தமிழ் மக்கள் வாழும் சகல இடங்களிலும் வெளியாகின்றன.

இதற்கு ஒரு படிமேலேயே மணிமேகலைப் பிரசுரம் நம்மவர்களின் வெளியீடுகளையே பிரதானமானவெளியிடும் நிறுவனமாக வளர்ச்சி பெற்றுவிட்டது என்பது வேறு விசயம்.

வளநாடன் இப்போது வெளியிட்டு இருப்பது காடு=நாடு என்கிற சிறு நூல்- சிறுநூல் என்பதைவிட வேறு ஏதாவது ஒரு பெயர் வைக்க முடிந்தாலும் பரவாயில்லை.

இந்தச் சிறுநூல் சிறுவர்களுக்கான நாடகநூல் அதுகாரணமாகவே இந்த வடிவம் எடுத்ததாக இருக்கவேண்டும். சிறுவர்களைக் கவர்வதற்காக இவ்வாறு வடிவம் எடுத்தாலும் இப்படியான பல நாடகங்களை ஒன்று சேர்த்து ஒரு நூலாக வெளியிடுவது முற்றிலும் பொருத்தமான ஒரு நடவடிக்கையாக அமையும்.

ஒவ்வொரு பக்கமும் ஓவியர் பயஸின் ஓவியங்கள் கொண்ட இச் சிறுநூல் சிறுவர்களை தம்வசம் இழுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

குரங்குகள் வசிக்கும் பகுதிக்குள் அத்துமீறி ஆக்கிரமிக்கும் நோக்குடன் சில மிருகங்கள் வருகின்றன. வந்தவை சும்மா இருக்கவில்லை சூறையாடுகின்றன. அவற்றுக்கு சில குரங்குகளும் உதவி புரிகின்றன.

ஆக்கிரமிப்புச் செய்யப்பட்ட தமது பகுதியை குரங்குகள் தந்திரமான யுத்தம் செய்து மீட்டுக்கொள்கின்றன. இது காடு=நாடு சொல்லும் கதை.

இது எதனை வெளிப்படையாகச் சொல்லுகின்றது என்பதை இங்கு விபரிக்கவேண்டிய அவசியம் இல்லை. எங்கள் வாழ்வியல் நெருக்கடிகள் எங்கள் போராட்டச் சூழல் இதனை வெளிப்படுத்தும்.

இவ்வாறான நாடகங்கள் எமது சிறுவர் நாடகங்களாக அமையலாமா? என்று கேள்வி எழலாம். அதற்கு முன்னர் மதிப்புக்குரிய பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் தமது "தப்பிவந்த தாடிஆடு" என்ற சிறுவர் நாடகநூலுக்கு வழங்கிய முன்னுரையில் தெரிவித்த சில கருத்துக்களை இங்கு பார்ப்போம்.

"எமது சிறுவர் மத்தியில் இடம்பெறும் நாடகங்களை எடுத்துப் பாருங்கள் கர்ணன் குந்தி கதை இவற்றுள் ஒன்று. கர்ணனின் அனுபவமும் குந்தியின் அனுபவமும் சிறுவர்களின் அனுபவத்திற்குட்படாததொன்று. அன்றியும் தான் பிள்ளைகள் பெற்ற முறையையும் கன்னிப்பருவத்தில் தான் கர்ணனைப் பெற்றெடுத்த கதையையும் குந்தியாக வரும் சிறுவனோ, சிறுமியோ மேடையில் ஒப்புவிப்பர். இவ்வார்த்தைகள் அவர்களின் அனுபவத்திற்கு மீறியவை என்பதுடன் சிறார்களின் மனப்பாங்கையும் இக்கருத்துக்கள் பாதிப்பன. பரத நடனகாரரும் இவ்வண்ணமே. ஆறு வயதுப் பிஞ்சுக்கு ராதை வேடமிட்டுக் கண்ணனைக் காணாமல் விரகதாபமுறுவதாக அபிநயிக்க அப்பிஞ்சுக்குக் கற்றுத்தருவர். இங்கெல்லாம் பிள்ளை ஆசிரியர் சொல்லிக் கொடுப்பதைப் போலச் செய்கிறதே (IMITATE) தவிர சுயமாகச் சிந்தித்துத் தானே இயல்பாகச்செய்யும் பண்பை இழந்து விடுகின்றது. இக்குணாம்சம் தன் நம்பிக்கையை இழக்கச் செய்து மற்றவரிற் தங்கியிருக்கும் பண்பையே சிறாரிடம் வளர்க்கிறது"

"சிறுவர் நாடகத்தில் மிகப் பிரதானமான அம்சம் நடிக்கும் சிறுவர்களும் பார்க்கும் சிறுவர்களும் அந்த நாடகத்தில் குதூகலமாக எந்தவித உளத்தடைகளும் இன்றி ஈடுபடுதலாகும். சிறுவர் நாடகத்தைப் பொறுத்தவரை நாடகத்தின் செம்மை அத்துணை முக்கியமன்று. அதன் மூலம் உருவாக்கப்படும் சிறுவரின் செம்மையே முக்கியமானதாகும். நாடகத்தில் இடம்பெறும் கதை, சிறுவர்கட்கு உகந்ததாக அமைய வேண்டும். மாணாக்கர் ஆடல் பாடல் கேளிக்கைகளில் விருப்புடையோராதலால் நாடகத்தில் ஆடலும் பாடலும் நகைச்சுவையும் இணைந்து சிறுவரை எப்போதும் மகிழ்ச்சியில் ஈடுபடுத்த வேண்டும். சிறுவர் பருவம் விளையாட்டுப் பருவமாதலால் விளையாட்டில் ஈடுபடும் மனப்பாங்குடன் நாடகத்தில் ஈடுபடும் வகையில் நாடகம் ஒரு விளையாட்டுப்போல அவர்கட்கு அமைதல்வேண்டும். சிறுவர் எதையும் பெரிதாகக் கற்பனை செய்பவர்கள். எனவே மேடையில் அபிநயங்களும் ஒப்பனைகளும் பெரிதுபடுத்தப்படவேண்டும்.

மேற் குறிப்பிட்ட விடயங்கள் சிறுவர் நாடகங்கள் தொடர்பில் ஒரு முன்வரைவினை எமக்கு ஏற்படுத்துகின்றன.

"கூனிக்கூனிக் கொப்பால்
குங்கார் நடந்து போகிறார்
வேப்பம் காயைக்
குழையை உருவி
விரும்பித் தின்கிறார்.
குட்டி வயிற்றில்
ஒட்டக் கட்டிப் பிடிக்கத்
தாவிறார்.
நட்டு வாலைக் கிழப்பி
நிமிர்ந்து நடந்து காட்டுகிறார்."

எனத் தொடங்குகின்றது நாடகம்.

'துள்ளித்துள்ளிப் பாய்வோம்
துணிவுடன் துள்ளிப்பாய்வோம்
மரத்தைக் கெட்டியாகப் பிடிப்போம்
கெட்டுவிட்டுக் கெட்டு
பக்குவமாய் மாறி
எங்கள் உணவைத் தேடிடுவோம்.
எமக்குகந்த காய் கனிகளை
பறித்திடுவோம்."

என்ற பாடலுடன் துள்ளிப் பாய்கின்றார்கள் சிறுவர்கள்.

"பழத்தை உலுப்புவோம்
அவர்களைப் பட்டினிபோடுவோம்.
பசியால் அழுவார்கள்
காட்டைவிட்டு ஓடுவார்கள்
கிடங்கு தோண்டுவோம்.
ஆழமாய்த் தோண்டுவோம்.
கிடங்கு தெரியாமல்
இலை குழை செடி போடுவோம்.
ஓடி வருவினம் தொப்பெண்டு
கிடங்கில விழுவினம்"




எனவும் பாடுகின்றார்.

ஆடலும் பாடலும் நாடகத்தை வளர்த்துச்செல்கின்றது. இசையும் இணையும்போது நாடகத்தின் தாக்கம் அதிகரிக்கும்.

அண்மையில் சிறுவர்கள் பங்கு கொண்ட சில நிகழ்ச்சிகளை பார்க்கநேர்ந்தது. வெறும் பாடலுடன் (அதுவும் ஆசிரியர் சுரத்தில்லாமல் பாடியபாடல்கள்) சில ஆடல்களும் ஒலிப்பதிவு நாடாமூலம் வெளிப்படுத்தப்பட்ட புரட்சிகானங்களுக்கான ஆடல்கள் சிலவும் இடம்பெற்றன.

இதில் இசையுடன் கூடிய புரட்சிகானங்களுக்கு சிறுவர்கள் மிகுந்த உற்சாகத்துடனும் ஆடினார்கள். ஆசிரியர் இசையில்லாமல் பாடிய பாடலுக்கு எந்தவிதமான ஈர்ப்பும் இல்லாமல் சிறுவர்கள் செயற்பட்டார்கள் என்பதை இங்கு சொல்லியாக வேண்டும்.

காடு=நாடு சிறுவர்களுக்கு ஏமாற்றும் தன்மையினை போதிக்கின்றது என்ற குற்றச்சாட்டு சிலரால் எழுப்பப்படுகின்றது என ஆசிரியர் வளநாடன் இந்த நூல் தொடர்பாக உரையாடும்போது தெரிவித்தார்.

ஆனால்சிறுவர் விளையாட்டுகளில் தந்திரமாக செயற்படுவது அவர்களுக்கு ஈர்ப்புள்ள விடயமாக உள்ளது. தந்திரமாக செயற்படுவது அவர்களுக்கு இயல்பானதும்கூட.

எனினும் அநீதிக்கு எதிரான குரலாக சிறுமை கண்டு பொங்கும் தன்மை கொண்டவர்களாக அவர்கள் மாற்றப்படுவது எமது சமகாலச் சூழல் அவசியமானது.

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்




# பெற்றோலியத்துக்கு மாற்றீடாக அணுவிலிருந்து சக்தி

அமெரிக்காவில் சோல்ட் லேக் நகரில் அமெரிக்க அரசாங்கத்தின் ஒரு பரிசோதனைச் சாலையும் ஒரு தனியார் நிறுவனமும் இணைந்து 2.6 மில்லியன் டொலர் பெறுமானமுள்ள ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் நோக்கம், இன்று இருக்கும் பெற்றோலிய அடிப்படை பொருளாதாரத்தை மாற்றியமைக்கும் ஒரு அணு உலையை உருவாக்குவது. மிக அதிக வெப்பத்தில் தண்ணீரை ஐதரசனாகவும் ஒட்சிசனாகவும் பிரித்து அந்த ஐதரசனை பெட்ரோலியத்துக்கு மாற்றாகப் பயன்படுதுவதே இந்தத்திட்டத்தின் நோக்கம்.

"ஹீலியம் குளிர்படுத்த உபயோகப்படும் அதிவெப்ப அணு உலையின் மூலம் உருவாக்கப்படும் ஐதரசன் பெற்றோலியத்தை விட விலை குறைந்த அளவில் உருவாக்கும் என்பதை நாங்கள் பரிசோதனைபூர்வமாகக் காட்டியிருக்கிறோம்" என்று இந்த பரிசோதனைச் சாலையின் ஆராய்ச்சியாளர் ஸ்டீவ் ஹெர்ரிங் தெரிவித்தார்.

ஒரு கையடக்க புத்தகத்தின் அளவே இருக்கும் ஒரு மாதிரி உலையின் மூலம் அதிவெப்ப ஐதரசன் பிரிப்பை பரிசோதனை மூலம் செய்து காட்டியிருக்கிறார்கள். இது அணு உலையில் இருக்கும் 1800 பாகை பரனைட் மாதிரியாகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது.

மின்சாரத்தின் மூலம் தண்ணீரை ஐதரசனாகவும் ஒட்சிசனாகவும் பிரிக்கும் முறை 150 ஆண்டுகளாக இருந்துவருகிறது.. ஆனால், மின்சாரத்தின் மிக உயர்ந்த விலையும், இதன் மூலம் உருவாக்கும் ஐதரசனின் விலையும் இந்த முறையை வியாபார ரீதியில் பயன்படுத்தத் தடையாக இருந்தது.

உயர் வெப்ப மின் பகுப்பு இவ்வாறு ஐதரசனை பிரிக்கத் தேவையான மின்சாரத்தை வெகுவாக குறைகிறது. இதற்குப் பதிலாக வெப்ப சக்தியைப்பயன் படுத்திக்கொள்கிறது" என்று ஜோஸப் ஹொர்ட்விக்ஸென் (Cerama tec)கூறுகிறார்.

2017இல் இப்படிப்பட்ட ஒரு அணு உலை தயாராக இருக்கும் என்று அமெரிக்க சக்தித் துறை நம்பிக்கை தெரிவிக்கிறது.

இன்று இருக்கும் பெற்றோலிய அடிப்படை பொருளாதாரத்தை ஐதரசன் பொருளாதாரமாக மாற்றுவதற்கு பல பத்தாண்டுகள் ஆகலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் உடனடி ஐதரசன் பயனாக, தற்போது இருக்கும் கார்களில் பயன்படுத்தப்படும் பெற்றோலுக்கு மாற்றாக ஐதரசனையும் ஐதரசன் மூலம் உருவாக்கப்படும் பெற்றோலையும் உருவாக்கலாம் என்று கருதுகிறார்கள்.

300 மெகாவாட் அணு உலை சுமார் 30000 வீடுகளுக்கு மின் சக்தியையும், அல்லது 50000 பேர்களுக்கு பிரயாண சக்தியையும் கொடுக்கும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஒரு சாதாரண அமெரிக்கர் ஒரு நாளைக்கு சுமார் 4.5 லீற்றர் பெற்றோலை உபயோகப்படுத்துகிறார் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

இது சுமார் கால்பில்லியன் கலன். இதனை குறைப்பது முக்கியம் என்று இந்த ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

# சூரியனை நம்ப வேண்டிய உலகம்

இனி வரும் காலங்களில் புதிய உலகம் சூரிய ஆற்றலை மையமாகக் கொண்டே இயங்கும் என அறிவியல் துறை ஆணித்தரமாகக் கூறி வருவது வர்த்தகத் துறையில் எதிரொலிக்கிறது.

உலகில் தலைசிறந்த தொழில் நிறுவனங்கள் புதிய தொழில்நுட்பத்தில் சூரிய மின்கலங்களை உற்பத்தி செய்யத் தொடங்கிவிட்டன. பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சியைப் போன்று "சூரியசக்திப் புரட்சி" குறிப்பாக சூரியமின்கலப் புரட்சியாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

நியூயோர்க்கில் உள்ள ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனி தற்போது உள்ள சூரிய ஒளி மின்கலத்தைவிட 10 சதவீதம் கூடுதல் திறனுடன் சூரிய ஒளி மின்கலங்களை உருவாக்க தீர்மானித்துள்ளது.

சூரிய ஒளி மின்கலங்கள் சூரியனின் கதிர் வீச்சுகளை மின்னாற்றலாக மாற்றுகின்றன. இத்தகைய சூரிய ஒளி மின்கலங்களில் கதிர்வீச்சுகள் படும்போது அவற்றின் பொலிவுக்கு ஏற்ப மின்னணுக்களும் மின்னோட்டங்களும் உண்டாகின்றன.

மற்ற மின்கலங்களோடு ஒப்பிடுகையில் சூரிய ஒளி மின்கலங்களில் இரைச்சலோ, அழிவோ உண்டாவதில்லை.

இவற்றுக்கு எரிபொருட்களும் தேவையில்லை. இவற்றில் மின் இயக்கு விசை உண்டாக ஒளிக்கதிர்கள் காரணமாக உள்ளன. சிலிக்கன் மின்கலங்களில் ஒளிக் கதிர்கள் படும்போதும் செலீனியம் மின்கலங்களில் வெப்பக் கதிர்கள் படும்போதும் வேலை செய்கின்றன.

செயற்கைக்கோள்களில் இவை பயன்படுகின்றன.

கலிபோர்னியாவில் உள்ள நனோ சோலார் கம்பெனி சூரியமின்கலங்களின் மேல்புறத்தில் டைட்டேனியம் சேர்மங்கள் மற்றும் பிளாஸ்டிக்கை பயன்படுத்தி 10 சதவீதம் திறனை அதிகரிக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

சுவிற்சர்லாந்தில் உள்ள எஸ்டி மைக்ரோ எலக்ரோனிக்ஸ் செம்பு அணுக்கள் உள்ள காபனை அடிப்படையாகக் கொண்ட மூலக்கூறுகளைப் பயன் படுத்தி சூரிய ஒளி மின்கலங்களைத் தயாரித்து வருகிறது.



உலகின் வர்த்தகத் துறையின் போக்கினை அறிவியல், தொழில்நுட்பத் துறைதான் தீர்மானிக்கிறது என்பது தற்போது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

# உயிரியல் திருட்டு


உலகெங்கும் தற்போது விஞ்ஞானிகள் உயிரியல் திருட்டு எனப்படும் பயோபைரசி குறித்து பேசி வருகின்றனர். உயிரினங்கள் அதாவது விலங்குகள், தாவரங்களின் வகைகளும் எண்ணிக்கையும் அதிகம் உள்ள நாடுகளில் "உயிரியல் திருட்டு" அதிகம் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

"உயிரிப் பன்மியம்"(bio diversity) அதிகம் உள்ள நாடுகள் வளரும் நாடுகளாக இருக்கின்றன. இந்த வளரும் நாடுகளின் விஞ்ஞானத் துறைகள் வளர்ந்த நாடுகள் தங்களின் பணபலம், அதிகாரத் தன்மை, உயர்வு மனப்பான்மை போன்றவற்றைப் பயன்படுத்தி அடக்கி வைத்திருப்பதாக விஞ்ஞானிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே, தற்போது மரபுசார் அறிவியலுக்கும் கண்டுபிடிப்புகளுக்கும் உரிய முக்கியத்துவம் தர வேண்டும் என்ற வாதம் வலுப்பெற்று வருகிறது.

இதற்கு "மெக்சிகோ மொடலைப்" பின்பற்றி தீர்வு காண வேண்டும் என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனா. மெக்சிகோ நாட்டில் உள்ள மாயன் பழங்குடி மக்கள் மூலிகை வளர்ப்பில் ஈடுபட்ட போது உரிய விலை அளிக்காத ஆய்வு நிறுவனங்களை எதிர்த்துப் போராடினர். இவ்வாறு எதிர்த்துப் போராடியதன் விளைவாக பன்னாட்டு ஆய்வு நிறுவனங்கள் இறங்கிவந்தன. பழங்குடியினரின் வளங்கள் கொள்ளை போவதும் தடுக்கப்பட்டது.

த.அருவி




# மார்பு புற்று நோயை கண்டறிய சில வழிகள்

'மார்பில் ஏற்படும் நோய் ஒன்றைக்கூறுங்கள்' என்று கேட்டால் பெரும்பாலானோரின் விடை மார்புப் புற்றுநோய் என்றே இருக்கும். பெண்களைப் பீடிக்கும் புற்றுநோய்களில், மிக அதிகமான தொகையான 21%தை மார்புப் புற்றுநோய் பிடித்திருக்கிறது. எனவேதான் பெண்களிடையே இந்நோய் பற்றிய பயம் அதிகம். பயம் குறைய வேண்டுமேயாயின் நோய் பற்றிய அறிவும், பரிச்சயமும் அதிகமாக வேண்டும்.

நோயின் ஆரம்ப கட்டத்திலேயே மிகச் சுலபமாக நோயாளி தானே கண்டு பிடிக்கக் கூடியதுதான் மார்புப் புற்றுநோய், ஆரம்பத்திலேயே கண்டு பிடித்துவிட்டால் சத்திரசிகிச்சை மூலமும், ரேடியம் கதிர்ச்சிகிச்சை மூலமும் பூரணமாகக்குணமாக்கி விடலாம்.

மார்புப் புற்றுநோயின் முதலாவதும், முக்கியமானதுமான அறிகுறிமார்பில் தோன்றும் கட்டிதான். இது பெரும்பாலும் எவ்வித வலியையும் கொடுப்பதில்லை என்பதால் கவனத்தை ஈர்க்காது விடலாம். எனவே ஒவ்வொரு பெண்ணும், மாதம் ஒரு முறையாவது, தனது மார்புகளைப் பூரணமாகப் பரிசோதனை செய்வது அவசியம். பரிசோதிக்கும் போது கட்டி ஏதாவது தென்பட்டால் அதை அழுத்தவோ நசிக்கவோ வேண்டாம்; ஏனெனில் அப்படிச் செய்தால் புற்றுநோய் உடலில் வேறு பாகங்களுக்குப் பரவுவது துரிதமாகலாம்.

முலைக்காம்பிலிருந்து இரத்தம் கலந்த திரவம் கசிவது சிலபுற்றுநோயாளிகளிடம் மட்டுமே இருக்கக் கூடிய அறிகுறி, புள்ளி புள்ளியாக மேடும் பள்ளமுமான தோடம்பழத்தோலில் இருப்பது போல் மார்பில் ஒரு பகுதியில் இருப்பதும், முன்பு வெளியே துருத்திக் கொண்டு சாதாரணமாக இருந்த முலைக்காம்பு உள்ளுக்கு இழுக்கப்படுவதும் முக்கிய அறிகுறிகளாகும்.

உங்கள் மார்பின் அளவு, உருவமைப்பு, தோலின் தன்மை, நிறம் முலைக்காம்பின் வடிவம் எல்லாம் நீங்கள் நன்கு அறிந்ததே. ஒவ்வொரு மாதமும் கண்ணாடி முன் சில நிமிடங்கள் நின்று இவற்றில் ஏதாவது மாறுபாடு தெரிகிறதா என அவதானியுங்கள். ஒவ்வொரு கையாகத் தலைக்கு மேல் உயர்த்தி மார்பில் ஏதாவது வீக்கம் அல்லது பள்ளம் தெரிகிறதா எனவும் அவதானியுங்கள். முலைக்காம்பின் உருவத்தையும், நிலையையும் அவதானிப்பதுடன் நின்றுவிடாது அதனை மெதுவாக அழுத்தி ஏதாவது திரவம் கசிகிறதா என்பதையும் கவனியுங்கள். கடைசியாக மார்புகளின் தன்மையை நடுவிரல்கள் மூன்றினாலும் தொட்டுப் பார்க்க வேண்டும். இடது மார்பை வலதுகையினாலும், வலது மார்பை இடது கையினாலும் பரிசோதிக்க வேண்டும். மார்பின் ஒரு இடத்தில் ஆரம்பித்து சுற்றி வர முழுமார்பையும் தொட்டுப்பார்க்க வேண்டும். விரல்களினால் தொட்டுப்பார்க்க வேண்டுமே அல்லாது பிடித்துப் பார்க்கக் கூடாது. அக்குளுக்குள் ஏதாவது நெறி இருக்கிறதா என்றும் பரிசோதிக்க மறந்து விடாதீர்கள்.

பரிசோதிக்கும்போது ஏதாவது கட்டி, வீக்கம், பள்ளம், தோல் மாற்றம், எக்ஸிமா, புண், நிறமாற்றம் எது இருந்தாலும் அவதானித்து உங்கள் டாக்டரிடம் உடனடியாகச்சொல்லுங்கள். அவை புற்றுநோய் அல்லாத வேறு நோய்களாலும் ஏற்படலாம். ஆயினும் அதைப் பரிசோதித்துத் தீர்மானிக்க வேண்டியது வைத்தியர் தான்.

மார்புப்புற்றுநோய் பரம்பரை நோயல்ல. ஆயினும் தாய்க்கு மார்புப் புற்றுநோய் இருந்தால் மகளுக்கு அது எதிர்காலத்தில் உண்டாவதற்கு 20% சாத்தியக்கூறு இருக்கிறது. திருமணமாகாத பெண்களுக்கும் திருமணமானாலும் குழந்தை பெறாதவர்களுக்கும் குழந்தை பெற்றாலும் பாலூட்டாதவர்களுக்கும் மார்புப் புற்று நோய் எதிர்காலத்தில் தோன்றுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம். அதே நேரத்தில் குழந்தைகளுக்கு நீண்டகாலம் பாலூட்டியவர்களுக்கு அது தோன்றுவதற்கான சந்தர்ப்பம் குறைவே.

கருத்தடை மாத்திரைகள் அல்லது ஊசி உபயோகிப்பவர்களுக்கு மார்புப் புற்றுநோய் வருவதற்கான சாத்தியக்கூறு அதிகம் எனப்பரவலாக நம்பப்படுகிறது. ஆனால் மேல்நாடுகளில் அண்மைக் காலம்வரை செய்யப்பட்ட பல மருத்துவ ஆராய்ச்சிகள் இதுபற்றி அறுதியான தெளிவான முடிவுகள் எதையும் தெரிவிக்கத் தவறிவிட்டன. அதிக குழந்தைகள் பெறுவதால் ஏற்படக்கூடிய சிக்கல்களோடும், பாதிப்புக்களோடும் ஒப்பிடுகையில், கருத்தடை மருந்துகளை உபயோகிப்பதால் மார்புப் புற்றுநோய் ஏற்படக்கூடிய அபாயம் மிகக் குறைவானதே எனப்பலரும் கருதுகிறார்கள். எனவே உங்கள் குடும்பத்தைத் திட்டமிட நீங்கள் விரும்பினால் வைத்திய ஆலோசனையுடனும், கண்காணிப்புடனும் கருத்தடை மருந்துகளை உபயோகிக்கலாம்.

ஆனால். கருத்தடை மருந்துகளை (மாத்திரை அல்லது ஊசி) மிக இளவயதிலேயே உபயோகிக்க ஆரம்பிபபதையும், முதற் குழந்தைபிறக்க முன்னரே உபயோகிப்பதையும், மூன்று வருடங்களுக்கு மேல் தொடர்ந்து உபயோகிப்பதையும் தடுப்பதன் மூலம் புற்றுநோய் உண்டாகக் கூடிய சாத்தியக் கூற்றைத் தவிர்க்கலாம் என சிபார்சு செய்யப்படுகிறது.



# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 05

### பகுதி -28

அவன் தன் கையிலிருந்த தீந்தைகளை துடைத்த பின் கை துடைக்கும் கடதாசிகளை கழிவுக் கடதாசி கூடையினுள் போட்டான். ஏமாற்றத்தோடு தலையை ஆட்டினான்.

''விரலில் பூசும் தீந்தைகள்.'' என்றவன், பின், "அவை எனக்கு ஆர்வம் தரவில்லை, நான் படம் கீறப்போறன்"

"அப்ப, இதைவிட படம் கீறலாமெண்டு நினைக்கிறீங்களோ?' நான் கேடடேன்.


''ஓம்'' என்று கூறிவிட்டு தொடர்ந்து, "நீர்வர்ணங்களால கீறப் போகிறேன்'' என்றான்.

"இன்னும் ஐந்து நிமிடங்கள் தான் இருக்கின்றன.'' என்றபின், "ஐந்து நிமிடங்களில் படம் கீறலாம் எண்டு நினைக்கிறீங்களா?'' என்றேன்.

"டிப்ஸ் கீறுவான்'' என்றான் அவன். அவன் வர்ணங்கள் இருந்த பெட்டியை எடுத்தான். "தண்ணீர் எங்கே இருக்கு?'' என்று கேட்டான். நான் தொட்டியைக் காட்டினேன். வர்ணம் தீட்டுவதற்கான கோப்பை ஒன்றில் அவன் நீர் நிரப்பிக் கொண்டான். "இந்த ஒருபடம் மட்டும் கீறத்தான் நேரம் இருக்குது. அதுக்குப் பிறகு வீட்ட போறதற்கு நேரம் வந்து விடும்''

இது ஒரு அபாயகரமான கூற்றுத்தான். அவன் இந்த ஒரு படத்தைக் கீற எடுக்கும் நேரத்தை அவன் விரும்பும் அளவுக்கு நீட்டிக் கொள்ளக்கூடும். எனது உறுதி மொழியின் காரணமாக நேர வரையறை நெகிழ்ச்சித் தன்மை கொண்டதாக ஆகிவிட்டிருந்தது இன்னும் "ஐந்து நிமிடங்கள்'' என்று நானே கூறிவிட்டதால், அந்த வரை யறையை நான் பேணவேண்டும் இரண்டாவது காரணி ஒன்றை இங்கே புகுத்தி நிலைமையைச் சிக்கலாக்கக் கூடாது.

எனினும் டிப்ஸ் எனது கூற்றைக் கணக்கிலேயே எடுக்கவில்லை. ''தீந்தை வழியுது'' என்றான் அவன். "கைதுடைக்கும். கடதாசியால் அதை ஒற்றியெடுக்கப் போகிறேன். அப்படிச் செய்தால் அது உலர்ந்து போகும். இது ஒரு படமாக இருக்கப்போகிறது.'' தொடர்ந்து அவன் சொன்னான். திறமையான வேகமான இழுவைகளில் வரையத் தொடங்கிய அவன், சிவப்புத் தீந்தையில் தொடங்கி பல்வேறு வர்ணத் தீந்தைகளையும் தொட்டுத் தொட்டு பல்வேறு வடிவங்களில் பொட்டுப்பொட்டாகத் தோன்றும் படி கடதாசியில்



பல்வேறு இடங்களிலும் முதலில் கீறினான். வர்ணச் சக்கரத்தில் இருக்கும் ஒழுங்கிலேயே வர்ணங்களை தொட்டுத் தொட்டுப் பூசினான். அவன் மேலும் மேலும் வர்ணங்களை சேர்த்துக்கொண்டே சென்றபோது ஒரு படம் உருவாகத் தொடங்கியது. அவன் கீறி முடித்தபோது, ஒரு வீடு, ஒரு மரம், வானம், புல்வெளி, பூக்கள், சூரியன் முதலியவை கொண்ட ஒரு சித்திரம் வந்திருந்தது. எல்லா வர்ணங்களும் பயன்படுத்தப்பட்டிருந்தன. கீறி முடிக்கப்பட்ட அந்தச் சித்திரத்திலே இடைத் தொடர்பு இருந்தது. வடிவம் இருந்தது. பொருளும் இருந்தது.




"இது......இது......'' என்று தட்டுத் தடுமாறினான். கைகள் தூரிகைகளை நடுக்கத்துடன் கையாண்டன. திடீரென்று அவன் மிகவும் நாணமுற்றவன் போல் காணப்பட்டான். "இது மிஸ் A யினுடைய வீடு'' என்றான் அவன். "மிஸ் A இந்த வீட்டை உங்களுக்குத் தரப் போகிறேன்.''

" அதை எனக்குத் தரப்போறீங்களா?' என்று அவனுடைய சித்திரத்தை சுட்டிக் காட்டியபடியே நான் கேட்டேன். அவன் ஆமெனத் தலையை ஆட்டினான். இந்த பதிலுரையின் நோக்கம் நன்றி சொல்லுவதாக இருக்கவில்லை. எங்கள் உரையாடலை தொடர்வதும் அதை சிறிது மெதுவாகக்கொண்டு செல்வதுமே நோக்கமாக இருந்தது. இனி அவன் விரும்பினால் மேலும் தன் எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தலாம். என்னுடைய பதிலால் அல்லது ஈடுபாட்டால், அல்லது விழுமியங்கள் அல்லது நடத்தை நியமங்களால் அது சடாரெனத் துண்டிக்கப்படக் கூடாது.

பென்சில் ஒன்றைக் கையிலெடுத்த டிப்ஸ், மிகுந்த கவனத்துடன் கதவின் மீது பூட்டொன்றை வரைந்தான். வீட்டின் கீழ்ப்பகுதிகளில் கம்பி போட்ட சிறிய ஜன்னல்களைக் கீறினான். ஒரு பெரிய ஜன்னலும் அதில் இருந்தது. பிரகாசமான மஞ்சள் நிறத்தில் அதனை வரைந்திருந்தான்.

அந்த ஜன்னலிலே சிவப்பு மலர்கள் கொண்ட சாடியொன்றையும் கீறியிருந்தான். பிரமிப்பூட்டுகின்ற வகை ஆக்கத்திறன் கொண்ட முயற்சியாக அது இருந்தது. மிகத் தனித்துவமான முறையில் அது சாதிக்கப் பட்டிருந்தது.

அவன் நிமிர்ந்து என்னைப்பார்த்தான். அவனது நீலக்கண்கள் பிரகாசமாகத் தெரிந்தன. ஆனால் அவனது முகத்தில் ஒருவித சோகமும் பயமும் தெரிந்தன. சித்திரத்தில் இருந்த கதவைச் சுட்டிக் காட்டினான்.. "அதில ஒரு பூட்டு இருக்கு'' என்றவன் தொடர்ந்து, திறப்பால கெதியா அத பூட்டலாம்... அதில நிலத்துக்குக்கீழ ஒரு அறை இருக்கு.... அந்த அறை இருளாக இருக்கும்'' என்றான்.

நான் சித்திரத்தை ஒரு முறை பார்த்துவிட்டு நிமிர்ந்து அவனைப்பார்த்தேன். "எனக்கு விளங்குது....'' என்ற நான், "இந்த வீட்டிலயும் ஒரு பூட்டும் இருளான நில அறையும் இருக்குது... அல்லவா?'' என்றேன்.

(தொடரும்....)

---




அரசியல்வாதிகளின் நடத்தைகளைக் கிண்டலடிக்கும் ஒருவிதபாணியைத் தன்னுடைய படங்களில் வெளிப்படுத்துவது சத்தியராஜ்ஜின் வழக்கம். S.S சந்திரனை நினைவூட்டு கிறமாதிரி சத்தியராஜ்ஜின் கிண்டல்களிருக்கும். சோகூட அரசியலைத்தான் கிண்டலடிப்பார். அவருடைய பாணி வேறுவகையானது. சந்திரனுடையது வேறுவகையானது. கிட்டத்தட்ட சந்திரனுடையதும் சத்தியராஜ்ஜினுடையதும் ஒரேமாதிரியானது.

அரசியற் போக்கையோ, கொள்கையையோ விமர்சிப்பதாக இந்தக் கிண்டல்களிருக்காது. அரசியலின் அடிப்படைக்குறைபாட்டை, கோட்பாட்டுத்தளம்பலை, வெறுமையை கேள்விக்குட்படுத்துவதாக இந்தக் கிண்டல்களிருப்பதில்லை. படத்தைப்பார்ப்போரிடம் தன்னை ஒரு சீர்திருத்தவாதிபோல காண்பிப்பது அல்லது தன்னைப் பார்வையாளரிடம் பதியவைப்பதுதான் இதன்நோக்கம்.

படத்தைப் பார்க்கும்போது குருதியைச் சூடாக்குகிறமாதிரியிருக்கும் சத்தியராஜ் பேசுகிற வசனங்கள். தமிழ்ச்சினிமாவின் கதாநாயகர்கள்- எல்லோரிடமும் சிறிதும் பெரிதுமாக நிறைந்திருக்கும் பொதுக்குணம் இது. இதில் இப்போது விஜயகாந்தும் சத்தியராஜ்ஜுமே முன்னணியில் நிற்பவர்கள். சரத்குமார், ரஜனி எல்லாம் இதில் இரண்டாம் வரிசைக்காரர்களே.

விஜயகாந்தின் பாணி சற்று வேறு- சத்தியராஜ்ஜினுடையது வேறு. சத்தியராஜ் அரசியற்கிண்டலுடன் மூட நம்பிக்கையையும் சாடுவார். விவேக் இதில் கூடுதலாகத் தொழிற்படுகிறார். சத்தியராஜ்ஜை கவனித்தால் பகுத்தறிவுச் சிந்தனைக்குட்பட்டவராகத் தோன்றுவார். சீர்திருத்தப்போக்கை ஊக்குவிப்பதுபோலத்தென்படுவார். ஆனால், முழுமையாக அவருடைய சினிமாவைப் பார்த்தால் அது பார்வையாளரை இன்னொருவகையான மூடத்தனத்தை நோக்கித்தள்ளுவதாகவே இருக்கும்.

அண்மையில் வெளிவந்த சத்தியராஜ்ஜின் இரண்டு படங்களும் இந்தக் கருத்துக்கு முழுச்சாட்சியானவை. அழகேசன் என்றபடம் பாரதிராஜாவின் பதினாறு வயதினிலேயே பிரதிபண்ணியபடம் அதில் அரசியல் நெடிதான் சத்தியராஜ்ஜின் அடையாளம்.

மகாநடிகன் இப்போது வந்த புதிய படம் அழகேசனைவிட இது பரவாயில்லை. படத்தில் ஒரு முன்னணி நடிகனின் உலகத்தைக் காண்பிப்பதனூடாக இன்றைய தமிழகத்தின் சினிமாவையும் அரசியலையும் வெளியரங்கில் விரித்து வைக்க முயன்றிருக்கிறது. மகாநடிகன் நல்லவிதமாக விரிந்து பன்முகங்கொண்டு பரிணமித்துப் பரிமளித்திருக்க வேண்டிய படம். சறுக்கிக் குப்புற தமிழ்ச் சினிமாவின் சேற்றுக்குள் வீழ்ந்திருப்பது பெருங் கவலையளிக்கிறது.

எவையெவற்றையெல்லாம் படம் விமர்சிக்கிறதோ அதில் முக்கால்வாசி படத்திலேயே வணிக உத்தியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.




ஆக தனனைத் தானே விமர்சிக்கிற படமாகிறது மகாநடிகன். தன்னையே நிராகரிக்கிறது மகாநடிகன்.

சினிமாவும் அரசியலும் ஒன்றாகக் கலந்திருக்கிற சூழல் தமிழகத்தினுடையது. இந்த யதார்த்தம் சமகால உண்மையாக வெளிப்பாடு கொள்கிறது.

ஒரு சாதாரண ஆள் சினிமாவில் நுழைவதற்கும் அதில் தேறுவதற்கும் எவ்வளவு சிரமப்படவேணும் எவ்வளவுக்கு நிஜ வாழ்க்கையில் நடிக்கவேண்டும் என்பதை ஓரளவு செறிவாகக் காட்டுகிறது படம். இந்த விடயம் முன்னரும் வேறு சில படங்களில் சிதறல்களாக பேசப்பட்டுள்ளன என்றாலும் இதில் அது அழுத்தமாகியுள்ளது.

எல்லாவகையான அழிப்புகள், தந்திரங்களையும் செய்து முன்னணிக்கு வந்து தேறிவிட்ட நடிகனை சினிமாவும் அரசியலும் பயன்படுத்த விளைவது அடுத்தகட்டம். இதுதான் இன்றைய தமிழ் நாட்டுச்சூழலின் யதார்த்தமும் உண்மையும்.

ஒவ்வொருவருக்கும் தன்தன் லாபத்தில்தான் குறி. ஒவ்வொருவரும் ஒவ்வொருவரைப்பற்றி பயன்படுத்த விளைதல், ஒவ்வொருவருக்கும் ஏற்படுகிற தோல்விகளும் அவமானங்களும் எல்லாவகையான கேவலங்களையும் வாழ்க்கை முறையாகக்கொண்ட அரசியல்வாதிகள் பதவியைத் தவிர வேறொன்றும் அறியேன் பராபரமே என அதிகாரத்திலும் லாபமையத்திலும் இருக்கும் சூதாடிகள். இப்படி முடிவற்ற பொறிகளில் வாழ்க்கையை வைத்து அதிகாரத்துக்கும் லாபத்துக்குமாக முயலும் நிலையைச் சுற்றி சுழல்கிறது படத்தின் கதை.

மகாநடிகன், சினிமா என்ற தொழிலில் மட்டுமல்ல வாழ்விலும் நடிப்பது இன்றைய யதார்த்தம் என்பதை சொல்வதன் பின்னணியென்ன? படத்தைப்பார்க்கும்போது இன்று சினிமாவிலும் அரசியலிலும் பிரபலமாக இருக்கும் பலரது முகங்களும் அடையாளங்களும் நினைவுக்கு வருகின்றன. உண்மையில் நினைவுக்கு அவை வருகின்றன என்பதைவிட நினைவூட்டப்படுகின்றன. இந்த நினைவூட்டலூடே பார்வையாளரின் மனதிலிருக்கும் கோபங்கள், சலிப்புகள், வெறுப்புகளுக்கு உஷ்ணமேற்றி அதில் அவர்களைக் கிறங்கடிப்பது உத்தியாக்கப்பட்டுள்ளது.

இன்றைய சினிமா இதில் நல்ல தேர்ச்சியைக்கண்டிருக்கிறது. பார்வையாளரின் மனதிலிருக்கும் நெருக்கடிகளுக்கு (அவை வாழ்வின் நெருக்கடிகள், பிரச்சினைகள்) ஒரு தீர்வைக் காட்டுவதுபோல படத்தின் முடிவு அல்லது கதை அல்லது சேதியிருக்கும். ஆனால் வாழ்வின் நெருக்கடியோ சினிமாவின் கதையைப்போல இலகுவில் வெற்றிகொள்ளக் கூடியதல்ல. தனியொருவனின் சாகசங்கள் மூலம் வெல்லக்கூடியதுமல்ல.

இங்கே மகாநடிகனில், கிடைக்கும் வாய்ப்பை தன் நலனுக்காகப்பயன்படுத்த விளைகிறான் நடிகன். நடிகனுக்கு ஏற்பட்டிருக்கிற கவர்ச்சியையும் அவனுக்கு ரசிகர்களிடையே உள்ள செல்வாக்கையும் தமது அரசியல் லாபமாக்குவதற்காக அந்த நடிகனைக் கட்சி தன்னுடன் இணைத்துக்கொள்கிறது.

முதலில் வாரிசு அரசியலைக் கண்டித்து, புரட்சிகரமாக சனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக கட்சியை விட்டு வெளியேறித் தனிக்கட்சி அமைப்போர், பின்பு தமது அரசியல் நலனுக்காக எப்படியெல்லாம் சூழ்ச்சிகரமாக நடக்கிறார்கள், நடிகனையே கட்சியுடன் சேர்க்கிறார்கள் என்பது. நடிகன் அரசியல்வாதிகளை தன்னுடைய செல்வாக்கினால் அமுக்குவது. இப்படிப்போட்டி அரசியல் நடக்கிறது. அது நேர்மையற்ற போட்டி, நியாயமற்ற வழி. அரசியல் உலகமும் சினிமா உலகமும் இப்படித்தான் சீரழிந்து கிடக்கிறது என்பதை நிரூபிக்கிறதா மகா நடிகனும், பொதுவாகத் தமிழ்ச் சினிமா இன்று சொல்வது அரசியற்சீரழிவு எப்படித் தமிழ் நாட்டில் வளர்ந்திருக்கிறது என்பதைத்தான். ஆனால், இவ்வாறு காட்டும் எல்லாத தமிழ்ப்படங்களும் இந்த அரசியற் சீரழிவுக்கும் சனங்களின் வாழ்க்கை நெருக்கடிக்கும் தீர்வைக் கண்டுவிடுவதாகக் காட்டுகின்றன. ஒரு நாள் 'முதல்வனில்' இருந்து பல படங்கள் இதற்குச்சாட்சி ஆனால், நடைமுறையில் இன்னுமின்னும் நெருக்கடியும் பிரச்சினையும் சீரழிவுப் போக்கும் கூடிக்கொண்டே வருகிறது.

பழைய அரசியல்வாதிகளை நிராகரித்து விட்டு இளைய தலைமுறையை புதிய சிந்தனை யும் அறிவுமுடையோரை ஆட்சிக்கு அமர்த்துகிறான் மகாநடிகன். மகாநடிகனுக்கு எப்போதும் உண்மையை உணர்த்துபவராக ஒரு பாத்திரம் வருகிறது. 'அரட்டை அரங்கம்' விசு. மகாநடிகனை ஒழுங்குபடுத்தும் ஒரு வலுவாளராகக் காட்டப்படுகிறார். அறிவுரைகளால் மட்டும் இந்த உலகத்தை மாற்றலாம் என்பதை எப்படி நம்புவது?

மகாநடிகன் பெண்களை- பெண் நடிகைகளை ஏமாற்றுவது இதில் இன்னொன்று. மோசமான நம்பிக்கைகளில் தங்களைப் பலியிடுவது சாதாரணமாகிவிட்டதொன்று என்பது இங்கேயும் சொல்லப்படுகிறது.

எப்போதும் போல கதாநாயகனின் நற்பண்புகளால் அந்தப் பெண்கள் காப்பாற்றப் படுகிறார்கள். வில்லன் தனமுள்ள ஒருவன் பின்பு மனந்திருந்தி நல்லவனாகும் கதாநாயகனைக் கொண்ட படங்கள் தமிழில்கூட நிறைய வந்துள்ளன. இன்றைய சினிமாப் பிரபலங்களான ரஜனி, விஜயகாந் தொடக்கம் தமிழக அரசியலில் இருக்கும் கருணாநிதி, ஜெயலலிதா எனப்பலரையும் விமர்சிக்கும் விதமாக படத்தின் கூரான வசனங்களிருக்கின்றன. இந்த வசனங்கள்தான் படத்தின் வெற்றிக்கான முதலீடு. மற்றும்படி மிகச் சாதாரணமான படம். தமிழ்ச்சினிமாவின் மட்டமான போக்கை அப்படியே பிரதிபலிக்கிற படம். எந்தப் புதிதுமற்ற சினிமா. கமெரா, இசை,. எடிட்டிங் போன்றவற்றிலும் புதுமைகளில்லை.

**ஆரதி**

# எம்.ஜி.ஆர் முன்னேற்றக்கழகம்

## M.G.R DEVELOPMENT SOCIETY



## எம்.ஜி.ஆர் இளைஞர் அணி
## எம்.ஜி.ஆர் நற்பணி பொதுப்பணி மன்றம்

(அரசியல் சார்பற்ற சமூக சமுதாய முன்னேற்ற அமைப்பு)

M.G.R youth Group
M.G.R Social Service Club
Anti political Organisation

இலங்கையின் முன்னைய அரசுகளின் மனித நேய மீறல் சம்பவங்களால் இன்னலுற்ற ஈழத்தமிழர்களின் அவலக்குரல் கேட்டு உலகில் முதன்முதல் உரிமைக்குரல் கொடுத்தவரும் தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த செயல்வீரருமான மக்கள் திலகம் பொன்மனச்செம்மல் தமிழக முன்னாள் முதல்வர் அமரர் முனைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் 17ஆம் ஆண்டு நினைவு நாள் எதிர்வரும் 24-12-2004 அன்று கொடிகாமம் பிரதேச சபை ஒன்று கூடல் மண்டபத்தில் தென்மராட்சி எம்.ஜி.ஆர் முன்னேற்றக்கழகத்ததலைவர் க.மகேந்திரராசா அவர்களின் தலைமையிலும் 25-12-2004 அன்று திகதி பண்டத்தரிப்பு சில்லாலைசாந்தையிலும் 26ஆம் திகதி வட்டுக்கோட்டையிலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளன. அன்றைய நாட்களில் பொதுநிறுவனங்கள் எம்.ஜி.ஆர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் வண்ணம் எம்.ஜி.ஆர் முன்னேற்றக்கழகம் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறது.

"ஏழை எளிய மக்களின் உண்மை ஊழியனாக எம்.ஜி.ஆர் திகழ்ந்தார்
இந்திய சரித்திரத்தில் என்றும் நிலையானபுகழ் நிலையை அடைந்தார்"

-போப்பாண்டவர்

"மக்கள் ஒவ்வொருவரும் மனிதநேய உணர்வுடனும் அன்புடனும்உதவவேண்டும்
என்று யேசு கூறினார் அவர் வழியில் திரு.எம்.ஜி.ஆர் செயற்படுகின்றார்"

-அன்னை இந்திராகாந்தி

(சி-11151)

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

பாவலன் பதில்கள்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.

# பாவலன் பதில்கள்



*பாவலரே!*

*தமக்குத்தான் எல்லாம் தெரியும் என்று நினைப்பவர்களைப் பற்றி கொஞ்சம் கூறுமேன்?*

*சி.ரேக்கா*
*கிளிநொச்சி.*

அவர்கள் தங்களை பரமார்த்த குருவாக நினைத்துக் கொண்டிருக்கலாம்.

*பாவலா!*

*எனது உடல் மெலிவடைய நல்ல மருந்தொன்று கூறுங்களேன்.*

*த.விஜிதா*
*சாவகச்சேரி*

உண்ணாவிரதம் இருங்கள்...அதுவே சிறந்த மருந்து....

*பாவலரே!*

*ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ஆளும் கட்சிக்கு மாறும் அரசியல்வாதிகளைப் பற்றிக்கூறுங்களேன்.*

*அ.யசிதா,*
*சாவகச்சேரி.*

மந்தி(ரி)யாக இருக்க விரும்புபவர்கள் அவர்கள்.

*பாவலரே!*

*தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவீரர் நாள் அன்று நாடாளுமன்றத்தில் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினார்கள் அல்லவா அதைப் பற்றி தாங்கள் என்ன நினைக்கின்றீர்கள்.*

*பாவலன்,*
*தேவிபுரம்.*

தாங்கள் மறத்தமிழர்கள் என்பதை நிரூபித்திருக்கின்றார்கள்.

*பாவலா!*

*இடைக்கால நிர்வாக வரைவை செயற்படுத்த முனைந்தால் தென்னிலங்கை இளைஞர்கள் ஆயுதம் ஏந்த வேண்டி வரும் எனக்கூறும் ஜே.வி.பியை பற்றிய உமது கருத்தென்ன?*

*ச.வினோதன்,*
*மல்லாவி.*

1971-1990ஆம் ஆண்டுகள் கற்பித்த வரலாற்றுப்பாடங்களை மறந்துள்ளதும் பரிதாபத்துக்குரியவர்கள்.

*அன்பின் பாவலரே!*

*நான் காதலிக்க விரும்புகிறேன் என்னை யாரும் காதலிக்கிறார்கள் இல்லையே இதற்கு கவிதையாக ஓர் பதில் சொல்லும்?*

*தமிழ்கனி,*
*கிளிநொச்சி.*

காதலால் வருவதே காதல்- எனில்
காதல் கண்டதும் வராது
காதலிக்காதவளை காதலித்தால்
காதல் இறந்தாலும் வராது.

*பாவலா!*

*சிறுவயதில் தப்புப் பண்ணி மாட்டிய அனுபவம் இருக்கிறதா?*

*தர்சினி,*
*இடைக்காடு.*

தவறுகள் குற்றங்களல்ல.... எனவே மாட்டினால் குற்றவாளியுமல்ல....

*பாவலா!*

*உங்களை சந்திரிகா அம்மையார் ஆள்விட்டுக்கடத்திக்கொண்டு போனால் என்ன செய்வீர்கள்?*

*அ.வேணி,*
*பண்டத்தரிப்பு.*

ஆள் விட்டு கடத்துமளவிற்கு அம்மையாருக்கு என்னவாகி விட்டது? அப்படியானால்... அம்மையாரின் பைத்தியக்காரத்தனத்தால் ஒரே நாளில் உலகப்புகழ்பெற்றுவிடுவேன்....! (அரச பயங்கரவாதிகள் பாவலன் ஒருவனை கடத்திவிட்டார்கள் என்ற செய்தி பரவிவிடுமல்லவா?)

*பாவலா!*

*தமிழர் உணர்வுகளை இலங்கை அரசு புரிந்துகொள்ளாதது ஏன் ஐயா? மழுப்பாமல் பதில் தாருங்கள்?*

*வி.சிறீகாந்,*
*கிளிநொச்சி.*

அதிகார வர்க்கம் மனித வர்க்கத்தை மதிப்பதில்லையே.....! மனிதர்களுக்குத்தானே மனித உணர்வு இருக்கும்....

*பாவலரே!*

*மனித உணர்வுகளை புரிந்துகொள்ளாத சில அதிகாரிகளை பற்றி என்ன நினைக்கிறீர்?*

*ச.காந்தன்,*
*கிளிநொச்சி.*

அவர்கள் நிறைவேற்று அதிகாரம் உடையவர்கள்....!

*பாவலரே!*

*தகடு கொடுத்து முன்னேற நினைக்கும் மனிதர்களை என்ன செய்யலாம்?*

*சிவகுமார்,*
*கிளிநொச்சி.*

தகடு கொடுத்தே அவர்களின் முன்னேற்றத்தை தடுக்க வேண்டும். முள்ளை முள்ளால் எடுப்பதைப் போல.....!

*பாவலரே!*

*வயது முதிர்ந்தவர்களை குற்றம் இழைத்ததற்காகவே மரியாதையின்றி நடத்தும் இளம் அதிகாரிகள் பற்றி என்ன நினைக்கிறீர்?*

*ராஜன்,*
*கிளிநொச்சி.*

'இளம்' ஒரு போதும் 'கிழம்' ஆகாததென்று நினைக்கின்றது போலும்!

---




வவுனியாவில் ஒரு தனியார் மருத்துவமனை.

ஐயோ....ம்....எனக்கு ஏலயில்லை....தாங்கேலாதாம் டொக்டரப் பாக்கவேணும்.

ஐயா, அலுவலாயிருக்கிறார்...அ மறிக்க மறிக்க மனிசி உள்ளுக்கபோகுது உள்ளே;


இருங்கோ....என்ன செய்யுது.... ரெண்டு நாளா.....

(தொலைபேசி ஒலியெழுப்புகிறது) ஹலோ.....அ..... அ.... என்னவாம் ம்.... அவாவிட்ட போனைக் குடுங்கோ.... என்னடா செல்லம்.... குழப்படிபண்ணாதையுங்கோ, அப்பா பேஷண்டுகளப்பாத்திட்டுப் பிறகு வாறன்...க்... கவனம்..... ம்......அம்மாவக் கதைக்கச் சொல்லுங்கோ....வெய்ற்....ஆச்சி வெளியில போய் இரணை கூப்பிடுறன்...ம்.... சொல்லுங்கோ..... சா.....இல்லடார்ளிங்...ச்சு வேலை நேரமெல்லே பிறகெடும்...ம்... ம்....ஓகே....ஆச்சி வாணை என்ன செய்யுது....ரெண்டு நாளா தலைக்க...(தொலைபேசியொலி) தலைக்க,.... கலோ... அ... ஓமோம் ஒவீசால நேர வாறன் அ...கொழும்புக்கு கோலெடுத்தனான் எங்கேச்சாக்கிடக்கு.. ம்...நீர்.... ஒருக்கா எடுத்துப் பாருமன்...ம் இல்ல... நம்பரத் தாரும்....த்திறீ ரூ நைன் சீரோ... ம்....ம்.... சரி நான் எடுக்கிறன்.

சீயோ...சீ யூலேற்ற.... த.... என்னணை தலைக்க, காச்சலிருக்கே எங்க பார்ப்பம்... (தொலைபோசி மணி) கலோ.... நான்....டொக்டர்தான் கதைக்கிறன் அ....பீல்ஸ் குடுத்த நீங்களே..ம்....ஓ வொமிட் இருக்குந்தான். ம்....பத்து மணி....இங்கயும் பேசண்டுகள் நிக்கினம்.. ம்...வீக்கமேதும் இருக்கோ...அப்ப பிரச்சினையில்லை. ஆரையும் அனுப்பி விடும்...குளிசை அனுப்பி விடுறன்....அ சொல்லணை- என்ன செய்யுது...நானும் போய் ரெலிபோனில சொல்லுறன்.

---

## படத்திற்கு மெருகூட்டுங்கள்-100



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள்-100**

.....................................................................
.....................................................................
.....................................................................
.....................................................................

பெயர் : ...................................................
முகவரி : ...................................................
...................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -99



**வி.கோ.ராசா,**
**கணேசபுரம்,**
**கிளிநொச்சி.**

### பரிசுக்குரிய வரிகள்

*ஓர் உழவர் வாழும் பூமியில்*
*நீர் நிலை கொள்ளும் வாவியருகே*
*காலத்தால் அழியாத கட்டடம் இது*
*ஏலத்தில் விலை போகாத வீரகாவியம் இதற்குண்டு.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*கோண மலையூடு தொடங்கி- ஈழத்தின்*
*பச்சையை கறுப்பாக்கும் கயவருக்கு*
*தலைவன் கீழான தமிழரின் நிமிர்வில் ஒன்றும்,*
*நாளைய ஈழத்திற்கு நமது தருவிப்பும் இதுவே!*

அ.ஜெ.டெனிசியஸ்,
முல்லைத்தீவு.

*மண்ணை செழிப்படைய வைக்கும்*
*வானரசனே போதும் நிறுத்திவிடு*
*உமது சோதனை எனி திறப்பதற்குத் துருசும் இல்லை*
*வான் பாய்வதற்கு இடமும் இல்லை.*

ச.மகிழ்ராசா,
கிளிநொச்சி.

*வாடியப்பயிர்கள் வதைந்தபோது வாயே திறக்கவில்லை*
*இப்போ வானத்து நீரை வயிறாற சாப்பிட்டு*
*ஏப்பம் விட்டு வைகை நதியே*
*உன் காலடியில் தவழ்கிறது தேவையற்று.*

வி.தயாபரன்,
உருத்திரபுரம்

*இரணைமடுக் குளத்தருகே எழுந்துநிற்கும்*
*வரலாறு படைத்த நினைவுத்தூபி*
*எத்தனையோ தூபிகளை இடித்தழித்த*
*எந்தர்களின் பார்வைக்கு எட்டாத தூபிஇது.*

க.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

*நிறைந்ததுவோ உன் சந்நிதியில் நீர்*
*நித்தமும் உனை நம்பி பயிரிடுவோர் எத்தனைபேர்*
*ஆசை கொண்டு நீ அணைத்திருக்கும் நீரினை*
*எமக்கு அவதியின்றி அனுப்பிவிடு தயவுடனே.*

கு.தமிழினி,
வற்றாப்பளை.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
கிளிநொச்சி. புதுக்குடியிருப்பு

# அந்தியேட்டி அழைப்பிதழ்

மகளாய் மகாவியாய் தாயாய் சோதரியாய் நண்பியாய் வழிகாட்டியாய் மண்ணகத்து வாழ்வாங்கு வாழ்ந்த எம் தெய்வத்தின் அந்தியேட்டி கிரியைகள் 29.12.2004 அன்று வல்வையிலுள்ள எமதில்லத்தில் நடைபெறும் அதில் கலந்து கொள்ளும்படி உற்றார் உறவினர் நண்பர்கள் அழைக்கிறோம்.

தோற்றம் 12.07.1961 — மறைவு 29.11.2004



திருமதி
**சந்திரா அற்புதலிங்கம்**

நெடியகாடு.
வலல்வெட்டித்துறை (5436) குடும்பத்தினர்.

---

வவுனியா மண்ணில் நவீன் செரமிக்கின் ஏகமுகவர்களாக புதிய உதயம்

# விக்னேஸ்வரா எண்டர் பிறைசஸ்

எங்களிடம் DENERAL HARDWARE, SANITARY WARE, Wall Tiles, Floor Tiles, Bathroom Fitting,pvc Door, தரைவிரிப்புகள் ரெக்சின் வகை அலுமினிய பார்கள் பிளைவூட் பலகை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள் விக்கினேஸ்வரா எண்டர்பிரைசஸ்.

நவீன் செரமிக் காட்சியறையில் விற்பனை செய்யப்படும் அனைத்து செரமிக் வகைகள் மற்றும் குளியலறை உபகரணங்கள் வவுனியா விக்கினேஸ்வரா எண்டர் பிரைசஸ் காட்சியறையில் பெற்றுக்கொள்ளலாம்.

அத்தோடு வவுனியா நகரில் நீங்கள் கொள்வனவு செய்யும் பொருட்களை உங்கள் இல்லங்களுக்கு இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு - 077-3134231

**விக்கினேஸ்வரா எண்டர் பிரைசஸ்**

இல: 68/2 2ஆம் குறுக்குத்தெரு, வவுனியா.

---

# பன்னாட்டுத் தொலைத் தொடர்பகம்
## International Telecommunication Centre

itc

- வெளிநாடுகளில் இருந்து பணத்தினை உடனுக்குடன் மாற்றிக் கொள்வதற்கும்.
- வெளிநாட்டு நாணயங்களை உடன் தகுந்த பெறுமதியில் மாற்றி கொள்ளவும்
- வெளிநாட்டு உள்நாட்டு தொலைபேசி அழைப்புக்கள் பெற்றுக் கொள்வதற்கு நாடவேண்டிய ஒரே இடம்

பன்னாட்டுத் தொலைத் தொடர்பகம்
மத்திய விளையாட்டு மைதானம் அருகாமை
யாழ் சாலை, கிளிநொச்சி

தொ.பேசி: 021 228 59 18 - 021 228 59 19

---

# EXPOAir — எக்ஸ்போ ஏயார்

*your friend in the skies...* — வானத்தில் உங்கள் நண்பன்...





**யாழ் - கொழும்பு**
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 2349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com

C-10120

---



உங்கள் இன்றைய தெரிவுக்கு...

# குமரகுரு
புடைவை
**அழகுப்பொருள் வாணிபம்**



இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள்
பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

**குமரகுரு** புடைவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ்சாலை, கிளிநொச்சி

**KUMARAKURU**
*Textile & Fancy House*
Yarl Road, Kilinochchi.
(சி-10937)

இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.